REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



பிரபஞ்ச அழகி 2008



## பாலமீன்மடுவிலும் ஒரு செம்மணி!



## புதுடில்லியுடன் பொருத தயாராகிறது கூட்டமைப்பு



## செல்போன்களுக்கும் இனி பிரேத பரிசோதனை!

# இலங்கை அரசின் இரட்டை முகங்கள்

இலங்கையில் பொருளாதார நிலை வீழ்ச்சி அடைந்து மக்கள் மீது பொருளாதாரப் பளுவைச் சுமத்திவிட்டு ஆட்சியைத் தக்கவைப்பதற்காக யுத்தத்தை



ஒரு துரும்புச்சீட்டாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் அரசுத் தலைமை-

ஒரு புறத்தில் யுத்தம் மூலம் பயங்கரவாதத்தை ஒழிப்போம் என்றும் மறுபுறத்தில் அமைதிப் பேச்சுக்கு அரசு தயார் என்றும் இரட்டை முகங்களை வெளிக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி புதிய ஆட்சியைப் பொறுப்பேற்ற இன்றைய அரசியல் தலைமை அன்று முதல் வெளியிட்டுக் கொண்டிருக்கும் கருத்துக்கள் அதன் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துகின்றன.

ஆட்சிக்கு வர முன்னர் பேரின வாதச் சக்திகளான ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய போன்றவற்றுடன் ஒப்பந்தங்கள் செய்து, இந்த நாடு பௌத்த நாடு என்பதை இந்தத் தலைமை பறைசாற்றியது.

'தமிழர் தாயகம் என ஒன்று இல்லை. இது பௌத்த சிங்கள நாடு. தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலின் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை வழங்குவோம். யுத்தம் மூலம் பயங்கரவாதத்தை ஒழிப்போம்' - என்ற தாரக மந்திரங்களை முன்வைத்து சிங்கள மக்களைக் கவர்ந்து ஆட்சியைப் பிடித்தது அரசுத் தலைமை.

ஆட்சிக்கு வந்த பின்னும் அதே கொள்கையையே கடைப்பிடிக்க - முன்னெடுக்க - அரசுத் தலைமை முயன்றது.

ஆனால் சர்வதேசத்தின் விருப்பத்துக்கு மாறாகச் செயற்பட முடியாத நிலையில், நோர்வேயை அனுசரணையாளர்களாக ஏற்று, தமிழர்களின் ஏகப்பிரதிநிகளாக - அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளாக - தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்று - சமாதானப் பேச்சுக்கு அரசுத் தலைமை சென்றது.

அதன் பயனாக ஜெனிவாவில் இருகட்டப் பேச்சுக்களை இந்த அரசுத் தலைமை அரங்கேற்றியது.

அந்தப்பேச்சுக்களில் முதல் கட்டத்தில் இரு தரப்புக்களும் பல விடயங்களில் இணக்கம் கண்டன.

✸ அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்தல்.

✸ வடக்கு- கிழக்கில் செயற்படும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து அவற்றை வெளியேற்றுதல்.

✸ விடுதலைப்புலிப் போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியாற்ற அனுமதித்தல். - இந்த இணக்கப்பாடுகளை நிறைவேற்ற அரச தரப்பில் இருந்து பல்வேறு நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டு, எந்த இணக்கப்பாடும் நடைமுறைக்கு வராத நிலையில், முகமாலையில் மோதல்கள் வெடித்தன.

தெற்கையும் வடக்கையும் இணைக்கும் ஏ -9 பாதை மூடப்பட்டது. குடாநாட்டு மக்கள் திறந்த வெளிச் சிறைக்குள் அடைக்கப்பட்டனர். அவர்களின் போக்குவரத்து சுதந்திரம் மறுக்கப்பட்டது. அவர்களின் உணவு விநியோகங்கள் முடக்கப்பட்டன.

அந்த விடயம் சர்வதேச மயமாக்கப்பட்டதன் எதிரொலியாக, சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக இரண்டாவது கட்டப்பேச்சுக்கள் ஜெனிவாவில் இடம் பெற்றன.

மக்களின் அவலங்களைப் போக்க உடன் ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டும் என விடுதலைப் புலிகள் அந்தப் பேச்சில் வலியுறுத்தினர்.

ஆனால் பல்வேறு நிபந்தனைகளை அரசு விதித்ததன் காரணமாக பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன. பேச்சுக்கான



கதவுகள் இறுகமூடப்பட்டன. அனுசரணையாளர்களான நோர்வே, இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை காட்சியில் இருந்து அகற்றப்பட்டன.

சமாதானப் பேச்சுக்களுக்கு, சமாதான முயற்சிகளுக்கு எல்லாம் சமாதிகட்டப்பட்டு, வன்செயல்கள் தீவிரமாகின.

தினமும் 6, 7 பேர் என சுட்டுக் கொல்லப்பட்டனர். கொத்துக் கொத்தாகத்

**யாழவன்**

தமிழர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளுக்குள் அடைக்கப்பட்டனர். வெள்ளைவான் கடத்தல்கள் மலிந்தன.

இந்நிலையில் கிழக்கு மீதான ஒரு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து, கிழக்கை மீட்டு தெற்கு குதூகலம் கொண்டாடப்பட்டது.

கிழக்கை மீட்டு 'ருசி' கண்ட படைகள் வடக்கையும் மீட்க அதன் வாசலில் வந்து நிற்கின்றன. வடக்கை மீட்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியான நிலையில் - வடக்கின் பெரும் பகுதியை பிடித்து விட்டோம். எஞ்சிய பகுதியையும் விரைவில் மீட்டு விடுவோம் என மார்தட்டிக் கொண்டு - யுத்தப் பிரகடனத்தைச் செய்துவிட்டு நிற்கிறது அரசுத்தலைமை.

பயங்கரவாதத்தில் இருந்து வடக்கை மீட்போம். பயங்கரவாதத்திடம் சிக்கியிருக்கும் மக்களை மீட்டு அவர்களுக்கு ஜனநாயக உரிமையை அனுபவிக்க அங்கும் தேர்தல் நடத்துவோம்.- இவைதான் தினமும் அரசுத்தரப்பில் இருந்து வரும் அறிவிப்புக்களாக இருக்கின்றன.

களமுனையில் இருந்து தினமும் வெளிவரும் இருதரப்பினரின் தகவல்களும் செய்திகளாகிக் கொண்டிருக்கின்றன. அதன் உண்மைத்தன்மையைப் பகுப்பாய்வு செய்ய முடியாத நிலையில் சர்வதேச செய்தி நிறுவனங்களும் உள்ளூர் செய்தி நிறுவனங்களும் அவற்றை அப்படியே செய்தியாக்கிக் கொண்டிருக்கின்றன.

இருதரப்புக்களில் இருந்துவரும் தகவல்களைச் சீர்தூக்கிப் பார்த்து ஆய்வாளர்கள் வெளியிடும் கருத்தை நோக்கும்போது, வடக்கு யுத்த முனையில் எவையும் பெரிதாகச் சாதிக்கப்படவில்லை என்றே ஊகிக்க முடிகிறது.

வடக்குப் போர் முனை திறக்கப்பட்டு ஓராண்டாகியும் அந்தப் படைகள்



வெற்றியை நோக்கிச் செல்வதாக இல்லை என்று சில ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

வடக்குப் போர் முனையின் வெற்றி தோல்வியைப் பற்றி வெளிப்படையாக அரசுத்தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகாத போதும், கொழும்பு ஊடகங்களின் கணிப்பின்படி யுத்தம் ஆரம்பமான இடத்திலேயே நிற்பதாகவே கருதவேண்டியுள்ளது.

வன்னியில் இடம்பெறும் மோதல்கள் குறித்து வன்னியில் பெரிதாக எவரும் அலட்டிக் கொள்வதாக இல்லை. மன்னாரில், மணலாறில் ஏதோ சண்டை நடக்கிறது என்றவாறே வன்னியின் கருத்து இருக்கிறது.

முன்னேறிவரும் படையினரை அடித்து விரட்டி பழைய இடத்துக்கு கொண்டு போய் விடுகிறோம். அவ்வளவுதான் என்கிறார்கள் வன்னித் தளபதிகள்.

வன்னிக் கள முனையில் வெற்றி மேல் வெற்றி கிட்டுவதாக அரசுத் தரப்புத் தகவல்கள் வெளியாகின்றன. ஆனால் அங்கு பெரிதாகப் படைகள் சாதிக்கவில்லை, அவர்களை ஒரு வருடமாக ஒரு பகுதிக்குள் முடக்கி வைத்துள்ளோம் என விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்.

கள முனை பற்றி முரண்பாடான தகவல்கள் வந்து கொண்டிருக்க, வன்னியில் போர் பிரகடனம் செய்து, தனது ஆட்சியை இழுத்துக் கொண்டு போக ஒரு முகத்தைக்



காட்டி நிற்கிறது அரசுத் தலைமை.

மறுமுனையில், தான் பேச்சில் ஆர்வமாக இருப்பதாக மறுமுகத்தை சர்வதேசத்துக்குக் காட்ட முனைந்து நிற்கிறது அரசுத் தலைமை.

கடந்த மாத நடுப்பகுதியில் லண்டன் சென்றிருந்த வேளை இந்தியாவில் இருந்து வெளியாகும் 'த ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்-

"விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு பேச்சுக்கு வரவேண்டும்" என்று அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மீண்டும் கடந்த வாரம் - அதாவது ஜூலை 12, 13 ஆம் - திகதிகளில் இந்தியாவில் சமய யாத்திரை சென்றபோது, பத்திரிகையாளர்களிடம் அதே கருத்தை வெளியிட்டுள்ளார் அவர்.

ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, தீர்வைக் காண்போம் என்று இந்தியா கொடுத்த அழுத்தத்துக்கு அடிபணிந்து, விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கை வந்த இந்திய அமைதி காக்கும் படையிடம் ஆயுதங்களை ஒப்படைத்தது.

ஆயுத ஒப்படைப்பின் பின்னர் நிராயுத

(27 ஆம் பக்கம் பார்க்க)

# செல்போன்களுக்கும் இனி பிரேத பரிசோதனை!

தென்னையில் தேள் கொட்டினால் பனை மரத்தில் 'நெறி' ஏற்படுவதென்பது உண்மைதானென இலங்கை அரசின் சமீபத்திய செயற்பாடுகள் நிரூபணம் செய்து வருகின்றன. அந்த வகையிலேயே கையடக்கத் தொலைபேசிகள் பற்றிய இலங்கைத் தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் அதிரடி அறிவிப்பும் வெளியாகியுள்ளது. இனிமேல் கைத்தொலைபேசியை ஒருவர் பயன்படுத்தவேண்டுமாயின் அதில் பயன்படுத்தப்படுகின்ற 'சிம்' காட்டுக்கு தகுந்த அனுமதி பெற்றிருக்கவேண்டும். சோதனைச்சாவடிகளில் அக்குவேறு ஆணிவேறாக மக்களைப் பரிசோதிப்பதைப்போல, இனிமேல் படையினரால் கைபடக்கத் தொலைபேசிகளும் நோண்டி நொங்கெடுக்கப்படப்போகின்றன. ஏறக்குறைய செல்போன்களுக்கு அவ்வப்போது பிரேதபரிசோதனை நடைபெறப்போகின்றது.

இந்த நடைமுறை உடனடியாகவே நாடெங்கிலும் அமுலுக்கு வருவதாக தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நாட்டின் குறிப்பிட்ட சிலபகுதிகளில் மட்டுமே உணரப்பட்டுவந்த போரின் வெம்மை, செல்லிடத்தொலைபேசிக் கட்டுப்பாடுகளினால் எல்லா இடங்களிலும் பரவப்போகின்றது. 'இனிவரும் காலங்களில் தமிழர் தாயகப் பகுதிகள் மட்டுமல்லாது இலங்கைத் தீவின் சகல பகுதிகளும் போரின் வலியை உணரவேண்டியிருக்கும்' என விடுதலைப் புலிகள் அடிக்கடி சொல்லிவருவதை என்ன விலை கொடுத்தேனும் நிறைவேற்றியே தீரவேண்டுமென்ற அரசின் 'நல்லெண்ணப் போக்காகவே' செல்லிடப் பேசிகள் மீதான கட்டுப்பாடுகளை நோக்கவேண்டியுள்ளது.

இலங்கைச் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் கைத்தொலைபேசிப் பாவனையாளர்களாக இருக்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒருகோடி இருபது லட்சத்துக்கும் அதிகமெனத் தெரிகின்றது. இவர்கள் தமது அத்தியாவசிய அலுவல்களிலிருந்து அட்டையடித்தல், அந்தரங்கமான விடயங்களுக்கு அடிகோலுதல் என்பவற்றுக்கும் செல்போன்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

தொலைபேசிப் பாவனையாளர்களை நம்பி உள்நாட்டு, வெளிநாட்டுத் தொடர்பாடல் நிறுவனங்கள் பெரும் முதலீட்டில் தமது பரிவர்த்தனைக் கோபுரங்களை நாட்டின் பல பாகங்களிலும் நிறுவி, உயர்தர சேவையை வழங்க முயன்றுவருகின்றன. அத்தோடு தமமுடைய நிறுவன வளர்ச்சிக்காக அதிகளவான நுகர்வோரை 'வளைத்துப் போடுவதற்காக' பலவிதமான - தாராளமயப்பட்ட - சலுகைகளை வழங்குகின்றன. அவற்றிலொன்றுதான் எல்லோருக்கும், எங்கேயும் கிடைக்கும் 'சிம்' காட், சிம்காட்டை குறித்த நிறுவன அலுவலகங்களில் மட்டுமல்லாது, சாதாரண



பெட்டிக்கடைகளில கூட - பாண் வாங்குவதைப் போல - வாங்கிக்கொள் முடிந்தது. அவற்றின் விலையும்

ஒப்பீட்டளவில் குறைவானதாகவே இருந்தது.

'சிம் காட்டுகள் விலைகுறைவாக இருப்பினும் அவற்றைப் பயன்படுத்தும்போது சேவைக்கட்டணங்கள் மூலம் சாகசட்டும் கைங்கரியத்தையும் செல்லிடத் தொலைபேசி நிறுவனங்கள் செய்யத் தவறுவதேயில்லை.

இதனால் திடீர் தோசை மா போன்று திடீர் 'சிம்' காட்டுகளும் முளைக்கத் தொடங்கின. ஒவ்வொரு தேவைக்கும் உடனடியாகவே ஒவ்வொரு 'சிம்' காட்டை வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையும் ஏற்பட்டது. இது ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட 'சிம்'காட்டுகளை வைத்திருக்குமளவுக்கு - பட்டினிச் சாவுகள் பெருகும் சூழலிலும் - இலங்கையின் வாழக்கைத்தரத்தை(?) உயரச்செய்தது.



'எங்களிடம் 5 மில்லியன் வாடிக்கையாளர்கள்!' '7 மில்லியன இணைப்புகளைத் தருவதே எமது இலக்கு!' - இப்படி இலங்கை இராணுவத்தரப்பு வெளியிடுகின்ற களநிலை அறிக்கைகளை ஒத்ததான விளம்பரப்படுத்தல்களை செல்லிடத் தொலைபேசி நிறுவனங்கள் மேற்கொள்ளவும் முடிந்தது. இவ்வாறு ஓங்கிப் பெருப்பதற்காக அந்நிறுவனங்கள் செய்த முயற்சிகளே

திருப்திப்பட்டுக் கொண்டது. அம்முயற்சியில் வெற்றி கிடைத்ததா என்பது விவாதத்திற்குரியது.

ஆனால், தமிழ்ப் பிரதேசங்களில் செய்ததைப் போன்று கொழும்பிலும், சிங்கள மக்கள் வாழ்கின்ற ஏனைய பகுதிகளிலும் படையிருக்கு நெருக்கடியான நேரங்களில் - புலிகள் தாக்குதலை நடத்துகையில் - கைத் தொலைபேசிப் பரிவர்த்தனத்தை இயக்க மற்றதாக்குவது சாத்தியப்படாதது. அப்படிச்செய்தால் இலங்கைத்தீவின் ஆதாரமே ஆட்டங்கண்டுவிடும். அந்தளவிற்கு இலங்கையும் இனப்பிரச்சினையும் போல - இலங்கை மக்களின் வாழ்க்கையும் கைத் தொலைபேசிப் பாவனையும் - பின்னிப் பிணைந்துள்ள என, தலைநகரில் பரிவர்த்தனைக் கோபுரங்களின் செயற்பாட்டை நிறுத்தினால்

அத்தியாவசிய பணிகள் முடங்கிப் போய்விடுவதோடு, பொருளாதார ரீதியாகப் பின்னடைவுகளையும் சந்திக்க வேண்டியிருக்கும். கூடவே மக்களின் ஒட்டுமொத்தக் கோபப் பார்வையின் உக்கிரம் காரணமாக ஆட்சிக்கட்டிலின் ஓரங்கள் கருதியும் போய்விடலாம்.

இத்தகைய முரண்நிலைகளைக் கணக்கிலெடுத்துத்

நடவடிக்கைகளைத் தடுத்துவிடலாம் அல்லது சுலபமாக இனங்காணும் நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என அரசுத்தரப்புக் கணக்குப்போடுகின்றது.

எனினும், இத்தகைய நடவடிக்கைகள் பொதுமக்களின் முதுகின் மீது அநாவசியமான இடையூறுகள், குந்திக் கொள்வதற்கே இடமளிக்கின்றன.

ஒரே செல்போனையே ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் மாறி, மாறிப் பயன்படுத்துவதுண்டு. ஆனால், இனிமேல் அவ்வாறு செய்ய முடியாது. ஒருவரது பதிவிலுள்ள 'சிம்' காட்டை இன்னொருவர் பயன்படுத்த முடியாது என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதால், அண்ணனுடைய செல்போனைத் தம்பியோ, தங்கையோ பயன்படுத்தினால், அவர்கள் கைது செய்யப்பட்டுவிடக்கூடிய அவலம் நேர்ந்து விடலாம். இதுதவிர, ஏற்கனவே ஒருவர் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 'சிம்' காட்டை தற்போது வேறொருவர் பயன்படுத்துவாராயின் அவரது பதிவும் புதுப்பிக்கப்பட்டாக வேண்டும். ஒருவேளை குறிப்பிட்ட 'சிம்' காட் வேறோரு மாவட்டத்திலோ - திருகோணமலை, வவுனியா, கொழும்பு போன்ற இடங்களிலோ - வாங்கப்பட்டிருந்தால், அதனுடைய பதிவைப் புதுப்பிப்பதற்கு அந்த இடங்களுக்கே செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால் இப்படி உரிமை மாற்றம் செய்வது 'சுண்டங்காய் காற்பணம்; சுமைக்கூலி முக்காற்பணமாகவும், இருக்கப் போகின்றது.

அத்தோடு இந்தப் பதிவு விடயத்தில் இதுவரை பரிவர்த்தனை செய்யும் தொலைபேசி நிறுவனங்களுக்கு என்னென்ன நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்ற அறிவுறுத்தல்களும் வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் 'சீத்துவத்தில்' கைத்தொலைப் பேசிகளின் பாவனை இறுக்க நடைமுறை உடனடியாகவே அமுலுக்கு வருவதாக அரசு முரசறைந்துள்ளது.

செல்லிடத் தொலைப்பேசிப் பாவனைக்கு கட்டுப்பாடு விதித்து, அதனை பயன்படுத்துவோர் தொடர்பான தரவுகளை ஒழுங்காகப் பேணினால் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கட்டுப்படுத்தி விடலாம் என்ற கருத்தின் நிலை கேள்விக்குரியதும், கேலிக்குரியது மாகும். கைத் தொலைப் பேசிகளின் பாவனை முக்கியத்துவம் பெறுவதற்கு முந்திய காலப்பகுதிகளிலேயே இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் தமது செயற்பாடுகளைப் புலிகள் பலமாகவே பேணிவந்துள்ளனர். பல வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தியுமுள்ளனர். அதனைவிட போலிப்பெயர்களில் 'சிம்' காட்டுக்களை வாங்கிப் பயன்படுத்திவிட்டு, தமது தேவை முடிந்ததும் அதனை எறிந்து விடுவதிலும் அவர்களுக்குக் கஷ்டமிருக்கப் பாவதில்லை. செல்லிடப் பேசிக்கான மாற்றுவழிகளைப் புலிகள் தேர்ந் தெடுக்கக்கூடும். தற்போது அவர்களிடையே புழக்கத்திலுள்ள 'செய்மதித் தொலை பேசிகளை' அதிகளவில் பயன்படுத்தும் சாத்தியமுமுண்டு. எனவே இக்கட்டுப் பாடுகள் கஷ்டப்படுத்தப்போவது

அவற்றுக்கு ஆப்பாக வந்து விழுந்திருக்கின்றது.

இலகுவாக 'சிம்'மைப் பெற்றுக்கொள்ளும் வசதியைப் புலிகள் நன்றாகவே பயன்படுத்திக்கொண்டனர் எனப் படைத்தரப்புக் கருதுகின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமக்கிடையயான தொடர்புகளைப் பேணல், இராணுவ நகர்வுகளைப் பற்றிய செய்திகளைப் பரிமாறுதல், தாக்குதலுக்கான கட்டளைகள், நெறிப்படுத்தல்களை மேற்கொள்ளல், செல்போன் அதிர்வலைகளைப் பயன்படுத்தி குண்டுகளை வெடிக்கச் செய்தல், செல்போனிலுள்ள 'வீடியோ' போன்ற உயர் தொழில் நுட்ப உதவியினூடாக இராணுவ நிலைகள் பற்றிய தரவுகளைப் பதிவு பண்ணுதல் என விஸ்தாரமான பயன்பாடுகளை செல்லிடப் பேசி களினூடாகப் புலிகள் பெற்றுவந்தனர் எனக் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே யாழ்குடாநாடு, திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களில் போர் நடவடிக்கைகள் முனைப்போடு முன்னெடுக்கப்படுகின்ற போதெல்லாம் கையடக்கத் தொலைபேசிப் பரிவர்த்தனை செயலிழக்கச் செய்யப்பட்டது. இதனூடாகச் செல்போன்கள் மூலம் புலிகள் பெற்றுவருகின்ற இராணுவரீதியான நன்மைகளை இல்லாமற் செய்வதாகப் படைத்தரப்பு

தலைநகரிலும், புலிகளின் தாக்குதல் அச்சமுள்ள சிங்களப் பகுதிகளிலும் செல்லிடப்பேசிப் பரிவர்த்தனத்தை முடக்கமுடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டது. எனவே, புலிகள் தமது வலைப்பின்னலை தங்குதடையின்றிச் செல்போன்கள் மூலம் பேணமுடிந்தது. செல்போன் பரிவர்த்தனை விடயத்தில் 'கைவிடப்பட்ட நோயாளியாய்' மாறிப்போன அரசு இயந்திரம், பலவித ஆராய்ச்சிகளின் பின் ஒரு மாற்றுமருந்தை - நிவாரணியை - கண்டறிந்துள்ளது. வாகனங்களுக்கு எவ்வாறு உரிமப்பத்திரம் பெறவேண்டுமோ அதேபோன்ற உரிமப்பத்திர அனுமதியை, செல்போன்களின் 'சிம்'காட்டுகளுக்கும் பொதுமக்கள் பெறவேண்டுமென்பதே அம்மருந்து.

தொலைத்தொடர்புக் கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் 'அவசரமான' அறிவிப்பின்படி பின்வரும் விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

* தொலைபேசி நிறுவனங்கள் பாவனையாளர்களின் முழுவிவரங் களையும் கவனமாகப் பேணிவர வேண்டும்.

* நுகர்வோர் கொடுத்துள்ள தகவல்கள் சரியானவை என உறுதிப் படுத்தப்பட்ட பின்னரே 'சிம்'காட்டை வழங்கவேண்டும்.

* செல்போன் பாவனையாளர்கள் தமக்கு வழங்கப்பட்ட உரிமைப்பத் திரத்தை எப்போதும் தம்முடனேயே வைத்திருக்கவேண்டும்.

* உரிமைப் பத்திரங்களையும் 'சிம்'காட்டையும், படையினரோ பொலிஸாரோ பரிசோதிக்கும்போது அவர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

* யாருடைய பெயரில் 'சிம்' பதிவு செய்யப்பட்டுள்ளதோ அவரைத் தவிர, வேறெவரும் அதனைப் பயன் படுத்தமுடியாது.

இப்படியான நடைமுறை இறுக்கங்கள் மூலம் செல்லிடப்பேசி மூலமான 'பயங்கரவாத'

**பிரமன்**

மக்களையேயொழிய, புலிகளையல்ல என்பது புலனாகின்றது.

வேடிக்கை என்னவென்றால் நவீன தொழிநுட்ப வசதியுடன் இராணுவரீதியில் உயர்வலுக் கொண்டதாக விளங்கும் 'உலகரட்சகன்' அமெரிக்காவால் ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசேனையும், அவரது மகன்களையும் 'செல்பேன்' என்ற பொறி மூலமே அவர்களின் இருப்பிடத்தை அறிந்து அவர்களைப் பிடிக்க முடிந்தது. பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் தன்னுடைய வேட்டைப் பற்களில் ஒன்றாக செல்போன் தொழில் நுட்பத்தையே அமெரிக்கா பயன்படுத் துகின்றது. இலங்கை அரசோ செல்போன் பாவனையை பொத்திவைக்க முனைகின்றது. இதுதான் நமக்கும் மேலைதேசத்தவர்களுக்கு மிடையேயான பயன்பாட்டு வேற்றுமை நிலை. அவர்கள் முந்தநாளே முழுநிலவில் ஏறிநின்று குழுக்கமிட, நாம் இன்னமும் மண்ணிலேயே புரண்டு கொண்டிருப்பது இதனால்தானோ...? *

# கொமாண்டோ தாக்குதல்களில் இராணுவம் வெற்றி பெறுமா?

வடபோர்முனையில் பாரிய வெற்றிகளைப் பெறலாம் என்ற 'ரத்வத்த கால' கனவுகளுடன் வன்னிக்குள் கால்பதித்த இராணுவத்தினருக்கு, தமது கனவுகள் இரவுகளைவிட நீண்டவை என்ற உண்மை இப்போதுதான் விளங்க ஆரம்பித்திருக்கிறது.

நீளக்கயிற்றில் கால்நடைகளை மேய விடுவது போல இராணுவத்தை வன்னிக்குள் ஆழக்கால் பதிக்க அனுமதித்துவிட்டு இப்போதுதான் புலிகள் தமது வேலையை படிப்படியாக ஆரம்பித்துள்ளார்கள்.

மன்னாரில் இதுவரை தாம் காட்டிய முன்னேற்ற வேகத்தை இனிக்காண்பிக்க முடியாது என்ற உண்மையைக் களத்தில் ஏற்படும் இழப்புகள் இராணுவத்துக்கு தினம் தினம் இடித்துரைத்துக்கொண்டேயிருக்கின்றன.

மிதி வெடிகளாலும் பொறிவெடிகளாலும் காயப்படும் படையினரின் எண்ணிக்கையை பார்க்கும்போது அது, பலியை விடக் காயம்தான் பெரிய பிரச்சினை என்ற காலம் கடந்த ஞான நிலையை இராணுவத்துக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

ஆகவே, ஆட்களின் இழப்பைக் குறைத்து எதிரிக்கு இழப்பை அதிகரிக்கும் வகையில் புதிய புதிய திட்டங்களை களத்தில் நடைமுறைப்படுத்த இராணுவம் பெரிய முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

ஆழ ஊடுருவும் அணிக்கு ஆள்பிடிக்கும் வேலை ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்க, தமது கொமாண்டோ வகைத் தாக்குதல் எனும் 'காயமடைந்த' திட்டத்தையும் மீளத் தூசி தட்டியெடுக்கும் முயற்சியில் இராணுவம் இறங்கியுள்ளது.



அண்மையில் விடத்தல்தீவை நோக்கி இராணுவம் அனுப்பிய தனது தாக்குதல் பிரிவை கொமாண்டோ அணி என்று சிங்கள ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கிறது. சிறு அணிகளாக ஊடுருவிச்சென்று அவை மேற்கொண்ட தாக்குதல் முயற்சிகள் புலிகள் கொடுத்த பதிலடியால், பலியானவரின் உடலத்தையும் விட்டுவிட்டுத் தப்பியோடும் நிலைக்குப் பின்னடைவு கண்டுள்ளன.

சிறீலங்கா இராணுவத்தினாலும் இந்திய இராணுவத்தினாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கொமாண்டோ வகைத் தாக்குதல் என்பது படுகாயமடைந்த ஒரு திட்டம்.

இப்படியான தாக்குதல்களுக்குப் புலிகள் கொடுத்த பதிலடிகளைப் பார்த்தால் நேற்று விடத்தல்தீவில் நடைபெற்றமை ஒரு சிறு துரும்புச் சம்பவம் என்றே கூறலாம். அவ்வளவுக்கு, மிகப்பெரிய கொமாண்டோ முறியடிப்பு தாக்குதல்களையெல்லாம் களத்தில் கனகச்சிதமாக நிறைவேற்றியமைதான் புலிகளின் கடந்த கால வரலாறு.

புலிகளுக்கு எதிராக முதன் முதலில் மேற்கொள்ளப்பட்ட கொமாண்டோ தாக்குதல் என்றால் 1985 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் சுதுமலையில் தளபதி கிட்டு அவர்களின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட முயற்சியைக் குறிப்பிடலாம்.

சுதுமலையில் தளபதி கிட்டு முகாமிட்டிருந்த வீட்டுக்கு அண்மையாக திடீரென தரையிறங்கிய சிறீலங்கா இராணுவத்தின் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் அவற்றிலிருந்த தமது விசேட கொமாண்டோப் படையினரை இறக்கிவிட்டுப் பறந்துவிட்டது. இவர்கள் இஸ்ரேலின் புலனாய்வுப்பிரிவான மொஸாட்டிடம் பயிற்சி பெற்ற சிறப்பு அணியினர்.

தரையிறங்கிய கொமாண்டோக்கள் தளபதி கிட்டுவின் முகாம் மீது சரமாரியான தாக்குதலை நடத்தியவாறே முன்னேறி வந்தனர். உடனடியாக, அருகிலிருந்த முகாம் வீரர்களையும் இணைத்துக்கொண்டு தளபதி கிட்டு மேற்கொண்ட பதிலடித் தாக்குதல் தரை இறங்கிய கொமாண்டோக்களுக்கு அகோர அடியாகிவிட்டது. அப்போது, முகாமில் பெரிய ஆயுதங்கள்கூட இருக்கவில்லை. இருந்த ஆயுதங்களை வைத்து, நேர்த்தியாக மேற்கொள்ளப்பட்ட முறியடிப்பு தாக்குதல் சிறீலங்கா இராணுவத்தின் கொமாண்டோ பிரிவு புலிகளிடம் வாங்கிய முதலாவது நெத்தியடி என்று கூறலாம்.

அதன்பின்னர், புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொமாண்டோ தாக்குதல் என்றால், இந்திய இராணுவத்தினர் மேற்கொண்டதை குறிப்பிடலாம்.

இந்திய அமைதிப்படை சிறீலங்காவில் கால்பதித்திருந்த காலப்பகுதியில் 1987 இல் - யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பிடிப்பதற்கென இந்திய இராணுவம் பெருமெடுப்பிலான தரையிறக்கம் ஒன்றை மேற்கொண்டு கொமாண்டோ தாக்குதல் நடத்தியது. அப்போது, தலைவருடன், பொட்டு அம்மான், பால்ராஜ் முதல் பல முக்கிய தளபதிகள் கூடவிருந்தனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மைதானத்தில் தரையிறங்கிய தமது கொமாண்டோ அணிகளைப் புலிகளின் தலைவர் இருந்த இடத்தை நோக்கி நகர்த்தி அவரைப் பிடிப்பதற்கு அப்போது அங்கிருந்த இந்தியப்படைத் தளபதிகள் பெரும் பாடுபட்டனர்.

அந்த கொமாண்டோ அணிக்கு எதிரான முறியடிப்பு தாக்குதலை தலைவர் பிரபாகரன் நேரடியாக நின்று நெறிப்படுத்தினார்.
ஆனால், அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, அவரை வலுக்கட்டாயமாக இழுத்து வாகனத்தில் ஏற்றி அனுப்பிய தளபதி பாண்டியன் அணியினர் (இவரது ஞாபகார்த்தமாக புலிகள் ஆரம்பித்த படையணிதான் இம்ரான் - பாண்டியன்) இந்திய இராணுவத்தின் கொமாண்டோ தாக்குதலை முறியடித்தனர்.

முன்னர், இஸ்ரேலில் பயிற்சி பெற்றவர்களை சமாளித்த புலிகள் பின்னர் இந்தியப்படையினரை நேரடியாக சந்திக்குமளவுக்கு முறியடிப்பு தாக்குதலில் அப்போதே தேர்ச்சி பெற்றிருந்தனர்.

கெரில்லா தாக்குதல் முறையில் புலிகள் அப்போது அடைந்திருந்த அபார வளர்ச்சிக்கு இந்த முறியடிப்பு தாக்குதல்கள் மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

வெளிநாடுகளில் சென்று சிறப்பு பயிற்சி பெற்ற கொமாண்டோ அணியினர் புலிகளிடம் வகையாக வாங்கிய இன்னொரு சம்பவமாக மணலாற்றுக்காட்டு பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் முறியடிப்பையும் குறிப்பிடலாம்.

தொண்ணூறுகளில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த பிரேமதாசா அரசு, அக்காலப்பகுதியில் கேணல் ஹெட்டியாராச்சி என்ற தளபதியின் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவத்தினரை அமெரிக்காவுக்கு அனுப்பி கொமாண்டோ பயிற்சி வழங்கியது.

காட்டுச் சண்டைக்கென Jungle Warfare எனப்படுகின்ற பிரத்தியேக பயிற்சிகளையெல்லாம் பயின்று முடித்து சிறீலங்கா திரும்பிய இந்தக் கொமாண்டோ படையினர் தமது வீரத்தைக் காண்பிக்க களம் தேடிக்கொண்டிருந்தனர். அப்படி அலைந்து திரிந்த படையினருக்குத் தக்க தருணம் கிடைத்தது.

1991 இல் ஆனையிறவுப் படைத்தளம் மீது புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர். இந்தத் தாக்குதலுக்கான விநியோகம் மணலாற்று காட்டுப்பகுதியிலிருந்தே செல்வதாக கருதிய இராணுவம், மணலாறு காட்டுக்குள் அமைந்திருந்த புலிகளின் தளங்களின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்குடன், அமெரிக்க பயிற்சி பெற்ற தனது கொமாண்டோ பிரிவைக் களத்தில் இறக்கியது.

மணலாற்று காட்டுக்குள் புகுந்த சிறப்பு கொமாண்டோப் படையினர் பெரும் தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளும் விடுவதாக இல்லை. அகோரமான பதிலடி கொடுத்தார்கள். பின்வாங்க மனமில்லாத கொமாண்டோப் படையினர், அடுத்தடுத்து மூன்று நடவடிக்கைகளை மேற்கொண்டு வெவ்வேறு இடங்களுக்குள்ளால் புகுந்து தாக்குதல்களை நடத்தினர். அனைத்துமே படுதோல்வி.

புலிகளின் தாக்குதலால் கொமாண்டோ படையின் தளபதி கேணல் ஹெட்டியாராச்சிக்கு ஒரு கண் பறந்தது.

இந்த கொமாண்டோ முறியடிப்பு தாக்குதல்களுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் புலிகளின் மகளிர் நடத்திய மன்னகுளம் சமர்தான் சிறீலங்கா கொமாண்டோ படையணிக்கு விழுந்த மரண அடி எனலாம்.

'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின்போது புளியங்குளத்தை கைப்பற்றுவதற்கு இராணுவம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. சுமார் மூன்று மாதங்களுக்கு மேலாக தனது முயற்சியில் வெற்றிபெறாத இராணுவம், ஏ - 9 பாதையை சுற்றிக் கொண்டு காடுகளுக்குள்ளால் ஊடுருவிச் சென்று கனகராயன்குளத்தை கைப்பற்ற முயன்றது.

அப்போதுதான், பெண்புலிகளின் பெயர் சொல்லும் மன்னகுளம் சமர் இடம்பெற்றது.

கனகராயன்குளத்தை கைப்பற்றவென அமெரிக்க 'கிரீன் பரேட்' பயிற்சி பெற்ற சுமார் 300 கொமாண்டோக்கள் களமிறக்கப்பட்டனர்.

அமெரிக்காவின் 'கிரீன் பரேட்' கொமாண்டோக்களில் ஒருபிரிவினர் தமது கற்கைநெறியின் ஓர் அங்கமாக இந்தத் தாக்குதலைக் களத்தில் நின்று பார்ப்பதற்காக வன்னிக்கே வந்திருந்தனர். அவர்கள் அங்கு பயன்படுத்திய நடமாடும் ஏ.சி.வண்டி ஒன்று புலிகளால் பின்னர் மீட்கப்பட்டது.

அவர்களுடன் வந்திருந்த சில அமெரிக்க உயர் இராணுவ அதிகாரிகள் ஸ்ரீலங்கா கொமாண்டோ படையினருக்கு யால காட்டுப்பகுதியில் மேலதிக பயிற்சிகளையும் வழங்கியிருந்தனர்.

(இந்த 'கிரீன் பரேட்' அணிக்கு பயிற்சி வழங்கவென கொழும்புவந்த அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகள் தங்கியிருந்த கலதாரி ஹோட்டலின் மீது அப்போது தற்கொலைத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது)

இவ்வாறு பெருமெடுப்பில் வன்னிக்குள் வந்திறங்கிய ஸ்ரீலங்கா கொமாண்டோ படையினர், ஒரு நாள் காலை மன்னகுளம் பகுதியிலிருந்த புலிகளின் முன்னரங்குகளை ஊடறுத்துத் தாக்குதலை நடத்த முயன்றனர். அப்போதுதான் பிடித்தது போர் அகோரம். இம்மியும் பின்வாங்காத பெண்புலிகள், சிறப்பு கொமாண்டோ படையினர் மீது அகோர தாக்குதல் நடத்தினர். காலையில் ஆரம்பித்த தாக்குதல் மதியமே முடிவுக்கு வந்துவிட்டது. பெரும் இழப்புகளுடன் சடலங்களையும் கைவிட்டுவிட்டு பின்வாங்கி ஓடினர் கொமாண்டோக்கள்.

இந்தச் சமரில், முன்னணி அரணில் நின்று மூன்று முனையிலான் தாக்குதலையும் தலைமைதாங்கி நெறிப்படுத்தி வெற்றிக்கு வழிவகுத்த பெண் போராளி நீலாம்பரி அந்தச் சண்டையின் நாயகி எனக்கூறலாம்.

கொமாண்டோக்களின் சுமார் 110 சடலங்கள் பின்னர் செஞ்சிலுவை சங்கத்தினூடாக இராணுவத்திடம் கையளிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் சிறிலங்கா இராணுவக் கொமாண்டோ வரலாற்றில் அழிக்க முடியாத வடு.

இப்படியாக பல கொமாண்டோ தாக்குதல் முறியடிப்புகளை புலிகள் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர்.

பூனைத்தொடுவாயில் கடற்புலிகளின் ராடர் தளத்தை அழிக்கவென பல நூற்றுக்கணக்கில் கடல்வழியாக வந்திறங்கிய கொமாண்டோக்கள் புலிகளின் பதிலடியால் தரைவழியாக வெற்றிலைக்கேணிக்குத் தப்பியோடிச் சென்ற சம்பவம், இராணுவப் புலனாய்வு உறுப்பினர் ஒருவரை மீட்பதற்கென சிலாவத்துறையில் ஸ்ரீலங்கா படையினர் மேற்கொண்ட பெருமெடுப்பிலான கொமாண்டோத் தாக்குதல் எனப் பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

மொத்தத்தில் படையினரின் எந்தப் பருப்பும் இதுவரை வேகவில்லை என்பதுதான் களம் அறிந்த உண்மை.

இப்படியான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொமாண்டோ முறியடிப்பு தாக்குதல்களை நடத்திய புலிகளுக்கு

**ஆஸ்திரேலியாவிலிருந்து**
**தெய்வீகன்**

எதிராகத் தற்போதைய இராணுவம் தானும் தன்பங்குக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற ஆசையில் மன்னாரிலும் மணலாற்றிலும் கொமாண்டோ வகைத் தாக்குதல்களை நடத்தி அழகுபார்க்க முயற்சிக்கிறது.

ஆளணி இழப்பைக் குறைத்து எதிரிக்கு இழப்புகளை அதிகம் ஏற்படுத்தும் வகையில் கொமாண்டோ வகைத் தாக்குதல்களை முயற்சிப்பது பாராட்டப்படவேண்டிய விடயம்தான்.

ஆனால், 21 கொமாண்டோக்களை அநுராதபுரம் விமானப்படைத்தளத்துக்குள் அனுப்பி அங்கு நின்ற சகல சகடைகளையும் சங்காரம் செய்யுமளவுக்குத் தேர்ச்சிபெற்ற கொமாண்டோ அணியைக் கொண்டுள்ள புலிகளுடன் ஸ்ரீலங்கா இராணுவம் தனது திறமையை உரசிப் பார்ப்பதுதான் வியப்புக்குரிய விடயம்.

# ரதத்தில் சேர். பொன். இராமநாதனை இருத்தி அதனை இழுத்துச் சென்ற சிங்களத் தலைவர்கள்

**சுமார் ஐம்பத்தியெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் 1950 இல் தமிழகத்தின் எழுத்தாளர் ஜாம்பவான் 'கல்கி' இலங்கைக்கு விஜயம் செய்தார். தமது இலங்கை விஜய அனுபவத்தைத் தமது 'கல்கி' சஞ்சிகையில் 'இலங்கையில் ஒரு வாரம்' என்ற தலைப்பில் தொடராக அவர் வரைந்தார். அன்றைய இலங்கை அரசியல் நிலைமை வெளியாளான அவருக்கு எவ்வாறு பட்டது என்பதை இன்று ஒருதடவை மீட்டுப் பார்ப்பது பொருத்தமானது என்று கருதியதால் அதனை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம். இது ஒரு தொடர் கட்டுரையின் இடைநடுவில் இருந்து எடுக்கப்பட்டது என்பதால் வாசகர்களுக்குச் சிறிது குழப்பம் இருக்கலாம். அவ்விடயத்தை உள்வாங்கிக் கொண்டு இதனைப் படிக்க ஆரம்பியுங்கள்!**

"அங்கே ஒன்றும் இங்கே ஒன்றும் சொல்லும் வழக்கமில்லை என்றீரே? சென்ற இதழில் 'ஏழரை இலட்சம்' 'தமிழரைப் பற்றிச் சொல்லியிருந்தீர்? 'இதந்த இதழில் 'பதினைந்து லட்சம்' தமிழர் என்கிறீரே! ஏழு நாளைக்குள் ஏழரை லட்சம் தமிழர்கள் அதிகமானது எப்படி?'' என்று நேயர்கள் சிலர் கேட்கக் கூடும்.

என் அன்பார்ந்த நேயர்களே! கட்டாயம் நீங்கள் அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டியதுதான். நான் பதில் சொல்லக் கடமைப்பட்டவன். சென்ற இதழில் நான் கூறியதும் உண்மை; இந்த இதழில் நான் மேலே கூறியிருப்பதும் உண்மை. சென்ற இதழில் குறிப்பிட்ட ஏழரை லட்சம் தமிழர்கள் கடந்த நூறு ஆண்டுக்குள் தோட்டத் தொழிலாளிகளாகவும் வீட்டு வேலைக்காரர்களாகவும் சில்லறை வர்த்தகர்களாகவும் சென்று இலங்கையில் குடியேறியவர்கள். இந்த ஏழரை லட்சம் தமிழர்களின் பிரஜா உரிமைகளைப் பறித்து அவர்களை விரட்டியடித்துவிடத்தான் கருணை மிகுந்த சிங்கள மந்திரிகள் முயன்று வருகிறார்கள்.

இலங்கையில் இன்னொரு ஏழரை இலட்சம் தமிழர்களோ பழைய புராதன பூர்வீக இலங்கைக் குடிகள். அவர்கள் இலங்கையில் எப்போது வந்து குடியேறினார்கள் என்பதை வரையறுத்துக் கூற இயலவில்லை. குறைந்தபட்சம் இரண்டாயிரம் வருஷங்களாக இந்தப் பழந் தமிழர்கள் இலங்கைக் கடற்கரையோரப் பகுதிகளில் வசித்துவருகிறார்கள். தமிழ்நாட்டுக்கும் இவர்களுக்கும் சரித்திர பூர்வமாகத் தொடர்பு நெடுகலும் இருந்து வந்திருக்கிறது. சமீபகாலத்தில் தமிழ்வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்த பெரியார்களான ஸ்ரீ ஆறுமுக நாவலரும் சுவாமி விபுலானந்தரும் இலங்கையின் பூர்வீகத் தமிழ்ப் பரம்பரையைச் சேர்ந்தவர்களே.



தவிர, இலங்கை பலதுறைகளிலும் புத்துயிர் பெறுவதற்குக் காரண புருஷராயிருந்த சேர் பொன்னம்பலம் ராமநாதன் ஈழநாட்டுப் பழம்பெருங்குடியைச் சேர்ந்தவர். ஒருகாலத்தில் இலங்கையில் சேர் பி.ராமநாதனுக்கு இணையில்லாத செல்வாக்கு இருந்தது. பழைய யதேச்சாதிகார பிரிட்டிஷ் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலத்திலும் அவருக்கு இணையில்லாத மதிப்பு இருந்தது. சர்க்காரும் மதித்தனர்; மக்களும் மதித்தனர்; சிங்கள மக்களோ அவருக்கு என்றென்றும் தீர்க்கமுடியாத நன்றிக்கடன் பட்டவர்கள்.

முதலாவது மகாயுத்தம் நடந்துகொண்டிருந்தகாலத்தில், 1917 - 18 இல் இலங்கையில் ஒரு பெரிய கிளர்ச்சி நடைபெற்றது. இன்றைய தினம் இலங்கை யின் சர்வசக்தி வாய்ந்த பிரதமராயிருக்கும் ஸ்ரீசேனநாயகா அப்போது சாதாரண பிரஜையாக இருந்தார். அவரும் அவருடைய சகாக்கள் சிலரும் மதுவிலக்கு இயக் கத்தில் ஈடுபட்டிருந்தார் கள். இந்த இயக்கத்தின் காரணமாகச் சிங்களவரிடையே புத்துணர்ச்சி ஏற்பட்டது. அது எப்படியோ சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் அடிதடி கலகமாக முடிந்தது. இன்னும் பெரிய வேடிக்கை என்னவென்றால், மேற்படி சமூகக் கலவரத்தை அப்போதிருந்த பிரிட்டிஷ் கவர்னர் பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எழுந்த பெரும் புரட்சியாக எண்ணிவிட்டார். உடனே ஸ்ரீ சேனநாயகா, பேரன் ஜயதிலகா முதலிய பல முக்கியமான சிங்களத் தலைவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்தார். சிங்கள மக்கள் பீதியடைந்து செய்வதறியாது திகைத்திருந்தனர். அச்சமயம் சேர் பொன்னம்பலம் ராமநாதன் "நான் இருக்கிறேன். அஞ்சவேண்டாம்!'' என்று அபயப்பிரதானம் அளித்தார். "இங்குள்ள அதிகாரிகளிடம் மன்றாடிப் பயனில்லை. இங்கிலாந்து சென்று உண்மையை எடுத்துக்கூறி நியாயம் பெற்று வருகிறேன்!'' என்று பிரயாணமானார். எம்டன் கப்பல் குண்டுபோட்ட காலத்தில், கடற்பிரயாணம் மிக அபாயம் நிறைந்ததாயிருந்த காலத்தில், இங்கிலாந்துக்குக் கப்பலில் பிரயாணமானார். பிரயாணத்தின் போதே இலங்கையின் நிலைமையை விளக்கியும் சிங்களத் தலைவர்களுக்கு இழைத்த அநீதியை எடுத்துக் காட்டியும் ஒரு புத்தகம் எழுதினார். இங்கிலாந்து சேர்ந்ததும் அதை அச்சிட்டுப் பார்லிமெண்டு அங்கத்தினருக்கும் மந்திரிகளுக்கும் கொடுத்தார். பிரதமர் லொயிட் ஜார்ஜையும் மற்ற மந்திரிகளை யும் பேட்டி கண்டு பேசினார். அந்த அபாயகரமான யுத்தசமயத்தில் அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்து கருத்தையும் மாற்றினார். அதன் பலனாகச் சிங்களத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அது மட்டுமல்ல.

( 25 ஆம் பக்கம் பார்க்க)



# 25ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி

( யூலை 25, 27 )



தமிழ்த் தேசிய வீரர்கள் தினம்

( 25 - 07 - 2008 )



ஆரம்பகாலத் தலைவர்
**தங்கத்துரை**

ஆரம்பகாலத் தளபதி
**குட்டிமணி**

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம், 27ஆம் திகதிகளில் கொழும்பு வெலிக்கடை வெஞ்சிறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ தேச விடுதலைக்கான ஆயுதப்போராட்டத்தின் முன்னோடிகளான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், தேவன், நடேசுதாசன், குமார், சிவபாதம், சிறீகுமார், குமாரகுலசிங்கம், மரியாம்பிள்ளை உட்பட 53 தமிழ்த்தேசிய வீரர்களுக்கும் மீண்டும் எமது கண்ணீர் அஞ்சலி.

தமிழ் ஈழ மண் காப்போம் !

தாயகம் மீட்போம் !!



தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ( ரெலோ )

TAMIL EELAM LIBERATION ORGANIZATION ( TELO )

இணையத்தள முகவரி www.telo.org.

சுடர் ஒளி
ஜூலை 20 - ஜூலை 26, 2008
85, ஜெயந்தலல் விமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0114734401—6
பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

# கறுப்பு ஜூலைத் தீ இன்னும் தகிக்கின்றது

ஈழத் தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் நீங்காத - ஆழமான - வடுவை ஏற்படுத்தி, கொடூர, கோர வன்முறைகளை நிகழ்த்திய கறுப்பு ஜூலை கலவரத்தின் வெள்ளி ஆண்டு நிறைவு இதுவாகும்.

கறுப்பு ஜூலைக் கலவரம் தென்னிலங்கை எங்கும் குரூர வன்முறையாகப் பற்றி எரிந்து, தமிழர்களின் உயிர், உடைமைகளை நாசம் செய்த பெரும் பிரளயமாகப் பெருக்கெடுத்த அந்த வாரத்தின் இருபத்தியைந்தாவது ஆண்டுப் பூர்த்திவேளை இச்சமயம் தான்.

இலங்கைத்தீவில் சிங்களவர்களுடன் ஓர் அரச குடையின் கீழ் அமைதியாக - கௌரவமாக - அந்நியோன்னியமாக - சமஅந்தஸ்தோடு - வாழவேமுடியாது என்ற படிப்பினையைத் தமிழர்களுக்கு உறைப்பாக உரைத்தது இந்தக் கலவரக் கொடூரம்தான்.

ஒரு தனி இனக் கட்டமைப்பாக - தாயக உரிமையைக் கொண்ட ஒரு தேசிய இனக் குழுமமாக - தமிழர்கள் வாழ்வதற்கு எவை யெவை எல்லாம் அடிப்படை ஆதாரங்களாக விளங்கினவோ, விளங்குகின்றனவோ அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக இலக்கு வைத்து அழித்தொழிப்பதன் மூலம் தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கே ஆப்பு வைத்து, இல்லாமல் செய்து, நிர்மூலமாக்கிவிடும் தென்னிலங்கை பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தின் வெறிப் போக்கின் ஓர் அங்கமே கறுப்பு ஜூலைக் கலவரம்.

தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கான அடித்தளங்களைத் தகர்ப்பதன் மூலம் இலங்கைத் தீவில் தமிழ்த்தேசியத்தின் வியாபகத்தை சிதறடித்து, இத்தீவில் அந்த இனத்துக்கு உள்ள தாயக உரிமையை மறுத்து, இதனை முற்றும் முழுதாக பௌத்த - சிங்களத் தேசியத்துக்கு மட்டுமே உரிய தொட்டிலாக்கலாம் என்பது பேரினவாதிகளின் சிந்தனை; கனவு; எண்ணம்.

அவ்வாறு தமிழ்த் தேசியத்தின் இருப்பை - ஸ்திரத்தை - சின்னாபின்னமாக்கும் சதித் தந்திரோபாயத்தின் அங்கமாகவே கறுப்பு ஜூலைக் கலவரம் அன்றைய சிங்கள ஆட்சிப் பீடத்தின் ஆசியுடனும், மறைமுக வழிகாட்டல்களுடனும் அப்போது அரங்கேறியது.

அந்த அராஜகத்தின் பின்புலத்தில் ஆட்சிப் பீடத்தின் அருபக்கரங்கள் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தமை சர்வதேசமும் அறிந்திருந்த பரகசியமாகும்.

தமிழினத்தை அழித்தொழிக்கும் கோரக் கொலைவெறித் தாண்டவம் சிங்களத்தின் மத்தியிலிருந்து வெளிப்படையாகவே பீறிட்டு வெளிப்பட்ட அந்தக் கோரத் தகிப்பில் தமிழ்த் தேசியம் பற்றிய சிந்தனை தகித்து, எரிந்து, சாம்பலாகிவிடும் என்று அப்போதைய ஆட்சிப் பீடம் கண்ட கனவு நனவாகிப் போய்விட்டவில்லை.

ஆனால், ஈழத் தமிழர்களின் மனதில் சந்ததி சந்ததியாக - தலைமுறை தலைமுறையாக - ஊறி, உரம்பெற்று, வைராக்கியமாக நிலைகொண்டிருக்கும் தமிழ்த் தேசிய உணர்வு, அந்தக் கலவரத் தீயில் புடம்போட்ட தங்கமாக புது மெருகு பெற்று வெளிப்பட்டு,மேலும் ஜொலித்து, பட்டை தீட்டிய வைரமாக மின்னும் வகையில் உறுதியாக மறுமலர்ச்சிக் கண்டது.

கறுப்பு ஜூலைக் கொடூரத்தின் வெம்மையில் கிளர்ந்தெழுந்து விஸ்வரூபம் எடுத்த தமிழ்த்தேசிய எழுச்சியின் அகோரத்தை இந்த இருபத்தியைந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் கொடூர இனப்போராக எதிர்கொண்டு தாங்கமுடியாமல் துடித்துக்கொண்டிருக்கின்றது இலங்கைத்தீவு.

அன்று அனுமனின் வாலில் இராவணேஸ்வரன் மூட்டிய தீ இலங்கையை அழித்தது. இன்று - கால் நூற்றாண்டுக்கு முன்னர் - தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாதிகள் மூட்டிய கலவரத் தீ முழு இலங்கையையுமே பெரும் இனப்போராக எரித்துக் கருக்கிக்கொண்டிருக்கின்றது.

தமிழ்த்தேசியத்தை அங்கீகரித்து -

இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்களின் வரலாற்றுத் தாயகத்தையும், அத்தாயகத்தில் அவர்களின் வாழ்வியல் உரிமைகளையும், சுயநிர்ணய அதிகாரத்தையும் ஏற்றுக்கொண்டு-

கௌரவத்தோடும், பிற தலையீடுகள் மற்றும் மேலாண்மை அதிகார அழுத்தங்களின்றியும் அவர்கள் வாழ்வதற்கான வாய்ப்பை அளித்து -

சமரசம் செய்வதற்கு தென்னிலங்கை முன்வந்தால்தான் இந்தக் கொடூர இனப் போர்த் தீயின் வெம்மையைத் தணிக்கமுடியும்; இலங்கையும் இத்தீவின் சகல இனமக்களும், தமிழர் மற்றும் சிங்களவரின் தாயகங்களும் தப்பிப் பிழைக்கமுடியும். இல்லையேல் கறுப்பு ஜூலைக் கலவரத் தீயின் தொடராகப் பற்றியெரியும் இந்த இனப்போரின் வெம்மையின் தகிப்பிலிருந்து இலங்கைத் தீவினர் எவருமே தப்பமுடியாது. அதுதான் உண்மை. ✱

# பாலமீன்மடுவிலும் ஒரு செம்மணி!

'கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது' என்பார்கள். ஆனால், மட்டக்களப்பு மாவட்டம் பாலமீன்மடுக் கிராமத்தில் ஆழிப் பேரலையால் பாதிப்புற்ற அகதிகள் தங்கியிருந்த முகாம் ஒன்றில் கிணறு வெட்டப் போக அங்கு பாரிய மனிதப் புதைகுழி ஒன்று தோன்றியிருக்கின்றது.

துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட பல டசின் கணக்கான ஆண்களும், பெண்களும் சுமார் மூன்று வருட காலத்துக்கு முன்னர் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்று ஆரம்பத் தகவல்களின் அடிப்படையில் ஊகிக்கப்படுகின்றது.

கிணறு வெட்டும்போது பூதம் கிளம்புமோ, இல்லையோ, தென்னிலங்கையில் மட்டும் - அதுவும் பெரும்பான்மையினரான சிங்களவர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளைத் தோண்டும்போது மட்டும் - பெரும் அரசியல் பூதமே கிளம்பும். ஆனால், அதுவே தமிழர்கள் புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழியாக இருந்தால் தோண்டும் குழி மண் நிறைந்து அடங்கிப் போக வேண்டியதுதான். விவகாரமும் அதுபோல அடங்கிப் போய்விடும். அதற்கு மேல் எதுவும் நடக்காது. அதுதான் எமது அனுபவப் பாடம்.



அதுவே இப்போதும் பாலமீன்மடு மனிதப் புதை குழிக்கும் நடக்கும் என்பதை இப்போதே ஹேஸ்யம் கூறி விட முடியும். ஏனென்றால், அங்கு மண்ணோடு மண்ணாகப் புதையுண்ட சடலங்களுக்கு உரியவர்களும், அவர்களின் வரலாறும் தமிழர்கள் சம்பந்தப் பட்டது என்பதால் அதுதான் இலங்கை நியதி என்றபடி அது அமுங்கியே போகும்.

பாலமீன்மடுவில் பெரும் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட செய்தியை தமிழ் ஊடகங்கள் வெளிப்படுத்திய விதமும், சிங்கள - ஆங்கில ஊடகங்கள் அமுக்கிய விதமும் இப்படித்தான் ஆகப்போகின்றது என்ற எமது முன்னைய பட்டறிவை உறுதிப்படுத்தி நிற்கின்றன.

1977 முதல் 1994 வரை ஏக அட்டகாசமாக தொடர்ந்த ஐ.தே.கட்சியின் ஆட்சியைப் புரட்டிப் போட்டது கூட ஒரு மனிதப் புதைகுழிதான். இரத்தினபுரி மாவட்டம் சூரியகந்த பகுதியில் 32 சிங்கள மாணவர்கள் புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழி கிண்டப்பட்டபோது சூறாவளியாகக் கிளம்பிய பெரும் அரசியல் பூதம், அதுவரை எங்கோ அரசியலில் ஒதுங்கி, நாதியற்றுக் கிடந்த சந்திரிகா குமாரதுங்கவை நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி வரை தூக்கிக் கொண்டு போய் நிறுத்தியது.

## அதிரடி ரங்கு

ஆனால்,தமிழர்கள் கூட்டம் கூட்டமாக - கொத்துக் கொத்தாக - சுட்டுக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்டாலும் பூதம் ஏதுமே தோன்றவில்லை.

யாழ்.குடாநாட்டைப் படையினர் கைப்பற்றிய 1995 - 1996 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போனவர்கள் என்று கூறப்படும் பல நூற்றுக் கணக்கான வடபகுதித் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டு செம்மணி சேற்று நிலப் பகுதியில் புதைக்கப்பட்டனர் என்று கருதப்படுகின்றது.

பல நூறு ஏக்கர் பிரதேசத்துக்கு விரிந்து, பரந்து கிடக்கும் செம்மணியில் ஒரு சில இடங்கள் தோண்டப்பட்டபோது சில டசின் மனித எலும்புக் கூடுகள் - கைகள், கால்கள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் சூட்டுக் காயங்களுடன் புதைக்கப்பட்டவை என்று கருதப்படும் சடலங்களின் எச்சங்கள் - மீட்கப்பட்டன.

அதேபோல யாழ் நகரின் மத்தியில், கோட்டை இராணுவ முகாம் இருந்த பகுதிக்கு அருகில் - துரையப்பா விளையாட்டரங்கின் ஸ்டேடியக் கட்டடத்துக்குப் பக்கத்தில் - ஒரே புதைகுழிக்குள் இருந்து இருபதுக்கும் அதிகமான மண்டையோடுகளும், எலும்புக் கூடுகளும், மனித எச்சங்களும் மீட்கப்பட்டன.

இந்த இரண்டு மனிதப் புதைகுழிகளுமே நீதிமன்ற நடவடிக்கைப் பிரகாரம், நீதிவான்கள் முன்னிலையில் சட்ட ரீதியாகத் தோண்டப்பட்டு மனித எச்சங்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டன.

அத்துடன், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரமும் சரி, துரையப்பா விளையாட்டரங்க மனிதப் புதைகுழி விவகாரமும் சரி கிணற்றில் போட்ட கல்லாக அமுங்கிப் போயின. அதற்கு மேல் எதுவும் நடக்கவேயில்லை. வருடங்கள் பல கடந்து விட்டன. யாரும் கைது செய்யப்படவில்லை. எந்தப் புலனாய்வும் நடப்பதில்லை. இவ்விடயத்துக்கான நீதிமன்றத் திகதிகளும் நீண்டகால இடைவெளிக்குத் தள்ளிப்போடப்பட்டு, போடப்பட்டு அப்படியே மறக்கடிக்கப்பட்டு விட்டன.

சூரியகந்த மனிதப் புதைகுழி தோண்டிய போது புறப்பட்ட அரசியல் பூதம் என்ற பேரலை செம்மணி விடயத்திலோ, துரையப்பா விளையாட்டரங்கு விவகாரத்திலோ எழவில்லை.

அதே கதிதான் பாலமீன்மடுப் புதைகுழிக்கும் என்பதை ஊகிப்பதில் அவ்வளவு ஒன்றும் கஷ்டமில்லை.

சர்வதேசம் கண்கொத்திப் பாம்பாகக் கவனிக்கும் - மூதூரில் 17 தொண்டுப் பணியாளர்கள் கொலை தொடர்பான - விசாரணைகளையே அமுக்கி, சுத்துமாத்துப் பண்ணி, திசை திருப்பும் ஆட்சித் தரப்புக்கு பாலமீன்மடு புதைகுழி விவகாரத்தை அமுக்குவது சின்ன விடயம்... ஜுஜுபி....!

கடந்த பல வருடங்களாக இராணுவக் கட்டுப் பாட்டுக்குள் பாலமீன்மடுப் பிரதேசம் இருந்து வந்திருப்பதாலும் - அங்கு மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள், எச்சங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதோடு, ரி- 56 ரகத் துப்பாக்கிக்குரிய ரவை களும் புதைகுழிக்குள் இருந்து மீட்கப்பட்டிருப்பதாலும் -

இந்த மனிதப் புதைகுழி விவகாரமும் அமுக்கப்பட்டு விடும் என்பதை உறுதியாக நம்பலாம். ✱

# ஜனாதிபதிக்குப் பிடித்த 'சுடர் ஒளி'!

அண்மையில் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து உரையாடினார்.

ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு நெருக்கடிகளை ஒன்றியப் பிரதிநிதிகள் நாசூக்காக அங்கு அவிழ்த்து விட்டனர். மெல்ல, மெல்ல பேச்சு சூடு பிடித்தது. ஒரு கட்டத்தில் ஊடக அடக்குமுறை பெருத்த எடுப்பில் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதான குற்றச்சாட்டை முன்வைப்பது போல ஊடக ஒன்றியப் பிரதிநிதிகளின் பேச்சு அமைந்தது.

ஒரு கட்டம் வரை ஆறுதலாக செவி மடுத்துக் கொண்டிருந்த ஜனாதிபதி ராஜபக்ஷ திடீரெனக் குறுக்கிட்டார்.

"ஊடக அடக்குமுறை பெரிதாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாகக் கூறுகின்றீர்கள். அப்படி ஒன்றும் இல்லை. கடந்த ஒரு வார கால 'சுடர் ஒளி' பத்திரிகையை எடுத்துக்காட்டவா? என்னையும் எனது அரசையும் எப்படி வாங்கு வாங்கென்று வாங்கியிருக்கிறார்கள் என்று பார்க்கின்றீர்களா? அந்தப் பத்திரிகையை எல்லாம் தடுத்தா



விட்டோம்? எல்லோரும்தான் எம்மைத் தாக்கி எழுதுகிறார்கள். நாங்கள் அனுமதித்துத்தானே உள்ளோம்!" - என்று படீரெனப் பதில் தந்தாராம் ஜனாதிபதி.

இச்சந்திப்பு முடிந்த பின்னர், தமது உள்வீட்டு மந்திராலோசனை சபையுடன் இவ்விவகாரம் பற்றி ஜனாதிபதி பேசினாராம்.

"தமிழ் ஊடகவியலாளர்களுக்குத்தான் அதிகம் பிரச்சினைகள் உள்ளன. ஆனால் பாருங்கள் எவ்வளவு நாகரிகமாக சந்திப்பில் நடந்து கொண்டார்கள். சீறவில்லை; கோபிக்கவில்லை. தங்களின் நெருக்கடிகளை - பட்டவர்த்தனமாக - வெளிப்படையாக எடுத்துச் சொன்னார்கள். எங்கள் தரப்புக் கருத்துக்களையும் செவிமடுத்தார்கள். ஊடகப் பிரச்சினையை வைத்து அரசியல் பிழைப்பு நடத்த அவர்கள் முயலவில்லை. ஆனால் வேறு சில ஊடக அமைப்புகள் அப்படியல்ல. ஊடக சுதந்திரத்தின் பெயரால் அரசியல் நடத்த அவர்கள் முயல்கிறார்கள். அவர்களுடன் ஒப்பிடுகையில் தமிழ் ஊடகவியலாளர்கள் எவ்வளவோ மேல்" - என்று அந்த உள்வீட்டுக் கலந்தாலோசனையில் கருத்துக் கூறினாராம் ஜனாதிபதி. ✱

# தமிழ் தேசிய எழுச்சிக்கு வித்திட்ட இனக் கலவரம்!




கறுப்பு ஜூலை கலவரத்தின் கால்நூற்றாண்டுப் பூர்த்திவேளை இது. இச்சமயத்தில், அந்தக் கறுப்பு ஜூலைக் கலவரம் கட்டவிழ்ந்த பின்னணியையும் அந்நேரச் சூழலையும், இந்த இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் சிங்கள இனவாதச் சக்திகள், தமிழ்த் தேசியத்தின் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து, தனியரசுப் போராட்டத்துக்கான அக புறச் சூழ் நிலையை உருவாக்கிக் கொடுத்த மடைமைத்தனத்தையும் தமிழர் தேசத்தின் தூரல் அன்டன் பாலசிங்கம் விவரிக்கின்றார்.

கறுப்பு ஜூலை குறித்துத் தாது 'போரும் சமாதானமும்' என்ற தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டப் பதிவு நூலில் 'வன்முறைப் புயல்வீசிய கறுப்பு ஜூலை' என்ற தலைப்பில் அவர் பொறித்துச்சென்ற தகவல்கள் இத் தொடரில் பிரசுரமாகின்றன. இத் தொடரின் இறுதியும் - மூன்றாவதுமான அத்தியாயம் இது.

3

திருநெல்வேலித் தாக்குதலுக்குப் பின்பு உருவான பதற்ற நிலையை அரசு முடிச்சுப் போட்டுக் கையாண்ட விதம், அதன் விஷமப் போக்கை கோடிட்டுக் காட்டியது. இனவெறியைத் தூண்டும் செய்தி அறிக்கைகள் மறுநாள் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக தடித்த எழுத்துக்களில் வெளிவந்தன. இவை சிங்கள மக்களிடையே கொதிப்புணர்வைக் கிளறி விட்டன. 'வீழ்ந்த வீரர்கள்' பதின்மூன்று பேரும், கொழும்பு பிரதான மயானமான கனத்தையில் பூரண இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்படுவர் என்று அரசு அறிவித்தது. எண்ணுக்கணக்கற்ற சிங்களவர், தலைநகருக்குத் திரண்டு வர இது வழிவகுத்தது. ஆனாலும், அறிவித்தபடி மரணச்சடங்குகள் நடக்கவில்லை. இறந்த இராணுவத்தினரின் உடலங்கள் மயானத்துக்கு வந்துசேர்வது தாமதம் ஆயிற்று. இதன் பின், சம்பந்தப்பட்ட படையினரின் உடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்கப் போவதாக அரசு அறிவித்தது. அடக்கத்துக்கு வந்து சேர்ந்த மக்களிடையே இது மன்க்குழப்பத்தையும் பொறுமையின்மையையும் தோற்றுவித்தது. நேரம் செல்லச்செல்ல, பொறுமை எல்லைமீறத் தொடங்கியது. மாலையில் இருளத் தொடங்கியதும் சனக் கும்பல் கொதித்தெழுந்து வன்செயலில் இறங்கியது. கலவரம் இரத்தப் பிரளயமாக வளர்ந்தது. தமிழர்களைப் படுகொலை செய்வதும், சொத்துக்களை நிர்மூலமாக்குவதுமாக கொடும் செயல்கள் தொடர்ந்தன. இனவெறியாட்டம் தட்டிக்கேட்பாரின்றி நாட்கணக்கில் இழுபட்டது. தலைநகரில் தொடங்கிய இந்தக் குரூர வெறியாட்டம் அதேவடிவங்களில் தென்னிலங்கை மாவட்ட நகரங்களுக்கும் அலையாகப் பரவியது. தமிழர் மரணமும் தமிழர் சொத்துடமை அழிப்பும் எங்கும் தலைவிரித்தாடியன. பாதுகாப்பு எதுவுமற்ற நிலையில் மூவாயிரம் தமிழ்மக்கள் காட்டுமிராண்டித்தனமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள். பெரும்பாலான தமிழர்கள் சிங்களக்காடையர் கும்பல்களினால் கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டார்கள் அல்லது அடித்துக் கொல்லப்பட்டார்கள். பல தமிழ் குடும்பங்கள் உயிரோடு எரிக்கப்பட்டன. தமிழருக்குச் சொந்தமாயிருந்த ஆயிரக் கணக்கான வீடுகள், கடைகள், கட்டடங்கள், கைத்தொழில் வளாகங்கள், சினிமாக்கள், எரிபொருள் நிலையங்கள் - எரித்து தரைமட்டம் ஆக்கப்பட்டன. கொழும்பு நகரில் 150,000 தமிழர்கள் இரவோடிரவாக வீடு வாசல் இழந்து அகதிகள் ஆனார்கள்.

கலகக்காரர்கள், கண்மூடித்தனமாகவோ தறிகெட்டோ தாக்கவில்லை. அவர்களது தாக்குதல்கள் நன்கு திட்ட மிடப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டவையாக அமையப் பெற்றிருந்தன எனப் பார்வையாளர்கள் தெரிவித்தனர். கலவரக் கும்பல்களுக்குத் தமிழரின் வதிவிடங்கள், சொத்துக்கள், உடைமைகள் தொடர்பான அச்சொட்டான விவரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த இனக்கலவரத்தில் அரச அதிகாரிகளின் கறைபட்ட கைகலந்திருந்தது என்பது



தெட்டத் தெளிவாகியது. தலைநகரில் மட்டும் நூற்றுக்கும் அதிகமான தமிழர்களின் தொழிற்சாலைகளும் வர்த்தக நிலையங்களும் சாம்பல் மேடாக்கப்பட்டிருந்தன.

கொழும்பில் இனவெறிக் கலவரத்தை நேரில் கண்காணித்த, பிரித்தானிய 'பைனான்சியல் டைம்ஸ்' பத்திரிகையாளர் நிலைமையைப் பின்வருமாறு வர்ணித்தார்.

''வன்செயல், கொடியதாகவும் இரத்தக் களரியாகவும் தோற்றமளித்தது. ஏனைய ஆசிய நாடுகளின் கலவரங்களில் இருந்து இந்த கலவரத்தில் காணப்பட்ட தெளிவான வேறுபாடு என்னவென்றால், குறித்த வர்த்தகத் தலங்களை, கலகக் கும்பல்கள், அச்சொட்டாக கண்டுபிடித்தமையே. கொழும்பிலே வீதிக்கு வீதி சென்ற கலகக்

## வன்முறைப் புயல் வீசிய 'கறுப்பு ஜூலை!'

கும்பல்கள், தமிழருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளையும் வீடுகளையும் மட்டுமே தாக்கியமையாகும். அவர்கள் கவனமாகத் தேடித் தேடி திரிந்தமை ஏனென்று இப்போது புரிகிறது. ஒவ்வொரு வீதியிலும் குறிந்த வர்த்தக வளாகம் தீ மூட்டப்பட்டிருக்கும். அடுத்து அமைந்திருக்கும் வளாகம் எந்தப் பாதிப்பும் இன்றி அப்படியே பத்திரமாக இருக்கும். அரச படைகளும் காவல் துறையினரும் ஒன்றில் கலகக்காரருடன் சேர்ந்து கொண்டார்கள்: அல்லது பராக்குப் பார்த்த வண்ணம் வாளா நின்றார்கள்.'' (பைனான்சியல் டைம்ஸ், 1983 ஆகஸ்ட் 12.)

கொழும்புத் தலைநகரில் தமிழர்களது பொருளாதார அடித்தளத்தை நாசம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடகவே இந்த இனக்கலவரம் அமைந்தது எனலாம். இக் கலவரம் தமிழின அழிப்பையும் இலக்காகக் கொண்டிருந்தது. ஏனென்றால், தமிழர் என்ற தேசிய இன அடையாளத்தைக் குறிவைத்தே தமிழர்களின் உயிர், உடைமைகள் அவர்களது பொருளாதார வாழ்வு ஆகியன அழிக்கப்பட்டன.

நாடு அடங்கிலும் தலைவிரித்தாடிய இனக் கலவர வன்செயல்கள் ஆறு நாட்கள் வரை தொடர்ச்சியாக நீடித்தன. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போதும் அதனைச் செயற்படுத்த சிங்கள ஆயுதப் படைகள் மறுப்புத் தெரிவித்தன.

தமிழர் வரலாற்றில் இந்த இருள் படிந்த காலத்தில், மிகவும் அருவருக்கத்தக்க சம்பவம் ஒன்று ஜூலை 25 அன்று வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்றது. சிங்களக் கைதிகள் சிறை அதிகாரிகளுடனும், சிறைக் காவலருடனும் கூட்டுச் சேர்ந்து, சிறைக் கூண்டுகளைத் தாக்கி உடைத்து 35 தமிழ்க் கைதிகளைக் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றனர். சிங்களச் சிறைக் குற்றவாளிகளால் குத்திக் கிழிக்கப்பட்டு, அடித்து நொருக்கப்பட்டு மிருகத்தனமாக கொலைச் செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் நால்வர் முக்கியமானவர்கள். தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் ஆகியோர் ஒப்பற்ற விடுதலைப் போராளிகள்: மாவீரர்கள். தமிழீழ விடுதலை அமைப்பின் (ரெலோ) மூல பிதாக்கள். இன்னொருவர் கலாநிதி ராஜசுந்தரம். காந்தியம் அமைப்பை உருவாக்கியவர் இவர்.

இனக்கலவரம் ஒருவாறு ஓய்ந்து அடங்கியது. பாரிய குண்டுவீச்சினால் சிதைந்துப் போய், தீயினால் எரிந்து கருகிய நகரமாகக் கொழும்பு சோரக் காட்சியளித்தது. எலும்புக்கூடு போல கருகிய கட்டடங்களின் மீதங்களில் இருந்து புகை மண்டலம் எழுந்து கொண்டிருந்தது. கலவரக்காலத்தில் வாய்மூடி மௌனிகளாக இருந்த சிங்கள அரசியல்வாதிகள் வாய்திறக்கத் தொடங்கியபோது, பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்காக அனுதாபமான ஒரு வார்த்தைகூடத் தெரிவிக்கவில்லை. நேர்மாறாக அரச அதிபர் ஜெயவர்த்தன சிங்களதேசத்திற்கு விடுத்த செய்தியில், திருநெல்வேலியில் வீழ்த்தப்பட்ட சிங்கள வீரர்களுக்காக கொடுக்கப்பட்ட நியாயபூர்வமான நஷ்டஈடாக தமிழருக்கு எதிரான கலவரக் கொடுமையை நியாயப்படுத்த முனைந்தார். தமிழ்த் தேசிய ஆன்மாவில் ஆழமான வடுவை ஏற்படுத்திய மாபெரும் துன்பியல் நிகழ்வாக இனக்கலவரம் முடிவுற்றது. என்றுமே சீர்செய்யமுடியாத அளவுக்கு இரு இனங்கள் மத்தியிலான உறவை, இக்கலவரம் நிரந்தரமாகப் பாதித்தது.

சிங்கள இனவாத அரசு அனைத்துலக சமூகத்தின் கண்டனத்திற்கு இலக்காகியது. காருண்ய மகான் புத்தரின் புண்ணிய பூமியில் மனிதத்துவமற்ற மிருகத்தனமான கொடுமைகள் எவ்வாறு சாத்தியமாயிற்று என உலகத்தின் மனச்சாட்சி திகைத்து நின்றது. இந்திய அரசு கடும் சினம் கொண்டது. இந்திரா காந்தி அம்மையார், தனது ஆழ்ந்த அங்கலாய்ப்பை தெரிவித்ததுடன், புதுடில்லி அரசின் ஆழ்ந்த அதிருப்தியை நேரில் எடுத்துக் கூறும் பொருட்டு வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ் அவர்களையும் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். தமிழ்நாடு உணர்ச்சி வசப்பட்டு கொதித்து வெடித்தது. சென்னையிலும் தமிழ் நாட்டின் ஏனைய நகரங்களிலும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் குதித்தனர். இலங்கையில் உள்ள தங்களது தமிழ்ச்சகோதரர்களைக் காப்பாற்ற மத்திய அரசு இந்தியப் படைகளை அங்கு அனுப்ப வேண்டும் எனத் தமிழ் நாட்டுத் தலைவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

1983 ஜூலை மாத இனக் கலவரப் பேரழிவானது, மடைவாயை உடைத்தோடிய பெருவெள்ளம் போல, தமிழ் தேசிய உணர்வை எங்கும் பிரவாகம் எடுக்கச் செய்தது. நாடுகள், கண்டங்களின் எல்லைகள் கடந்து இன உணர்வு ஈழத் தமிழர்கள் அனைவரையும் பற்றிக் கொண்டது. தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட தாங்கொணாக் கொடுமைகளை அறிந்து இரத்தம் கொதித்த தமிழ் இளம் சமூகம், ஆயுதம் தரித்த விடுதலைப் போரில் இணைந்து கொள்ள பல்லாயிரக்கணக்கில் அணிதிரண்டனர். விடுதலைப் புலிகளின் படையணியில் நூற்றுக்கணக்கில் இளைஞர்கள் இணைந்தனர். புலிகளின் தலைமையின் கீழ் ஆயுதப் போராட்டத்தில் பங்குபற்ற பல்லாயிரம்பேர் துடித்தார்கள். பிரபாகரன் இந்த நிலைமையை மிகச் சாதுரியமாகக் கையாண்டார். தமது அமைப்பின் நிதி வளத்தின் வரம்புக்கு அப்பால் தனது கெரில்லாப் படையின் எண்ணிக்கையைப் பெருப்பிக்கக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். அதேவேளை, தமிழ்நாட்டில் தலைமறைவாக செயலிழந்து ஒதுங்கியிருந்த போராளி அமைப்புகள், தாங்கள் அணிக்கு ஆள் சேர்ப்பதற்கு இதை ஒரு பொன்னான வாய்ப்பாகக் கண்டன. செயற்படாதிருந்த இந்த அமைப்புகள் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்த ஈழத் தமிழ் மக்களிடமிருந்து, பெற்ற நிதி உதவியுடனும் புதிதாகச் சேர்ந்த உறுப்பினரோடும், திடீரெனப் புனர்வாழ்வு பெற்று செயற்பட ஆரம்பித்தன.

கறுப்பு ஜூலை இனக் கலவரத்தை கட்டவிழ்த்து விட்டதன் மூலம் சிங்கள இனவாத சக்திகள், தமிழ்த் தேசிய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்ததுடன், தனியரசுப் போராட்டத்திற்கான அக - புறச் சூழ்நிலையையும் உருவாக்கிக் கொடுத்தன. இந்த இனக் கலவரம் தமிழீழ மக்களது அரசியல் வரலாற்றுப் பாதையை மாற்றி அமைத்தது மட்டுமன்றி, இந்தியத் தலையீட்டுக்கு வழி சமைக்கும் புறநிலையையும் ஏற்படுத்தியது.

# புதுடில்லியுடன் பொருத தயாராகிறது கூட்டமைப்பு

'குட்டக் குட்டக் குனிபவனும் மடையன்; குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்' என்றொரு பேச்சுவழக்கு நம் மத்தியில் உண்டு.

இப்படிக் குனிந்து, குனிந்து குட்டு வாங்கிக் கொண்டிருக்கும் சாது, திடீரென மிரண்டால் எப்படியிருக்கும்?

அந்த நிலைமையில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று உள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில், இந்தியாவுக்குக் கீழ்ப்படிவான தரப்பாக இதுவரை இயங்கி வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியத் தரப்பின் - புதுடில்லியின் - ஏமாற்றுத்தனத்தால் விரக்தியினதும் விசனத்தினதும் விளிம்புக்கும் சென்ற நிலையில் இந்தியாவுக்குத் தனது கடும் அதிருப்தி நிலையையும் எரிச்சலையும் வெளிப்படையாகக் காட்டக் கூடிய விதத்தில் காட்டமாகச் செயற்பட - நெருப்பெடுக்க - முடிவு செய்து விட்டது எனத் தெரிகின்றது.

இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு



முன்னர் இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக வெடித்த கொடூர இனக்கலவரம் இலங்கை விவகாரத்தில் - புதிர்கள் நிறைந்த - சிக்கலான வரலாற்றைக் கொண்ட - நேரடி இந்தியத் தலையீட்டுக்கு வழி செய்தது.

இலங்கையில் இந்தியா நேரடியாகத் தலையீடு செய்வதற்கு தேவையான இடைவெளியையும், பொருத்தமான புறநிலையையும், தகுந்த நியாயப்பாட்டையும் கறுப்பு ஜூலைக் கலவரம் ஏற்படுத்திக் கொடுக்க அந்த சாக்கில் இலங்கைக்குள் நேரடியாக மூக்கை நுழைத்தது பாரதம்.

அந்தக் சமயத்தில் ஈழத் தமிழர் தரப்பின் அரசியல் தலைமைத்துவப் பிரதிநிதியாக விளங்கியவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். அப்போது அவரே இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவரும் கூட.

அன்று முதல் அவர் சாகும் வரையிலும் அவரும் சரி -

அவருக்குப் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியையும், பின்பு அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மலர்ந்த பிறகு இன்றுவரை அக்கூட்டமைப்பையும் தலைமை வகித்து வழி நடத்தி வருகின்றவர்களும் சரி -

பாரதத்தை அனுசரித்து அதன் விருப்புக்கு இணங்கவே செயற்பட்டு, புதுடில்லிக்கு உரிய மரியாதை கொடுத்து - இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் புதுடில்லிக்கு 'சலாம்' பண்ணியே - தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்துள்ளனர்.

ஈழத் தமிழர் தாயகப் பிரதேசங்களை அமைதிப் படை என்ற பெயரில் இந்தியா ஆக்கிரமித்திருந்த வேளையில் அதன் கூலிப் பட்டாளமாக விளங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ போன்றவற்றுடன் சேர்ந்து அப்போதைய

**“எங்கள் அனுமதியின்றி - எமது மக்களின் இசைவின்றி - எமது மூலவளத்தைச் சூறையாட அனுமதிக்கமாட்டோம். இந்தியாவோ எந்த நாடோ எமது காங்கேசன் மூலவளத்தை - கனிமத்தை - சுரண்டிச்செல்ல விடமாட்டோம். என்ன விலை கொடுத்தாவது அதைத் தடுப்போம்” - என்று சூளுரைக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவிட்டபுரம் மண்ணின் மைந்தருமான மாவை சேனாதிராஜா.**



பொதுத் தேர்தலில் கூட்டணி அமைத்து ஒரு பட்டியலில் போட்டியிடுமாறு இந்தியா அவ்வேளையில் கொடுத்த அழுத்தத்தை - தன்னுடைய விருப்பத்தையும், கொள்கை நிலைப்பாட்டையும், கருத்தையும் ஒருபுறம் ஒதுக்கிவைத்து விட்டு - சிரமேற்கொண்டு, அதன்படி பின்பற்றி ஒழுகியது 'அவ்வேளைய' தமிழர் விடுதலைக் கூட்டணி.

அன்றைய நிலையில் மேற்படி கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஓரணியாகத் தேர்தலில் குதிக்கும் கட்டாயத்துக்கு, இந்தியாவுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் - மரியாதை கொடுக்கும் நோக்கில் - அமிர்தலிங்கம் இணங்கினாரெனினும்

புதர் மண்டிக் கிடக்கும் காங்கேசன் சிமெந்து ஆலை...



அதற்காக அவர் எவ்வளவு மன வேதனைப் பட்டார், சஞ்சலப்பட்டார் என்பவை அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கே நன்கு தெரியும்.

தமிழரின் நலன் பேண வேண்டிய விடயங்களில் உறுதியாக நிற்க வேண்டியவர் அதை விடுத்து, புதுடில்லியின் அழுத்தத்துக்கும் விருப்பத்துக்கும் விட்டுக் கொடுத்தார், பாரதத்தின் இசைக்கு ஏற்ப பரதநாட்டியம் ஆடினார் என்பன போன்ற குற்றச்சாட்டுகளே அமிர்தலிங்கத்தின் உயிர் குடிக்கும் சாட்டுதல்களுமாயின.

அக்குற்றச்சாட்டுகள் சரியான வையா, ஏற்கக் கூடியவையா, நியாயமானவையா என்பவையெல்லாம் வேறு விடயங்கள்.

ஆனால், இந்தியாவுடன் இணங்கிப் போனதன் 'பரிசாகவே' - பிரதிபலனாகவே - தமிழன் ஒருவனது கையிலிருந்து சீறிய துப்பாக்கிக் குண்டைத் தமது உடல்களில் வாங்கிச் சாவை அரவணைக்க வேண்டிய துரதிஷ்டத்தை கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் வாங்கிக் கொண்டனர் என்பது மறக்கமுடியாத விடயம்.

இவ்வாறெல்லம் பாரதத்தோடு இணங்கிப் போன தமிழர் விடுதலைக் கூட்டணியும் மற்றும் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற இந்திய சார்புப் போக்குடைய தமிழ்க் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து உருவாக்கியதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

அது இப்போது இந்தியாவுக்கு எதிராக சீறும் நிலைக்கு வந்திருக்கின்றது என்றால் அதில் ஆழமான விடயங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

இன்று கூட்டமைப்பை தாங்கிப் பிடித்திருக்கும் பெரிய 'தூண்கள்' எல்லாம் தமது குடும்பத் தூண்களை இந்தியாவில்தான் நிலைநிறுத்தியிருக்கின்றன என்பது உண்மையே.

நெருக்கடியான இலங்கை நிலை கருதியும், பாதுகாப்பு மற்றும் குறைந்த செலவு ஆகியவற்றின் காரணமாகவும் தமிழ்க் கூட்டமைப்பின் பல தூண்கள் தங்களின் சொந்தக் குடும்ப வாழ்வுக்கான புகலிடமாக இந்தியாவைக் கொண்டுள்ளன.

இதனாலும் கூட்டமைப்பினர் இந்திய அதிகார வர்க்கத்துடன் இணங்கிப் போகும் நிலையைக் கடைப் பிடித்து வந்தனர் என்பதும் உண்மையே.

கூட்டமைப்பு எம்.பியாக இருந்த ஈழவேந்தன், ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் விட்டேத்தியான போக்கை வெளிப்படையாக விமர்சிப்பவர். எம்.பி. அந்தஸ்து மூலம் தமக்குக் கிடைத்த 'சார்க்' நாடுகளுக்கான விசா அனுமதியுடன் இந்தியா போய் இறங்கிய அவருக்கு நாட்டுக்குள் போய் இறங்க அனுமதி

## வி.சிவராம்

மறுக்கப்பட்டது. திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்தியாவின் அச்செயற்பாட்டைக் கூட கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் காட்டமாக கண்டித்துரைக்கப் பின்நின்று விட்டனர். அவ்வளவு தூரத்திற்கு இந்தியாவில் தங்கி நின்றது அவர்களது செயற்பாடு.

அதன் காரணமாக, இந்தியாவை அனுசரித்துப் போவதைத் தவிர கூட்டமைப்பினருக்கு வேறு வழியே இல்லை என்று கருதிய புதுடில்லி நிர்வாக பீடம் - அதனால் கூட்டமைப்பைக் கிள்ளுக் கீரையாகத் தூக்கி எறிந்து நடக்கின்றது என்பது டலரின் கணிப்பு.

ஈழத்தமிழர் விடயத்தில் விடுதலைப் புலிகள் போன்ற - பாரதத்தின் சொற்படி நடக்காத - தரப்புகளின் கருத்து நிலைப்பாடு எப்படியிருந்து விட்டும் போகட்டும். ஆனால், தமிழ்க் கூட்டமைப்புப் போன்ற - இந்தியாவுடன் இதுவரை காலமும் இணங்கிப்போன, போகின்ற - அமைப்புகளை இந்தியா வெறும் 'போடுதடி' போல பயன்படுத்தி வருவதுதான இப்போதைய சிக்கலுக்கு வழிசெய்திருக்கின்றது.

அண்மைக்காலமாக ஈழத்தமிழர் விடயத்தில் இந்தியாவின் செயற்பாடு அவர்களின் தலையில் மிளகாய் அரைக்கும் வேலையே என்பதைக் கூட்டமைப்பு இப்போது நன்கு புரிந்துகொண்டிருப்பதும் கூட்டமைப்பின் சீற்றத்துக்கு மற்றொரு காரணமாகும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இந்தியாவின் நலன் தொடர்பான விடயங்கள் நடைமுறைப்படுத்துவதில் சிரத்தை காட்டி உறுதிப்படுத்தியுள்ள இந்தியா, ஈழத் தமிழரின் நலன்பேணும் சகல விடயங்களும் அடிபட்டுப் போக இலங்கையுடன் ஒத்துழைத்து, விட்டுக் கொடுத்து, ஈழத்தமிழர்களை நட்டாற்றில் விட்டுப் பெரும் துரோகம் இழைத்துள்ளது என்பது தமிழ்க்கூட்டமைப்புத் தலைவர்களின் விசனம். அண்மையில் இலங்கை வந்த - மூன்று உயரதிகாரிகளைக் கொண்ட - இந்திய அதிகாரவர்க்கத்திடம் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் கடுமையாகவும், சூடாகவும், இதைத் தெரிவித்து, 'செமத்தியாக'க் கொடுத்தார் என்பதும் தெரிந்ததே.

திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களை ஆக்கிரமித்து, இலங்கையின் எரிபொருள் விநியோகத்துக்குள், தலையை நுழைத்து, அத்துறையைக் கபளீகரம் செய்து சுவீகரித்திருக்கும் இந்தியா, இங்குள்ள இனப்பிரச்சினையைத் தனக்குச் சாதகமாக்கி, தன் காரியங்களை வகையாக முடித்துக் கொள்கிறது.

இனப்பிணக்கையும், அதனால் எழுந்த ஈழத்தமிழரின் நலிவு நிலையையும் பயன்படுத்தி - ஈழத் தமிழர் தாயகத்தின் மூலவளங்களை, ஈழத்தமிழர்களின் சம்மதமோ, விருப்பமோ இன்றி - தென்னிலங்கைச் சிங்களத்தின் கபட நாடகத்தின் பங்காளியாகி - இந்தியா சுரண்டிச் சூறையாட எத்தனிக்கின்றது.

அதில்தான் அதன் கண் உள்ளது என்ற உண்மை கூட்டமைப்புத் தலைவர்களுக்கு காரமாக உறைக்கத் தொடங்கியிருப்பதும் அவர்கள் இந்தியாவுடன் நெருப்பெடுக்கத் தீர்மானித்தமைக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

தமிழர்களின் சம்பூர் பிரதேசத்தை அரசப் படைகள் கைப்பற்றியதும் அங்குபோய் கால்வைத்துக்கொண்டு மின் உற்பத்தி என்கிறது இந்தியா.

புல்மோட்டையில் உள்ள கனிமவளத்தைச் சுரண்டவும் முயற்சி நடக்கின்றது.

மன்னாரில் அரச படைகளின் நிலை சற்று வலிமைப்படுவதாக தெரிந்ததும் தமிழர் தாயகப் பூமியில் எரிபொருள் அகழ்வு என்ற பெயரில் கடலின் படுக்கையில் உள்ள செல்வத்தைச் சூறையாடும் எத்தனம் ஆரம்பமாகி விட்டது.

போதாக்குறைக்கு இப்போது செயலிழந்து கிடக்கும் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலும் இந்தியா கண் வைத்து விட்டது.

அதனை மீள இயங்கவைக்கும் நோக்கம் என்ற பெயரில் இந்தியாவின் பிரபல தொழில்முயற்சியாளர்களான பிர்லா குழுவினர் அங்கு கால்வைக்கின்றனர்.

வலிகாமத்தில் பெரும் பகுதியை உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவம் கபளீகரம் செய்து ஆக்கிரமித்து நிற்கிறது. அந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பல லட்சம் மக்கள் இன்னும் ஏதிலிகளாக அலைந்து கொண்டிருக்கின்றார்கள். தமது மண்ணுக்கு - தங்கள் வீடுகளுக்கு - திரும்பமுடியாமல் அல்லல்படும் அவர்களின் அவலம் பற்றி சிந்திப்பார் யாருமில்லை. இந்தியா உட்பட யாருக்கும் அது குறித்துக் கவலையில்லை.

ஆனால், அந்த மக்களின் வலிகாமம் மண்ணிலிருந்து சுண்ணாம்புக்கல்லை வெட்டியெடுத்து 'கிளிங்கர்' ஆக்கி, சிமெந்தை உற்பத்திசெய்து, அந்த மூலவளத்தைச் சுரண்டி தன்னைப் பெருக்க வைக்கப் பாரதம் தீவிரம் காட்டுகின்றது என்ற செய்தி அந்த மக்களின் காதில் வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல பாய்கிறது.

(23-ஆம் பக்கம் பார்க்க)

# பாம்புகள் மல்யுத்தம்

3

மனிதனும் சரி, மற்ற உயிரினங்களும் சரி... தன்னுடைய எல்லைகளையும் இருப்பிடத்தையும் எப்பாடுபட்டாவது பாதுகாத்துக் கொள்ளவேண்டும். சரி!

மனிதன் உட்பட எல்லா உயிரினங்களும் உயிர்வாழ்வதற்காகத் தனக்குரிய உணவைப் போராடிப் பெற்றாகவேண்டும். சரி!

இன்னொரு முக்கிய விடயம் தேவை - செக்ஸ். அதற்கு வேண்டியது-பெண்!

எல்லையை இழந்தால், தங்குவதற்கு இடம்போய்விடும்; அங்கே கிடைக்கும் உணவும் கூடவே போய்விடும். பிறகு உயிர் வாழமுடியாது.

பெண் கிடைக்காவிட்டால் என்ன? இன்னொரு பெண் கிடைக்காமலா போவான்? அவளை அவ்வளவு எச்சரிக்கையாகப் பாதுகாத்துப் புணரவேண்டிய அவசியம் என்ன?

அவளுக்காக ஏராளமான, முக்கியமான துணிமணிகளைச் செலவழித்துப் போராடவேண்டிய கட்டாயம் ஏன்?

வாசகர்களே! காதலைத் தயவுசெய்து இங்கே இழுக்காதீர்கள், மனிதன் தோன்றிப் பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் வந்த உணர்வு அது!

(மனித குலத்துக்குள் காதல் புகுந்ததால், அவனுடைய உடலில், முக்கியமான உறுப்பில் காலப்போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டது என்பது தெரியுமா? அதுபற்றிப் பிற்பாடு ஆராய்வோம்!)

ஆகவே 'செக்ஸ்' என்பதை மட்டுமே இங்கு முக்கியமாக எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. புணர்ச்சி என்பது மனிதனிடம் உள்ள மிகமிக அடிப்படையான, மிருகத்தனமான உணர்வு (இந்த இடத்தில் 'மிருகத்தனமான' என்பதை மென்மையாக உச்சரிக்கவும்!).

எல்லா உயிரினங்களுக்கும் இருப்பது போலவே மனிதனுக்கும் 'பெண்ணுடன் உறவு கொள்ளவேண்டும்' என்கிற உணர்வு அவன்கூடவே பிறந்த ஒன்று.

மிருகங்கள் புணர்ச்சியோடு நிறுத்திக்கொண்டன. எந்தவொரு இனமும் வளர அந்தத் தகுதி மட்டுமே போதும். ஆனால், மனிதன் பிற்பாடு காதலைக் கண்டுபிடித்தான்! திருமண பந்தத்தை உருவாக்கிக் கொண்டான். அது அவனுக்கு மிகவும் வசதியாக இருந்தது! இதனால் ஒரு பெண்ணைப் போராடித் தக்கவைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் அவனுக்கு இல்லாமல் போய்விட்டது!

ஒரு விதத்தில் மிகச் சுயநலமான, கில்லாடித்தனமான கண்டுபிடிப்பு - திருமணம்!

சற்று யோசித்துப் பாருங்கள்! உங்களோடு வாழ்ந்து, குழந்தைகள் பெற்றுத்தரக்கூடிய பெண்ணைத் தனியாகவிட்டு, நீங்கள் நகர்ந்தாலே நூற்றுக்கணக்கான ஆண்கள் அந்தப் பெண்ணைத் தூக்கிச் சென்று புணர்வதற்காக அருகில் காத்திருக்கிறார்கள் என்றால் எப்படி இருக்கும்?

அவர்களில் பலசாலியான ஒருவன், மற்றவர்களை அடித்துத் தள்ளிவிட்டு, அவளை அபகரித்துக்கொண்டு போய்விடுவான் என்கிற நிலை இருப்பின், அந்தப் பெண்ணைவிட்டு உங்களால் அகல முடியுமா? மற்ற வேலைகள் எதையேனும் கவனிக்க முடியுமா?

பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு மனிதன் அப்படித்தான் திகிலோடும் கவலையோடும் வாழ்ந்தான். அதற்கேற்ப, நிரந்தரமான பெண் துணை என்பதே, அவன் வாழ்க்கையில் இல்லாமல் போனது!

மனிதனிடம் செக்ஸ் உணர்வு என்பது உற்பத்தியாகிற இடம் அவன் மூளையின் ஆழத்தில் உள்ள லிம்பிக் பகுதியில்தான். அதாவது, 'பாம்பு மூளை'ப் பகுதி!

உண்பது, புணர்வது, தற்காத்துக் கொள்ளத் தாக்குதல் இந்த மூன்று உணர்வுகளே கொண்டிருக்கும் பாம்பு, உடலுறவுக்காக நிகழ்த்தும் களேபரமான போராட்டத்தைப் பார்த்தல், பொதுவாகவே 'செக்ஸ் உணர்வு' என்பது எவ்வளவு வீரியமானது(!) என்பது புரியும்!

சாதாரணமாக, நல்ல பாம்புகளை எடுத்துக்கொண்டாலே, ஆண்பாம்பு தான். போகிற வழியில் பெண்பாம்பைச் சந்தித்தவுடன் உடனே அதற்கு 'மூட்' ஏற்பட்டு, பெண்ணை ஓரமாகத் தள்ளிக்கொண்டு போய் செக்ஸ் வைத்துக்கொள்ளமுடியும் என்கிற கதையே நடக்காது!

இரண்டு பாம்புகளும் (Cobras) சுற்றிச் சுற்றி வந்து 'ஹிஸ்ஸ்... என்ற சீறலுடன் ஒன்றன்மீது ஒன்று பலமுறை பாயும். பிறகு, ஒன்றையொன்று இறுக்கிப் பின்னிப் பிணைந்து சாய்ந்தாடியவாறு செங்குத்தாக நிலத்தில் நிற்கும். பார்ப்பதற்கு 'பாலே டான்ஸ்' போலிருந்தாலும், இந்தக் 'கட்டிப்பிடிப்பும்' புரளலும் மணிக்கணக்கில், சில சமயம் நாள் முழுவதும்கூடத் தொடரும் பலமுறை இரண்டும் நிலத்தில் விழுந்து விழுந்து எழும். கடைசியில் ஒரு பாம்பு சோர்வடைந்து, சோகமாகப் பின்வாங்கும்! (சோகம் என்பது உண்மை! பிறகு, குறுக்கே ஒரு எலி போனால் கூட, அதைப் பாய்ந்து பிடிக்காத அளவுக்கு பாம்பு 'அப்செட்' ஆகிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்')


இதைப் பார்த்துவிட்டு 'ஆணும் பெண்ணும் ஜோடியாக இப்படி ஆரத் தழுவிப் பிணைத்துக்கொண்டு பல மணிநேரம் உடலுறவில் ஈடுபடுகிறது' என்று பலர் நினைத்துக்கொள்கிறார்கள் அது தப்புக் கணக்கு!

இந்தப் பாம்புகளின் அருகில் சென்று பார்த்தால், ஒரு அதிர்ச்சி காத்திருக்கும்! இந்தத் 'தழுவலில்' ஈடுபட்ட இரு பாம்புகளுமே ஆண்கள்! அது அணைப்பும் அல்ல; மல்யுத்தம்! (விலங்கினங்களிலும் 'ஹோமோ செக்ஸ்' முயற்சிகள் உண்டு என்பது தனித் தகவல்)

அப்படியென்றால், பெண் பாம்பு எங்கே? அது புதருக்குப் பின்னால் பல கணியிலிருந்து பார்க்கும் இளவரசியைப் போல 'தேமே' யென்று காத்துக் கொண்டிருக்கிறது - மல் யுத்தத்தில் வெல்லப்போகும் சாம்பியனுடன் உடலுறவு கொள்வதற்காக!

ஒரு போட்டியாளருடன் சண்டை போட்டு ஜெயிக்காமலெல்லாம் பெண்ணுடன் செக்ஸ் வைத்துக்கொள்வது என்பது பாம்பு இனத்தில் கிடையாது!

நல்ல பாம்பு இப்படியென்றால், மற்ற ஒவ்வொரு பாம்பு வகைக்கும் ஒவ்வொரு விதமான தவிர்க்கமுடியாத போராட்டம் உண்டு.






[illegible]





கார்ட்டர் (Garter) பாம்பு என்று ஒரு வகை உண்டு. குறிப்பாக, வட அமெரிக்காவிலும் தென் ஆபிரிக்காவிலும் காணப்படும் இந்தப் பாம்புகள் காடுகளில், பாதுகாப்பான மிகப்பெரிய பொந்துக்குள் வசிக்கும். ஒரு பொந்தில் குறைந்தபட்சம் பத்தாயிரம் பாம்புகள் வளைந்து நெளிவதைப் பார்க்கவே உடல் நடுக்கும்! 'Snake Pit' என்று அழைக்கப்படுவது உண்மையில் இதுதான். ('இண்டியானா ஜோன்ஸ்' திரைப்படத்தில் ஹாரிஸன் ஃபோர்டு, இப்படியொரு பாம்புப் பொந்தில் தொங்கவிடப்படும் காட்சி உண்டு!)

இளவேனிற்பருவம் வந்தால்போதும்... கார்ட்டர் பெண் பாம்புகள் உடலுறவுக்குத் தயாராகி, ஒவ்வொன்றாக வெளியே வரும். அவைளுடன் செக்ஸ் வைத்துக்கொள்வதற்காக, பல்லாயிரக்கணக்கான ஆண்கள் சூழ்ந்துகொண்டு நடத்தும் போராட்டங்கள் இருக்கிறதே...

ஆயிரக்கணக்கில் பாம்புகள் உன்மத்தம் பிடித்ததுபோல வேட்கைச் சீறலுடன் சிலிர்த்தெழுந்து, வளைந்து நெளிந்து பாய்ந்து, செங்குத்தாக எழும்பி நின்று, ஒன்றையொன்று இடித்துப் பின்னால் தள்ள, மற்றப் பாம்புகளுக்கிடையே இண்டு இடுக்கியெல்லாம் புகுந்து - எப்படியாவது பெண் பாம்புகளுடன் உடலுறவு கொள்ள வேண்டி நிகழ்த்தும் அந்தக் கலாட்டாவைப் பார்க்கும்போது - அந்த இடம் ஒரு போர்க் களம் போல மாறிவிடும்!


ஒரு பெண்ணுக்கு நூறு ஆண்கள் என்கிற விகிதத்தில் நடக்கும் இந்தக் களேபரமான யுத்தத்தில், பலசாலிகளான ஆண்கள் மட்டுமே ஜெயித்து, பெண்களுடன் உடலுறவு கொள்கின்றன. செக்ஸ் முடிந்த கையோடு, ஆண் நகர்ந்து சென்று விட்டால், இன்னொரு ஆண் அந்தப் பெண்ணைப் புணர்ந்துவிடக்கூடும் அல்லவா? ஆகவே, ஒவ்வொரு ஆணும் 'செக்ஸ்' முடிந்தவுடன், தன் உறுப்பிலிருந்து கோந்து போன்ற திரவத்தைப் பீச்சி, பெண்ணின் உறுப்பை சீல் செய்துவிடும்!

இந்தத் திரவம் உடனே கெட்டிப்பட்டு விடுவதால், இன்னொரு ஆண் அந்தப் பெண்ணுடன் உறவுகொள்ள முடியாது! அதாவது - ஆண் மற்ற ஆண்களைத் தடுப்பதற்காகவே ஒரு கதவை உடனடியாக தயாரித்து மூடிவிடுகிறது!

இதன்மூலம், பெண் பிற்பாடு முட்டைகள் போட்டாலோ, குட்டிகளைப் பிரசவித்தாலோ (பாம்புகளில் இரு வகையும் உண்டு) அவை தனக்குப் பிறந்த குழந்தைகளாக இருக்க வேண்டும் என்பதை ஆண் பாம்பு நிச்சயப்படுத்திக் கொள்கிறது! இந்த விடயத்தில் ஆண் அவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்கிறது!

மனிதனுக்கு உள்ளே உள்ள அதே உணர்வு தான் பாம்புக்கும்! இல்லையா, வாசகர்களே!

வளரும்



# கண்ணீர்க் கோலங்கள்

சிறுகதை

கந்தர்மடம் தி. மயூரன்

இரவு முழுவதும் கைத் தொலைப்பேசி 'கவரேஜ்' இல்லாததில் செத்துக் கிடந்தது. காலையில் கவரேஜ் வந்ததும்தான் தாமதம் அலறிற்று. நான் பல்துலக்கிக் கொண்டிருந்தேன். மனைவிதான் எடுத்துக் கொண்டோடி வந்தாள். இன்னும் அதனைக் கையாளத் தெரியாது. வாங்கிப் பார்த்தேன். சிவலிங்கத்தின் இலக்கம். சிவலிங்கத்தின் தம்பிதான் குரல் கம்மப் பேசினார்.

''என்ன... எப்ப...?'' எனது அலறலைக் கேட்டு மனைவி பதறினாள்...

''பிரியா... தற்கொலை செய்திட்டாளாம்...!''

''ஐயோ... ஏன்... எதுக்கு...?''

''என்ன மாதிரியான பிள்ளை... எல்லாம் பேசித்தீர்த்திருக்கலாம். ஏன் அவசரப்பட்டாளோ தெரியவில்லை. நான் ஒருக்காப் போயிட்டு வாறான்...!'' அவசரமாய்ப் புறப்பட்டேன்.

வாழைதோரணங்கள் அதுக்கிடையில் கட்டப்பட்டு விட்டன. செய்தியறிந்து உற்றார், உறவினர் சிலர் கூடியிருந்தனர். நடுவீட்டில் பிரியா நிரந்தரமாய் உறங்கிக் கொண்டிருந்தாள். வெற்றியில் கட்டுப் போடப்பட்டிருந்தது. மரணத்தால் கூட அவளின் உதட்டுப்புன்னகையைப் பிரிக்க முடியவில்லை. மெதுவாய் உள்ளே நுழைந்தேன். சிவலிங்கமும், கோமதியும் என்னைக் கண்டதும் கதறத் தொடங்கினர்.

''ஓடியோடி எத்தினை தரம் வருவீங்களே. அவளுக்கு கலியாணத்தை முற்றாக்க எவ்வளவு பாடுபட்டியள்? எல்லாத்தையும் வேண்டாமென்று போட்டாளே...?''

'' பார்த்தியேடா. என்ன கெட்டிக்காரி, எத்தனை பொறுப்பான பிள்ளையென்று சொல்லுவியேடா... எல்லா வேலையையும் அவளே செய்யிறாள்... என்ன துணிவான பொம்பிளையென்று சொல்லுவியே...? பார்த்தியே... அவளின்ர பொறுப்பான வேலையை. எங்களையெல்லாம் விட்டுட்டு ஒரேயடியாய்ப் போயிட்டாளே... என்று நெஞ்சு வெடிக்குதேயடா...!'' கதறிய சிவலிங்கத்தை அணைத்துக் கொண்டேன். வழிந்த கண்ணீரை துடைத்துக்கொண்டேன்.

நேற்று பின்னேரம் தான் நடந்திருக்கு. உங்களுக்கு அடிச்சுச் சொல்லியிருப்பம். கவரேஜ் இல்லை. இரவுதான் கண்டிருக்கனம். பக்கத்துவீட்டு லாண்ட்போனில் அடிச்சு, கொஸ்பிற்றலுக்குச் சொல்லி அம்புலன்ஸில் கொண்டு போனவை. அதுக்கு முந்தியேயெல்லாம் முடிஞ்சுது. விடியவே என்பாம் பண்ணிக் கொண்டாந்திட்டம்...!'' சிவலிங்கத்தின் தம்பி விளக்கிக் கொண்டிருந்தார்.

சனங்கள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஆட்கள் வர அழுகையும் கூடிக்குறைந்து கொண்டிருந்தது.

''விசர்ப்பெட்டை... கனக்க யோசிச்சிட்டுதுபோல...''

* * *

அன்றும்... நிறையப்பேர் கூடியிருந்தார்கள். நான் ஏற்கனவே இவையெல்லாவற்றையும் கேள்விப்பட்டிருந்ததால் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தேன். சிவலிங்கத்தின் மனைவி கோமதிதான் விளக்கமாய்க் கூறிக்கொண்டிருந்தாள்.

''இரவு பதினொரு மணியிருக்கும். மூன்று, நாலு மோட்ட சைக்கிள்கள் வந்து வீட்டுக்கு முன்னால நின்றன. கோர்ண் அடிச்சாங்கள். 'அன்ரி... அன்ரி' யென்று கூப்பிட்டாங்கள். நாங்கள் எழும்பினாலும் கதவைத் திறக்கவேயில்லை. பிறகு 'கேற்றால்' ஏறிக்குதிச்சு. வந்து கதவைத் தட்டினான். நாங்கள் 'கள்ளன்! கள்ளனென்று' கத்தினோம். 'கதவைத் திறவுங்கோ... பெற்றோல் முடிஞ்சுது... பெற்றோல் கொஞ்சம் குடுத்தாப் போயிடுவம்' என்றார்கள். நாங்கள் கத்தினோம். பிரயோசனமில்லை. கதவைக்கொத்தி உடைச்சு உள்ளவந்திட்டாங்கள். எல்லாரையும் ஒன்றாய் கட்டி நடு ஹாலில் இருத்திட்டாங்கள். இவரை அடிச்சு இழுத்துக் கொண்டு திரிஞ்சாங்கள். ஒவ்வொரு அறை, குசினி, பாத்ரூமென்று விடாமல் கிண்டிக்கிழறி. எல்லாத்தையும் கொண்டு போயிட்டாங்கள்..''

''ஆக்களை எதாவது அடையாளம் தெரிஞ்சுதே....?''

''இல்லை. கறுத்தத்துணியால முகத்தை மூடியிருந்தவங்கள். நல்லாத்தமிழ் கதைச்சவங்கள். சாராயமணம் குப்பென்று அடிச்சுது. நல்ல வெறியிலதான் வந்தங்கள்...!''

'எங்கட தமிழாக்களாத்தானிருக்கும். இந்த அரசியல் குழப்பத்தை வைச்சு.. கொஞ்சம்பேர் நல்லா உழைக்கத் தொடங்கீட்டாங்கள். நல்ல தொழில்தானே... உடம்புநோகாத தொழில். வருஷத்தில ஒருநாள் கொள்ளையடிச்சா... போதும். வருஷம் முழுக்க இருந்து தின்னலாம். யாரிட்டச் சொல்லுறது..? யார் தடுக்கிறது..?என்ன செய்யேலும்...?'' இன்னொருவர் ஆதங்கப்பட்டார்.

''ஆனாலும், நல்ல காலம். கோமதி... ஒருத்தனையும் பெரிசாய் ஒன்றும் செய்யேல்லை. உயிருக்கு ஆபத்தில்லாமல் போயிட்டுது. நல்லகாலம்...!'' பக்கத்து வீட்டுப் பெண்ணொருத்தி ஆறுதலாய்ச் சொன்னாள்.

''பிரியாவுக்கு 'எழுத்து' வைச்சிருக்கிறது நல்லாத் தெரிஞ்சுதான் வந்திருக்கிறாங்கள். இந்த றோட்டுல எத்தினை பணக்காரங்கள் இருக்கிறாங்கள்..? அங்கயெல்லாம் போகம இங்க மட்டும்தான் வந்தா... என்ன அர்த்தம்? எல்லாம் நல்லாத் தெரிஞ்சுதான் வந்திருக்கிறாங்கள்.'' கோமதி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''என்றாலும் நீங்கள் கொஞ்சம் உஷாராய் இருந்திருக்கலாம். நாட்டுல நடக்கிறது பார்க்கிறீங்கள், கேட்கிறீங்கள் தானே. பாங்குல வைச்சிருந்திருக்கலாம்..!''

''யாழ்ப்பாணத்தில் எந்த பாங்குல லொக்கரிருக்குது..?''

''இல்லை... அடகுவைச்சிட்டு. அந்தக்காசை பாங்குல போட்டாச் சரியாயிருக்கும். நாங்கள் கொஞ்சக்காசைத்தான் கட்டவேண்டியிருக்கும். இதுதானிப்ப. பாதுகாப்பான வழி..!''

''உதெல்லாம் யார் யோசிக்கிறது? அடுத்த கிழமை எழுத்து. அதுக்குப்போட நகை தேவைதானே..? எல்லாத்தையும் பாங்குல வைச்சிட்டு எழுத்துக்கென்னத்தைப் போடுறது..?''

''காசும் போனதே..?''

''எழுத்தன்று மாப்பிள்ளை வீட்டுக்கு சம்பிரதாயமாய் குடுக்கிறதுக்கு மூன்று லட்சச்கொச்சம் வைச்சிருந்தனாங்கள். பாங்கில இருந்த காசு. பிக்ஸ்டெபசிற்றைக் கன்சல் பண்ணி காசாய் வைச்சிருந்தனாங்கள். இவரைப் போட்டு அடிக்க. பிரியாவே குடுத்திட்டாள்...!'' கோமதி கூறிக்கொண்டிருக்க. பிரியா முகத்தை துடைத்துக் கொண்டிருந்தார்.

''அப்பாவுக்கு ஏற்கனவே சலரோகம். அடிச்சு. காயம் வந்தா பிறகு ஆறவே மாட்டுது. காசு போனா உழைக்கலாம். அப்பாவுக்கேதாவதென்றா... நாங்கள் என்ன செய்யிறது...?

''பொலிசில என்ரி போட்டதே...?''

''என்னென்ன செய்யவேணுமோ... அத்தனையும் செய்தாச்சு. கிடைக்கிற பலனென்றால் கிடைக்கும். இல்லையென்றால்... அழுது குழறுறதாலயோ யோசிச்சு மண்டையை உடைக்கிறதாலயோ... எதுவுமே நடக்காது. திரும்பத் திரும்ப அதையே கதைக்காமே வேற கதையுங்கோ...!'' எனக்கு வேற என்ன கூறுவதென்று தெரியவில்லை.

* * *

பிரியாவினுடைய விடயத்தில் நான் நுழைந்தது... சிவலிங்கம் குடும்பத்துடனான அன்பினாலும், அக்கறையாலும்தான்.

''பிரியா ஏதோ முக்கியமான விசயம் என்னோட பேசப்போறாளாம். உன்னையும் உடனிருக்கட்டாம்.. நீயும் வாடா..!'' சிவலிங்கம் ஒரு சில மாதங்களுக்கு முன்பு அழைத்தபோது மறுக்க முடியவில்லை. போனேன். பிரியா தன்னம்பிக்கையான, துணிவான பெண் என்பது எனக்கு ஏற்கனவே தெரிந்ததுதான். இன்னும் கொஞ்சம் தெரிந்தது.

''சுரேஷுக்கும் எனக்கும் லவ் என்றது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். சுரேஷிற்கு எங்கட குடும்ப நிலைமை தெரியும். நானும் போதியளவு தெளிவுபடுத்தீட்டன்.. நீங்களப்பா, எதைப் பற்றியும் கவலப்படத் தேவையில்லை..!'' பிரியா தன்னுடைய பெரிய விழிகளை இன்னும் அகலமாக்கிக்கொண்டே சொன்னாள். மாலை வெயில் அவளை இன்னும் மஞ்சளாக்கியிருந்தது. சிவலிங்கம் என்னை பார்த்தார்... 'எப்படி என்ர பிள்ளையை வளர்த்திருக்கிறேன் பார்த்தாயா...?' என்ற பெருமை தெரிந்தது. ஆனால் கோமதிதான் பதறினாள்.

''தகப்பனுடைய கடமையென்னமோ... மகளுக்கு என்ன செய்ய வேணுமோ... அதுகளை - கடமைகளை - முடிஞ்ச மட்டும் செய்வன். லவ் பண்ணீட்டாய் என்றதுக்காக அப்படியே சந்தோஷமாய் போவென்று தள்ளி விட்டுற மாட்டன்...!'' சிவலிங்கம் நாடியைத் தடவிக் கொண்டே சொன்னார்.

''நீங்களும் அவளோட சேர்ந்து கொண்டு... பல்லைப் பொத்தி ரெண்டு குடுத்தாத் தான் அடங்குவாளவை...!'' இனி நீ லவ்வென்று இழுபட காயத்திரியும் தொடங்குவாள். எங்கட குடும்பத்தைப் பற்றி என்ன நினைப்பாங்கள்..? எவ்வளவு கேவலமாய் பேசுவாங்கள் தெரியுமா..?'' பதறிய கோமதியை பிரியா எரிச்சலுடன் பார்த்தாள்.

''அம்மா! கேவலமாய் பேசுறவை. உனக்கோ.. உன்ர பிள்ளையளுக்கோ ஏதாவது உதவி செய்யுமா..? பேசுறவாய் பேசட்டும் சிரிக்கிறவையே சிரிக்கட்டும். இதுக்கெல்லாம் கவலைப்பட்டா இங்க வாழேலாது. என்ர வாழ்க்கையை தீர்மானிக்கிற உரிமை எனக்கும் என்னை பெத்தவங்களுக்கும் மட்டும் தானிருக்கு.

றோட்டுல சிரிக்கிறவன், அழுறவனெல்லாம் தீர்மானிக்கேலாது. சுரேஷ் என்னை பொறுத்தவரைக்கும் குணமானவர், நல்லவர். எனக்குப் பொருத்தமானவரென்று நினைக்கிறன். அதுல எதாவது பிரச்சினை உனக்கிருந்தா சொல்லு. அதைவிட்டுட்டு... அவை சிரிப்பினம்.. இவை அழுவினமென்ற கதை வேண்டாம். என்ன அங்கிள் நான் சொல்லுறது...?''

பிரிய என்னைக்கேட்க நானும் எதாவது சொல்லவேண்டியிருந்தது.

''சுரேஷ் நல்ல பெடியன்தான். பிரியாவுக்கு ஏற்றவன்.! இப்ப கோமதிக்கு என்ன பிரச்சினையென்று எனக்கு விளங்கேல்லை..!'' நானும் இழுத்தேன் மெதுவாக.

''இல்லையண்ணை.. சுரேஷ் வீட்டுல என்ன சொல்லுவினமோ., என்ன எதிர்ப்பார்க்கினமோ... சுரேஷ் சொல்லுவார். 'வீட்டுல கேட்கமாட்டினமென்று!' ஆனா வீட்டுக்காரர் சுரேஷை நாங்கள் மடக்கீட்டினமென்று பிரச்சினையெடுப்பினமோ.. அதுதான் பயமாயிருக்கு..!''

''அது சுரேஷோட பிரச்சினை. அது எங்களுக்குத் தேவையில்லாதது. அவருக்கும் சீதனம் கேட்கிறதில விருப்பமில்லை. சரி, நீங்கள் சொல்லுங்கப்பா.. அவருக்கு நான் என்ன சொல்லுறதென்று...!''

''இந்த வீட்டுல பாதி உனக்கு. அதோட எட்டு லட்சம் காசும், இரண்டு லட்சத்துக்கு நகையுமிருக்கு.. என்னால் முடிஞ்சது இதுதான். இதுக்கு மேல என்னால் எதுவும் செய்யேலாது..!''

''ஒகே, அவரிட்டச்சொல்லுறன்., நீங்கள் கவலைப்பட வேண்டாம்...!''

''எனக்கு பயமாயிருக்கு, இந்தச் சீதன விசயங்கள் எல்லாம் பெரியாட்கள், அனுபவசாலிகள்தான் பேசி முற்றாக்கவேணும். நீங்கள் சின்னஞ்சிறிசுகள். கதைச்சு பிரச்சினையாகலாம்..!'' கோமதி என்னைப் பார்த்துச் சொல்ல, நான் சிவலிங்கத்தைப் பார்க்க, அவரும் ஆமோதித்தார்.

''இதுக்குத்தான் நான் உன்னையும் வரச் சொன்னனான். இப்ப விளங்குதே? உனக்குத்தான் எங்கட குடும்பத்தைப் பற்றியும், சுரேஷின்ர குடும்பத்தைப் பற்றியும் வடிவாத் தெரியும். ரெண்டு குடும்பத்தோடயும் உனக்கு நல்ல பழக்கமும் கூட. நீதான் எப்படியும் அங்க போய் கதைச்சு முற்றாக்கவேணும். எனக்கு வேற நம்பிக்கையான ஆள் கிடையாது...!'' சிவலிங்கம் தழதழத்தவாறு கேட்க எனக்குத் தர்ம சங்கடமாயிற்று.

''நிச்சயமாய் என்னால் முடிஞ்சதைச் செய்வேன். கதைச்சுப் பார்க்கிறன்..!'' நான் எழுந்து கொண்டேன். வீடு வந்ததும் மனைவி என்னைப் பிடித்துக் கொண்டாள்.

''எதுக்கிப்ப புறோக்கர் வேலைக்கு சம்மதிச்சனியள்? உங்களுக்கு உங்கட வேலையையே செய்யத்தெரியாது. இதுல கலியாணப் புறோக்கர் வேலைக்கு வெளிக்கிட்டிட்டியள். எங்கட வீட்டுலயும் ஒருகுமர் இருக்கிறது தெரியுமோ? அதுக்கொரு வழியைப் பண்ணுறதைவிட்டுவிட்டு.. பிறத்தியாருக்குத்தான் ஓடியாடித்திரியுறியள்..!''

''சிவலிங்கம் என்ர நீண்டகாலச் சிநேகிதன்.. எதோ என்னால் ஆன உதவியைச் செய்யப்போறன்.. சுரேஷ் லவ் பண்ணுறதால பெரிய வேலையில்லை..!''

* * *

மாலை சுரேஷ் வீடு போனேன். சாதாரணமாய்த் தொடங்கி சரியான நேரம் விடயத்தைப் போட்டு உடைச்சேன். சுரேஷின் அப்பா திருஞானம் திகைக்கவில்லை. அசரவுமில்லை. ஏற்கனவே எல்லாம் தெரிந்திருக்கும்போல. திருஞானம் பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டே தூரத்தைப் பார்த்தார். முற்றத்து மாமரத்தில் பறவைகளின் கீச்சொலி கேட்டுக்கொண்டிருந்தது. நான் அவற்றைக் கேட்டுக்கொண்டிருக்க சுரேஷ் மோட்டார் சைக்கிளில் வந்திறங்கினான். என்னைப் பார்த்தவன் சிரித்துக்கொண்டே உள்ளே போய் விட்டான்.

''உனக்கும் எங்கட குடும்ப நிலைமை தெரியும்.. சாதாரண மிடில் கிளாஸ் பேமிலி. ஒருத்தியின்ர கலியாணத்தை முடிச்சிட்டன். இன்னொருத்தி படிக்கிறாள். வயசிருக்கு எனக்கு சுரேஷிற்கு நல்ல இடமாய் கொஞ்சம் வசதியான இடத்தில் சம்பந்தம் பேச வேண்டுமென்றது விருப்பம். ஆனா இனியென்ன செய்யிறது? விரும்பீட்டினம். நாங்களென்ன தடுத்தாலும் வீண் சச்சரவாய் முடியும்..!''

''நீங்கள் சொல்லுறதும் உண்மைதான். சுரேஷின்ர குணத்துக்கும் பெர்சனாலிற்றிக்கும் நல்ல சம்பந்தம், சீதன பாதனத்தோட தேடிவரும். ஆனா என்னயிருந்தாலும் காசு பணத்தோடவாற பொம்பிளையைவிட பிரியா குணமான பிள்ளை உங்கட குடும்பத்துக்கேற்ற மருமகள்...''

''குணத்தை வைச்சு என்ன கோயில் கட்டிக் கும்பிடுறதே? இந்தக் காலத்துல காசு, பணம், வசதிக்குத்தான் முதல்

(27 ஆம் பக்கம் பார்க்க)

# வளர் இளம் பருவத்தில் வருகின்ற சிக்கல்கள்



**கேள்வி:** வயது 22. ஆண். சிறுவயதி லிருந்தே எனது உறுப்பின் முன்தோல் உறுப்புடன் ஒட்டியிருந்தது. நான் முயற்சித்து அதனை பின்னால் இழுத்துப் பிரித்தேன். ஆனாலும் தோலைப் பின்னால் இழுத்து சுத்தம் செய்த பின்னர் - அது தானாக முன்னால் வராது. இழுத்துத்தான் முன்னால் விடவேண்டும். இதனால் எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படுமா? குடும்ப வாழ்வு பாதிக்குமா? பரிகாரம் ஏதாவது உண்டா?

**பதில்:** முன்தோல், உறுப்பின் மேல் இலகுவாகப் போய்வராது இருந்தால் இதனை PHIMOSIS - தோல் இறுக்கம் - என்று அழைப்பார்கள். அப்படிப் பின்னால் இழுபட்ட தோல் முன்னால் வராமலிருந்து, வீக்கம் அடைத்தால் அதனை PARAPHIMOSIS என்று குறிப்பிடுவார்கள். இந்த இரண்டு கோளாறுகளுமே குடும்ப உறவில் பிரச்சினை தரக்கூடியவை. உறவின் போது சிறிதளவு வலி ஏற்பட்டாலும், வலியினால் உறுப்பு தளர்ந்து போய், உறவுகொள்ள இயலாமல் போய்விடும். இது மனத்தாக்கத்தை ஏற்படுத்தி, குடும்ப உறவைத் திருப்திபடுத்தாது. என்றாலும் இந்தப் பிரச்சினைகள் ஒன்றும் பெரிய பிரச்சினைகள் அல்ல. இந்தப் பிரச்சினைகளுக்கு சிறியதொரு சத்திரசிகிச்சையான - CIRCUMCISSION செய்தால்போதும். முன்தோலை விறைப் பூட்டி (LOCAL ANALGESIA) அளவுக்கு கத்தரித்து விடுவதே இந்த சத்திரசிகிச்சை. இது பயமின்றி செய்யக் கூடியது. எதற்கும் உங்கள் பிரச்சினைக்கு ஒரு சத்திரசிகிச்சை வைத்தியரின் ஆலோசனையைப் பெறவும்.

***

**கேள்வி:** வயது 13. யாராவது என் சிறிய தவறுக்கு உரத்து சப்தம் போட்டாலோ, புத்தி சொன்னாலோ, அல்லது சோகக் காட்சிகளை திரைப்படத்தில் பார்த்தாலோ, தொலைக் காட்சியில் பார்த்தாலோ, பயங்கர ஆத்திரம் வந்தாலோ - என்னை அறியாமலே - அடக்க முடியாமலே - அழுது விடுகின்றேன். இதனால் பாடசாலையில் கேலிக்குள்ளாகின்றேன். ஆலோசனை தரவும்.

**பதில்:** நீங்கள் இப்பொழுது ஒரு முக்கியமான பருவ வயதை அடைந்து கொண்டிருக்கின்றீர்கள். இதனை வளர் இளம்பராயம் - Adolescent பருவம் - என்று குறிப்பிடுவார்கள். இந்தப் பருவத்தில் உங்கள் உடலில் ஆண்மைக்குரிய ஹோர்மன்கள் சுரக்க ஆரம்பிக்கும். இந்த ஹோர்மன்களின் தாக்கத்தால் உணர்ச்சிகள் கொப்புளிக்கும். உணர்ச்சிகள் பீறிட்டு எழுந்து ஆத்திரமாகவோ, கண்ணீராகவோ வெளிப்படும். சிறிய சிறிய கடுஞ்சொற்களைத் தாங்கமுடியாது. மற்றவர்கள் புத்திமதி கூறினால் ஆத்திரம்தான் வரும். நினைத்ததை நடத்த வேண்டும், செய்து முடிக்கவேண்டும் என்ற ஆவேசம் வரும். ஆத்திரத்தை மற்றவர் மேல் காட்டமுடியாமல், கதவை இறுக்கி அடித்துச் சாத்துவீர்கள். துவிச்சக்கர வண்டியை ஆத்திரத்தில் கண்மண் தெரியாமல் ஓட்டுவீர்கள். உலகமே உங்களுக்கெதிராகச் சதி செய்வதுபோல உணர்வீர்கள். மற்றைய சகோதரங்களை விடப் பெற்றோர் உங்களைத் தாழ்வாக, மதிக்காமல் நடப்பதாக நம்புவீர்கள். இதெல்லாம் ஹோர்மோன்கள் செய்யும் விளையாட்டுகள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

குழந்தைப் பருவத்துக்கும், இளைஞர் பருவத்துக்கும் இடைப்பட்ட ஒரு பருவகாலப் பகுதியைக் கடந்து கொண்டிருக்கின்றீர்கள். இதனை வெற்றிகரமாகக் கடந்தீர்கள் என்றால் - நாட்டுக்கும் வீட்டிற்கும் ஒரு நல்லதொரு இளைஞனாக வருவீர்கள்.

முதலில் இதுதான் பிரச்சினை என்பதைப் புரியுங்கள். உங்களுக்கு ஆத்திரம், சோகம் தோற்றுவிக்கும் சூழ்நிலைகளைத் தவிருங்கள். நல்லதொரு, நம்பிக்கையான நண்பர் குடும்பத்தோடு கலந்துரையாடுங்கள். நிறைய தேகப்பயிற்சி செய்யுங்கள். உடல் களைத்து உறங்கச் செல்லுங்கள். சத்தான உணவுகளை உண்ணுங்கள். பெரியோரின் அறிவுரைகளுக்கு காது கொடுத்துக் கேட்போம் என்று உறுதிகொள்ளுங்கள். ஒரு சில வருடங்களில் உங்களுக்கு நெஞ்சில் உரமும், உறுதியும், தெம்பும், தேகாரோக்கியமும் ஏற்படும். இன்னும் உங்களுக்கு உங்களைச் சமாளிக்க முடியாமல் இருந்தால் உங்கள் பிரதேசத்தில் FAMILY HEALTH BUREAU அல்லது FAMILY PLANNING ASSOCIATION என்கின்ற நிறுவனங்களின் ஆதரவில் உளவள ஆலோசகர்கள் - COUNSELLORS ஆலோசனை பெறவும்.

***

**கேள்வி:** ஆண். எனக்கு அடிக்கடி ஆண் உறுப்பு விறைத்து எழுகின்றது. இதனால் சில வேளைகளில் தர்மசங்கடமான நிலை ஏற்பட்டுள்ளது. இப்படி விறைப்பு ஏற்பட்டு நெகிழும்போது பசை போன்ற திரவம் வடிகின்றது. எனது வயது 16. மாணவனாக இருக்கின்றேன். பரிகாரம் கூறவும்.

**பதில்:** நீங்கள் இப்போது Adolescent எனப்படும் வளர் இளம் பருவத்தை கடந்து கொண்டிருக்கின்றீர்கள். இந்த பருவகாலத்தில் உங்களது ஆண் ஹோர்மோன்கள், மனதில் பால் உணர்வுகளைத் தூண்டிவிடும். இதனால் தான் இப்படி விறைப்பு ஏற்படுகின்றது. காமந்தகரமான எண்ணங்கள், உணர்ச்சியை கிளறும் திரைப்படங்கள், நாவல்கள் என்பனவும் இத்தகைய உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடியவை. இப்படி உணர்வுகள் தூண்டிவிடப்படும்போது. விந்துப்பை நெகிழ்ந்து, விந்துத் திரவத்தை வெளியேற்றுகின்றது. இதனால் தான் விறைப்பின் பின்னர் பசை போன்ற திரவம் வடிகின்றது. நல்ல நண்பர்கள் கூட்டு, உடல் களைப்படையை தேகப் பயிற்சி, கல்வியில் கூடிய சிரத்தை போன்றவை இந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்தக்கூடியவை. அதுதவிர இப்படியான உணர்வுகள் இந்தப் பருவத்தில் கிளர்ந்தெழுவது சகஜமானதே.

இது ஒரு நோயல்ல. இது பற்றி கவலைப்படவேண்டிய அவசியமில்லை.

***

**கேள்வி:** வயது 18. ஆண். எனது கண்பார்வை 16 வயதிலிருந்து குறைந்து வந்து - இப்போது கண்ணாடி அணிய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. என்னைப் போல் இளம்வயதினர் பார்வைக் கோளாறுகளுக்காக கண்ணாடி அணிவதை நாளாந்தம் கவனித்துள்ளேன். எனது தந்தையார் கண்ணாடி அணிபவர். அவர் தனது 40 வயதில்தான் கண்ணாடி போடவேண்டி ஏற்பட்டது என்கிறார். எனது தாயாரும் 45 வயதின் பின்னரே மூக்குக் கண்ணாடி அணிந்தார். எனது தந்தை வழி பாட்டனார், பாட்டி எல்லோரும் மரணமடையும் வரை கண்ணாடி அணியாமல் - எது வித பார்வைக் கோளாறும் இல்லாமல் வாழ்ந்தார்கள். அவர்கள் இறக்கும்போது இருவரும் 85 வயதைத் தாண்டி இருந்தார்கள். தற்காலத்தில் இளவயதில் என்னைப் போல பலர் கண்ணாடி அணியும் அவசியம் ஏற்படக் காரணம் என்ன? பாட்டனார் காதுகுத்தி, கடுக்கன் போட்டபடியால்தான் அவரது கண்கள் இறக்கும் வரை கோளாறு இல்லாதிருந்தன என்று எனது தந்தையார் கூறுகின்றார். காதுகுத்தி கடுக்கன் போட்டால் பார்வைக் கோளாறு வராது என்பது உண்மையா? எனது சந்தேகங்களைத் தீர்க்கவும், அத்துடன் எனது பார்வைக் கோளாறு தீர்ந்து கண்ணாடி அணியாமல் வாழ்வதற்கு ஏதாவது மருந்துகள்,பயிற்சிகள் உள்ளனவா என்பதை அறியத்தரவும்.

**பதில்:** நீங்கள் கூறியிருப்பதுபோல். தற்காலத்தில் - இளவயதில் கண்ணாடி அணிபவர்கள் அநேகர். பார்வைக் கோளாறு, கண்களில்பூவிழுதல், இதயக் கோளாறு, நீரிழிவு, புற்றுநோய் போன்றவற்றால் இளவயதில் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போவதாக மருத்துவ உலகில் அறியப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணமாக தற்காலத்து உணவு முறைகள், சூழல் மாசடைதல், மன இறுக்கம் என்பவை சொல்லப்படுகின்றன. Free Radieals என்கின்ற சில காரணிகள் மாசடைந்த சூழல், சில உணவுப்பொருட்கள் என்பவற்றில் இருக்கின்றன. இவை எமது உடல் திசுக்களோடு தொழிற்பட்டு, திசுக்களின் சாதாரண வளர்ச்சியைத் தடுக்கின்றன. சில திசுக்களை புற்றுநோய் கலங்களாக உருமாற்றுகின்றன. கொலாஜின் திசுக்களை பாதித்து - தோலில் சுருக்கங்களை ஏற்படுத்தி வயதான தோற்றத்தைத் தருகின்றன. கண்களின் வில்லைகளைப் பாதித்து இளவயதில் கண்களில் பூவிழச் செய்கின்றன. கண்வில்லைகளின் தொழிற்பாடுகளைப் பாதித்து - பார்வைக் கோளாறுகளைத் தருகின்றன.

இவையாவும் மருத்துவ விஞ்ஞானத்தால் நிரூபிக்கப் பட்டுள்ளன. இந்த Free Radiealsகள் தான் பல நோய்களுக்குக் காரணமாக கற்பிக்கப்படுகின்றன. இந்த Free Radieals இன் தாக்கத்தைத் தடுக்கக்கூடியவை பழவகைகளும், காய்கறிகளும் தான். இவற்றில் உள்ள இயற்கையான வைட்டமின்கள் - முக்கியமாக வைட்டமின் 'சி' சத்து Free Radieals தாக்கத்தைத் தடைசெய்கின்றது. எனவேதான் இளவயது நோய் பிரச்சினைகள், பார்வைக் கோளாறுகள் இன்று அதிகமாக காணப்படுகின்றன.

உங்கள் மூதாதையர் காலத்தில் Free Radieals சூழலில் உருவாகக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை அவர்கள் நீண்டகாலத்திற்கு ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். மேலும் 'கடுக்கன்' பற்றிக் கூறியிருந்தீர்கள். சீன அக்யூபங்சர் மருத்துவத்தில் Ear Acupuncture என்ற ஒரு பிரிவு உண்டு. உடலில் ஏற்படும் நோய்களுக்கு காதில் ஊசி துளைத்து மருத்துவம் செய்வது இந்தமுறை. இதன் பிரகாரம் நாம் காது குத்தும் இடத்தில் உள்ள அக்யூபங்சர் புள்ளி 'கண்'ணுக்குரியது. கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு இந்த இடத்தில்தான் சிகிச்சை அளிப்பார்கள். பண்டையகாலத்தில் அக்யூபங்சர் வைத்தியம் இந்தியாவில் பரவியிருந்ததால் என்னவோ அல்லது அக்யூபங்சரை ஒத்த வைத்திய முறை இந்தியாவில் இருந்ததாலோ என்னவோ காதுகுத்தும் முறை மருத்துவ அடிப்படையில் உருவாகியிருக்கும் வாய்ப்பு உண்டு.

உங்கள் பார்வைக் கோளாறு எத்தகையது என்பது தெரியாமல் சிகிச்சை கூறுவது சரியல்ல. என்றாலும் பொதுவான பார்வைக் கோளாறுகளுக்கு சில கண்பயிற்சிகள் (Eye Exercise) மூலம் அந்தப் பார்வைக் கோளாறுகளைக் குணமாக்க முடியாவிடினும் பார்வைக்கோளாறு மேலும் அதிகரிக்காமல் தடைசெய்யமுடியும்.

*

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை, கொழும்பு-14.




சுடர் சிந்தனை :- "தொடர்ச்சியான பயிற்சியே வெற்றிக்கு வழி"

# தரம்-05 புலமைப்பரிசில்

## விசேட மாதிரி வினாத்தாள் - 07

மாணவர் பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

பாடசாலை/கல்வி நிலையம் : ..........................................................

மாவட்டம் : ..........................................................

தொலைபேசி இலக்கம் : ..........................................................

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**


**பகுதி - I**

முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.


01. மென்மை - அழகு - பாயும்




1)  2)  3) 


02. நீர் - வர்ணம் - கொடி




1)  2)  3) 

3ஆம், 4ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட உருக்களின் தொடா பினை அவதானித்து அடுத்துவரும் உருவின் கீழ் கோடிடுக.


03. 

 1)  2)  3)

04. 




 1)  2)  3)

05. இவ் உருவில் உள்ள ஆகக்கூடிய செவ்வகங்கள் எத்தனை?







1) 18  2) 12  3) 16

6ஆம், 7ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவங்களுள் இரண்டு ஒத்த தன்மை உடையவை. அவற்றின் கீழ்க் கோடிடுக.


06.    




(A) (B) (C) (D)


07.    



(A) (B) (C) (D)

8ஆம், 9ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருக்களின் இடைவெளிகளில் வரவேண்டிய மிகப்பொருத்தமான பகுதியின கீழ்க் கோடிடுக.

08. 

1)  2)  3) 

09. 

1)  2)  3) 

10ஆம், 11ஆம் வினாக்களில் உள்ள பழமொழிகள் உணர்த்தும் கருத்துக்களைத் தெரிவுசெய்க.

10. இளங்கன்று பயமறியாது
    1) சிறிய கன்றுக்கு எப்போதும் பயம் இருக்காது.
    2) இளமைப்பருவம் துணிவு கொண்டது.
    3) இளமைப்பருவத்தில் பயப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதில்லை.

11. சிறு துரும்பும் பல்குத்த உதவும்
    1) சிறிய துரும்பைக் கொண்டே பல் குத்த வேண்டும்.
    2) சிறிய பொருட்களை சேர்த்து வைத்தல் வேண்டும்.
    3) எதனையும இகழ்ந்து பேசலாகாது.

12ஆம், 13ஆம் வினாக்களுக்கு பின்வரும் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு விடை தருக.

1 மாம்பழம் + 2 தோடம்பழம் → 70

3 மாம்பழம் + 4 தோடம்பழம் → 160

12. ஒரு மாம்பழத்தின் விலை யாது?
    1) 25  2) 20  3) 30


13. 5 மாம்பழம் வாங்கும் விலைக்கு எத்தனை தோடம்பழங்களை வாங்கலாம்?
    1) 2  2) 3  3) 4


14. காலையில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த கபிலனின் நிழல் அவனுக்குப் பின்னால் விழுந்தது. எனின், அவன் எத்திசையினை நோக்கி பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்திருப்பான்?
    1) கிழக்கு.  2) மேற்கு.  3) வடக்கு


15. அண்ணன், தம்பி இருவரதும் வயதுகளுக்கிடையில் உள்ள வித்தியாசம் 6 ஆண்டுகளாகும். இருவரதும் வயதுகளின் கூட்டுத்தொகை 34 ஆகும். எனின், அண்ணனின் வயது யாது?
    1) 14  2) 20  3) 28

16. ஒரு முக்கோண வடிவான உருவினை ஆக்க அதன் பக்கங்களுக்கு குண்டூசிகள் பொருத்தப்பட்டன. ஒரு பக்கத்திற்கு 9 குண்டூசிகள் பொருத்தப்பட்டன எனின், அவ்வுருவை அமைக்கத் தேவையான குண்டூசிகள் எத்தனை?
    1) 27  2) 24  3) 30

17. விளையாட்டு, கிரிக்கெற், வொலிபோல் என்பவற்றிற்கிடையிலான தொடர்பைக் காட்டும் சரியான உரு எது?
    A விளையாட்டு.
    B கிரிக்கெற்.
    C வொலிபோல்.

1) 


2) 


3) 

# கவிதைப்புனல்

## வளங்குன்றும் தமிழணங்கு

அழகு தமிழ் அம்மா அப்பா அருகிடலாச்சு
ஆங்கிலத்து மம்மி டடி அரங்கேறலாச்சு
பழகுதமிழ் பண்புமிகு பெயர் ஒழியலாச்சு
பைந்தமிழும் பாழ்பட்டுப் போயிடலாச்சு

அமிழ்தமென இனித்தமொழி அஃதிழந்து போச்சு
அவனிமிசை நம்மொழியும் அழகிழந்துபோச்சு
தமிழ்மொழியே மூச்சென்ற சான்றோரும் போனதனால்
தரணியில் தமிழதுவும் தலைகுனிந்து போச்சு

கண்டவுடன் காதலாய்க் கூறுகின்ற வந்தனங்கள்
காற்றோடு போயகன்று கனகாலமாச்சு
பண்டைத்தமிழரது பண்பாட்டை மறந்தின்று
பாரினிற் தமிழ்வெறுக்கும் காலமாச்சு

பண்டிதர்கள் பேச்சினிலும் பைந்தமிழ் அகன்றாச்சு
பாமரர்கள் வாயினிலும் பாழ்மொழிகளாச்சு
எண்டிசையும் ஏற்றமுடன் ஏரூர்ந்த தமிழணங்கு
எழிலகன்று வாடுகின்ற காலமும் வந்தாச்சு

முச்சங்கம் போலின்று முகிழ்த்தொரு சங்கமது
முனைப்போடு செயற்படின் முன்னேறுந் தமிழது
இச்சகத்தில் இளையோர்கள் இப்பணியை முன்னின்று
இயற்றினால் இன்றமிழ் இங்குயர்ந்திடலாம்

வளங்குன்றுந் தமிழணங்கின் வண்மையுயர்த்திடவே
வாரீர் இளையோரே வன்பணி புரிந்திடுவோம்
வளமான வாழ்வென்று வண்டமிழுக் களித்திடவே
வாரீர் இளையோரே வன்பணி புரிந்திடுவோம்!

■ வயாவிரான் செ. சுதாகரன்

## நம் திருநாட்டு மான்மியம்!

கடல்கொஞ்சி மகிழ்கின்ற திருநாடு- இன்று
கரியோடு சதைநாறும் இடுகாடு
கடன்வாங்கிப் பசிவாங்கும் கறை வீடு - கொண்ட
கவலைக்கு முடிவென்று வரும் கூறு?

சடலங்கள் மலிவான கடையாகும் - இங்கு
சமதர்மம் விலையான பொருளாகும்
விடம்தானே பலர்க்கிங்கு பரிசாகும் - என்றால்
விழுகின்ற எமக்கேது எதிர்காலம்?

வெடிகுண்டு பசியாற உணவுண்டு! - தீர்ப்பை
வழங்காதோர் விளையாடத் தலையுண்டு!
குடிபேர்ந்து குடிபேர்ந்து இடியுண்டு -மானும்
குலத்துக்கு 'மருந்தாக' எது உண்டு?

■ அருணன்.

## வசந்தம் நீ, அயலில்லை இதுவே தொல்லை!

கலவியெனும் போராட்டக் களத்தி லென்னைக்
காலமெலாம் வெற்றிகொண்ட கரும்பே; இந்த
உலகத்தில் உனைவிடுத்து தனித்தே யானும்
உள்ளநிலை உண்மையிலே கவலை யம்மா!

பள்ளியதன் விடுமுறையில் எனையே பார்க்கப்
பைங்கிளிநீ, பறந்தோடி வருவாய்! வந்தால்
பள்ளியறை விருந்துகளைப் பகிர்ந்து கொண்டு
பயணித்தால் நானிங்கே தனிமை யம்மா!

என்னவழி மீண்டும்நாம் ஒன்றாய்க் கூடி
'எண்ணத்தைச் செயலாக்கி மகிழ?' நாங்கள்-
என்னபழி செய்தோமோ? தெரியவில்லை!
என்னவளே 'பிரிவு' என்னைக் கொல்லுதம்மா!

பிள்ளைகளைப் பார்த்திடவும் இயலவில்லை
போர்த்திகளை அணைத்திடவும் முடியவில்லை!
தொல்லுலகே எந்தனுக்குத் தொல்லையாச்சு
தோகையுந்தன் எண்ணத்தால் மகிழ்ச்சிபோச்சு!

கடிதத்தில் என்னமெலாம் கவியாய்த் தீட்டி
கணமும்நான் அனுப்புவதைத் தவிர, இங்கு
வடிவழகே 'செய்வதற்கு வேறோன் றில்லை!'
'வசந்தம் நீ, அயலில்லை அதுவே தொல்லை!'

■ கவிஞர் அ.கௌரிதாசன்,
ஆலங்கேணி கிழக்கு

## தலைவரின் பிரச்சினை

பணிமனையுந் தூங்குமாகில் விழித்து மக்கள்
புரட்சிசெய்வர்; கிளர்ச்சிசெய்வர்; கேள்வி கேட்க
அணியணியாய்த் தலைவரிடம் வருவர்; அந்தோ
அந்தரந்தான் அவர்பாடு; திணறிப் போவார்
''துணிவற்ற சங்கமிது; சீச்சி வேண்டாம்
தொழிலாளர் நலன்பேண ஒன்றா? இரண்டா?
மணியான கட்சிகள்தாம் அநேக முண்டு
மாறுவோம்யாம் வேறுகட்சி'' என்பர் சவடி!

''தோட்டத்தில் பலகுறைகள்; பேச்சு நாளில்
துரைமுன்னா லெடுத்துரைப்பு; ஒன்றுங் காணோம்!
சவட்டத்தில் வீறாப்பு; குதித்து வோடி
கொதிப்போடு பணிமனையில் இடித்து நின்றீர்!
கேட்டிட்டார்; குதித்திட்டார்; 'கிழிப்பே' னென்றார்
கேட்டாரா? என்செய்தார்? வெட்கக் கேடு
கோடிட்டோம்; தாண்டாதே! சீச்சி வேண்டாம்
கொள்கையிலா இக்கட்சி'' என்றே சொல்வார்!

இழுக்காத எருதுவண்டி மீது ஏறி
இருந்துகொண்டால் நெடும்பயணம் தொடரு மாமோ?
பழுதான பேரூந்தில் குந்திக் கொண்டால்
பக்குவமாய் ஊர்சேர முடியும் ஆமோ?
அழுதாலும் புலம்பினாலும் மாண்டார் மீண்டும்
அரவணைக்க உயிர்த்தெழுந்து வருவா ரோசொல்!
விழுந்துதலை நொறுங்கிவிடும் உறுதி யற்ற
உச்சாணிக் கொம்பேறி அமர்ந்தால் என்பர்!

''துட்டாது தீட்டுங்கள் மகஜர் ஒன்றை
தவறாது இம்மாதம் தொட்டுச் சந்தா
கட்சிக்கு வேதனத்தில் பிடிக்க வேண்டாம்
கட்சிவிட்டு மாறுகின்றோம் என்றே'' என்பர்!
''இட்டமுடன் கையொப்பம் இடுவோம்; நாளை
எடுத்துப்போய் துரையிடமே கொடுங்கள்; அன்னார்
பட்டென்ன நிறுத்திடுவார்; அடுத்து நாங்கள்
பார்த்திடுவோம் வேறுகட்சி'' என்றுஞ் சொல்வார்.

■ கவிஞர் எம்.எஸ்.காந்தி. [தொடரும்]

## கொஞ்சல்வழிக் கல்வி



மீன்கொத்திப் பறவை
தான் சாப்பிட்ட மீன்களின் முட்டைகளைக் கொண்டே
கூடு கட்டிக் கொள்கிறது

மனங்கொத்திப் பறவை நீயோ
முதலில் என் இதயத்தில் கூடுகட்டிக் குடியேறிவிட்டு
பிறகு என் இதயத்தையே சாப்பிடுகிறாய்

குவாக் குவாக் என்கிற வாத்துச் சத்தம்
எதிலும் எதிரொலிப்பதில்லை

அப்படித்தான் உன் குரலும்
எதிலும் எதிரொலிக்காது

எந்த மலைதான் திருப்பி அனுப்பும்
உன் குரலை?

■ தபுசங்கர்

## அகதிக்குருவிகள்

விடியல் எங்கே
விடைபெற்றுப் போனது...?
வறுமையின் சுவண்டிணுள்
மனிதக் குருவிகள்...

வர்ணம் தீட்டப்பட்ட - நம்
வாழ்க்கைப் பதிவுகள்
யுத்த அழிறப்பரால் தினம்
அழிக்கப்படுகின்றன...

கருத்தரிக்கும் முன்னே
கனவுகள் விதவைகளாதலால்
வரலாறு - சவ
மலடாகிப் போகிறது...

நமக்கு முன்னுரையே - இன்னமும்
எழுதப்படவில்லை, அதற்குள்
முடிவுரையையே
நெருங்கிவிட்டோமே...!

■ ஸ்ரீ பிரசாத், நெடுந்தீவு.

## இலங்கையின் பேர் கெடுகிறது

பறவைகள் ஒலியால் நிரம்பிய வானம்
பயங்கர ஒலியால் அழுகிறது
உறவுகள் உயிரைத் தினந்தினம் குடிக்கும்
உறுமலில் உள்ளம் துடிக்கிறது.

பறத்தலும் குண்டுகள் பொழிதலும் பார்த்தால்
பிறநாடாய்த்தான் தெரிகிறது.
இறங்கிப் பார்க்கத் துணிச்சல் இலதால்
இலங்கையின் பேர்தான் கெடுகிறது.

இனங்காண் பதுவும் இலக்குடைப் பதுவும்
ஏழைக் கனவாய்ப் போகிறது
சனங்கள் தலையில் வீழ்ந்து நாடே
சவக்கிடங் காய்த்தான் ஆகிறது.

பள்ளிக் கூடப் பிள்ளைகள் வாழ்வும்
பாழுங் குண்டால் அழிகிறது.
துல்லிய மாய்த்தான் போட்டோம் என்று
தொடரும் செய்தி மொழிகிறது.

மனதைத் திருத்த விரும்பா அரசு
மாகாணத்தை உடைக்கிறது
இனங்கள் சேர்ந்து மகிழ்வதைப் பாரென
இறுமாப் புடனே சொல்கிறது.

எத்தனை காலம் பொய்கள் காக்கும்
இருந்தே நாங்கள் பார்ப்போம்
சத்தியம் வெல்லுங் காலம் வரும்வரை
சக்தியைப் பணிந்து துதிப்போம்.

■ க.கோணேஸ்வரன்- திருமலை

## புதுமையானேன்!

கழகமழும் கலவியிலே இன்பந்துய்த்து - எனை
களிப்புறச் செய்திட்ட தேவதைநின்
துடிக்கின்ற இளமைத்தீ என்னைக் கொல்லும்!
தொடர்கின்ற சரசங்களால் காமம் வெல்லும்!

துயில்களையா துனதெழிலாம் சித்திரத்தை - நிதம்
தொட்டலையும் எனதுயிரின் துடிப்பனைத்தும்
திகிலூட்டும் மோகினிநின் மோகனத்தால்
மோதியடி சாயுதடி! காலமெல்லாம்!

ஆயகலை அனைத்தையுமா அணிந்தே வந்தாய்!
அணைக்கின்ற வித்தையையும் தெரிந்தா வந்தாய்
மாயவலை விரித்தாநீ மதனை வென்றாய்! எனை
மாய்க்கின்ற அம்புவிழி யால்சொல்வாயா?

பகலிரவாய் காதல்ரசம் தந்ததாலே
பள்ளியறைக் குள்ளேயான் தொலைந்தேபோனேன்
முகலாய சாம்ராஜ்யம் தெரியுதடி நின்
முத்தமழை யால் நெஞ்சு குளிருதடி

ஊடலிலே எனையிழந்தேன் முதுமை ஆனேன்;
ஊர்வசியே உன்னுறவால் பதுமை ஆனேன்;
கூடலிலே நீயாற்றும் சேவை கண்டு - என்
குலமகளே கவிஞன்யான் புதுமையானேன்!

■ கவிஞர் ஏ.அஜ்.நாகவி, திருமலை.

## குடிகாரன் கடை திறப்பு!

சுருட்டு புகையாட சுண்ணாகச் சனமாட
கருவாட்டு நாற்றம் கள்ளோடு சேர்ந்தாட
தெருவாட மரமாடத் 'தெருக்கூத்து' நானாட
குருடாடி எடிமனிசி! குடிசைத்தாழ் திறவாயோ!

ஆமைபோல் ஊர்ந்தேன் அரைமனித னாய்க்கிடந்தேன்
சீமைச் சரக்கூற்றச் சிம்மமெனக் கர்ச்சித்து
வாமனமாய் இருந்திப்போ வானத்தைத் தொட்டுவந்தேன்
காமத் திறப்பே கதவுத்தாழ் நீதிறவாய்!

சக்தி விரதமென சஷ்டியென எத்தனையோ
பக்தி விரதங்கள் பகலிரவாய் நீபிடித்தும்
முக்தி அடையாத மடமாதே! காப்போத்தல்
'பத்தியத்தில்' நானும் பரலோகம் சுவர்க்கமெலாம்
சுத்தியடித்து வந்தேன் சுறுக்காய்வா எம்பாவாய்!

குப்பி விளக்கெரியக் கோறைப்பாய்த் துண்டினிலே
உப்பியுள்ள வயிற்றுக் குழந்தையொடு கண்மலரும்
'சுப்பி' அடியாத்தை சுந்தரியே தெருநாய்க்கு
தப்பியடி வந்தேன் தமிழ்நங்காய் வா! திறவாய்!

பாட்டோடும் விசிலோடும் பாவையுன்னைத் தேடிவந்தால்
வீட்டுநாய் கூடஎன்னை விடுகுதில்லை; எடியிதனைக்
கேட்டும் இரங்காயோ கிளிஞ்சதுணிப் பூஞ்சோலாய்!
மாட்டேன் இனிக்குடிக்க மாவேவா எம்பாவாய்!

'எம்சியார்' நானாம் எடி 'பானு மதி' நீயாம்
'சும் டார்லிங்' மரஞ்சுற்றிக் காதலிப்போம்; ரதியேவா
'தம்'மில் தான் பலருக்குத் தமிழ்கூட வருகுதடி
அம்மன் சிலையே அருகில்வா எம்பாவாய்!

என்னைநான் ''சுற்றிவந்து'' எடியுன்னைச் சுற்றுவதால்
கண்ணேநான் பூமியடி கண்ணகிநீ சூரியன்ரி
என்னடிபார் தத்துவத்தை எல்லாம் ''அதன்'' செயலே
உண்மை 'ரேஸ்ரே' உயிரேவா எம்பாவாய்!

நாளை விடியட்டும் நம்பொடிக்குப் புத்தகப்பை
சேலை உனக்கு செலக்ட்பண்ணி; வரும்வழியில்
வேலன் கடையில் வெள்ளரிசி யும்வாங்கி
மீளுவேன், இன்று மெல்லத் தாழ்திறவாய்! ■ ச. முகுந்தன்




ரம்பா



திருவண்ணாமலை படத்தில்
வினித் - கீர்த்திசாவ்லா



வில்லு படத்தில்
விஜய்



சத்யம் படத்தில்
நயன்தாரா - விஷால்



# உயரப் பறக்கும் ஜெனிலியா

இந்தியில் அமீர்கான் தயாரிப்பில் அவரது சகோதரியின் மகனான இம்ரான் கான் நடித்து வெளியாகியுள்ள 'ஜானே து... யா ஜானே னா' திரைப்படம் அதிரடியாக ஹிட் ஆகியிருப்பதில் அமீர்கானை விட அதிக சந்தோஷத்திலிருக்கிறார் ஜெனிலியா.

இருக்காதா பின்னே...? அவர்தானே படத்தின் நாயகி.

தென்னிந்திய படவுலகிலிருந்து இரண்டாண்டுகளுக்கு முன்பே இந்திக்குப் போன அசினின் முதல் படமான கஜினி இன்னமும் வெளிவரவேயில்லை. ஆனால் இப்போதுதான் பாலிவுட் போன ஜெனிலியாவின் படம் தொடங்கப்பட்ட வேகத்திலேயே முடிவடைந்து வெளியாகி சூப்பர் ஹிட்டாகியிருக்கிறது.

இந்தப் படம் வருவதற்காகத்தான் அமீர்கான் தனது கஜினியை தாமதமாக ரிலீஸ் செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது இந்தியில் ஜெனிலியாவைத் தேடி மிகப் பெரிய வாய்ப்புகள் வந்த வண்ணமுள்ளனவாம். இனி தென்னிந்திய மொழிப் படங்களுக்கு குட்பைதானா...?

இந்த வழக்கமான கேள்விக்கு ஜெனிலியா தரும் வழக்கமான பதில்...

"அப்படியெல்லாம் இல்லை. இந்திப் படவுலகம் எனக்குப் புதிதல்ல. நானும் இந்த ஊர்ப் பெண்தானே. இந்த மாதிரி ஒரு வாய்ப்புக்காகத் தான் காத்திருந்தேன். ஜெயித்தும் விட்டேன். சந்தோஷமாக இருக்கிறது. ஆனால், எனக்கு மொழி வேறுபாடுகள் கிடையாது. எந்த மொழி படமாக இருந்தாலும் நல்ல ரோல், நல்ல சம்பளமென்றால் நான் நடிக்கத் தயார்" என்கிறார்.

## ...ரியின் ஓசை

### திரைவிமர்சனம்

...லஞரின் கைவண்ணத்தில் உருவாகியிருக்கும் பழமை மாறாத புதுமையான
...ரப் படம்தான் உளியின் ஓசை. காலாகாலத்துக்கும் நிலைக்கும்படியான ஒரு
...ல் கட்ட சோழமன்னன் ராஜராஜன் நினைக்கிறாள். அந்தக் கோவிலுக்காக சிலை
...நம் பொறுப்பை ஏற்கிறார் புகழ்மிக்க சிற்பியான வினித். சோழமன்னன் தன்னை
...தேடுத்ததைபெருமையாகக் கருதும் வினித் 100 வித்தியாசமான சிலைகளை
...் முடிவெடுக்கிறார். அனைத்தும் ஆடல்கலையை வெளிப்படுத்தும் சிலைகள்.
...காக நடனம் ஆடத்தெரிந்த ஒரு மங்கையைத் தேடுகிறார். சிலை வடிப்பதற்கு
...யாக இருக்கத் தயார் என்று சோழமண்டலத்தின் அரசவை நர்த்தகியான அட்சயா
...வருகிறார். ஆனால், அவரைத் தேர்ந்தெடுக்காத வினித், ஆட்டுக்காரியின்
...யான கீர்த்திசாவ்லாவை மொடலாக தேர்ந்தெடுக்கிறார். இருப்பினும் கோபம்
...ளாமல் வினித் மீது காதல் வயப்படுகிறார் நர்த்தகி அட்சயா. இதற்கிடையில்
...் சாவ்லாவை மாடலாக நிற்கவைத்து சிலைகளை வடித்து முடிக்கிறார் வினித்.
...ாடு கீர்த்தி சாவ்லாவின் மீது காதலும் கொள்கிறார். இந்த முக்கோணக் காதல்
...பின் முடிவுதான் கிளைமாக்ஸ்.



திருவண்ணாமலை படத்தில் அர்ஜுன்

## ...ா - நயன் குத்துவெட்டு...!

...லில் நடிகர் விஷால் கொடுத்த தனிப்பட்ட விருந்தில் அவரது
...ன் கலந்துகொண்ட நயன்தாராவை சிம்பு சந்தித்தது
...ல்ல, திட்டமிட்ட நாடகம் என்பதுதான் கோலிவுட்டில்
...ச்சு.

...ாவில் கிடைத்துட்ட திரிஷாவின் வாய்ப்புகள் அனைத்தும்
...யன்தாரா கையில். விஜயின் ஆஸ்தான நாயகி என்று
...த்த திரிஷா ஓரங்கட்டப்பட்டார். இப்போது விஜய் படத்தில்
...பிறந்தநாள் விழா போன்ற தனிப்பட்ட விழாக்களிலும்
...யகி.

...த்தில் தன் வாய்ப்பைப் பறித்துக்கொண்டார் என்ற கோபத்தில்
...ப்பிடித்து திரிஷாவின் வாய்ப்புகளை தனதாக்கி வருகிறார்.
...ாதிக்கப்பட்ட திரிஷாதான் திட்டமிட்டு நயன்தாரா
...ிதை சிம்புவுக்குச் சொல்லி வரவழைத்தார் என்ற
...ர்கள்.

...சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் சிம்புவும்
...ிந்த கதையை விஸ்தாரமாக எல்லாப் பத்திரிகைகளுக்கும்
... போட்டுக்கொடுக்கிறார்.

...க்கு பின்னர் தெரியவந்ததும் கடுப்பான நயன், திரிஷாவைப்
...த்து வெளுத்தெடுத்தார் என்றும் கூறுகிறார்கள் நயனுக்கு
...வர்கள்.

...வசர அவசரமாக தனது செல் நம்பரை மாற்றிவிட்ட
...சிம்புவுடன் சகவாசம் இனி எப்போதும் கிடையாது என்பதில்
...ருக்கிறாராம்.



பாபிலோனியா



மஞ்சள் வெயில் படத்தில் சந்தியா

## தொடங்கியது பொக்கிஷம்

சேரான் நாயகனாக நடித்து இயக்கும் பொக்கிஷம் படத்தின் சூட்டிங் கோபி செட்டிப் பாளையத்தில் தொடங்கியது. சேரன் இயக்கி வெளிவந்த ஆட்டோகிராப் படத்தின் இரண்டாம் பாகம் இது. பத்மப்பிரியா, உதயதாரா நாயகிகளாக நடிக்கின்றனர். இன்னும் இரு நாயகிகளும் நடிக்கக்கூடும் எனத் தெரிகிறது.

திருமணத்துக்குப் பிந்திய இனிய மலரும் நினைவுகளின் தொகுப்பாக இந்தப் படத்தை உருவாக்குகிறார் சேரன். படத்தின் தலைப்பே 'பொக்கிஷம்'.

இந்தப் படத்தின் தயாரிப்பாளர்கள் 'நான் அவனில்லை', 'அஞ்சாதே' வெற்றிப் படங்களைத் தயாரித்த நேமிச் சந்த், ஜெப ஹித்தேஷ் ஹபக். ஆனால், இம்முறை இவர்கள் நேரடியாக தயாரிப்பில் ஈடுபடவில்லை. முதல்பிரதி அடிப்படையில் சேரன் இயக்கித் தருவதால், பட்ஜெட் தொகையை முழுவதுமாக அவரிடமே ஒப்படைத்துவிட்டார்கள். இந்தப் படத்துக்காக ஆட்டோகிராபில் நடித்த கோபிகா, சினேகா ஆகிய நடிகைகளை எவ்வளவோ கேட்டும் அவர்கள் இந்த இரண்டாம் பாகத்தில் நடிக்க மறுத்துவிட்டனர். அதனால் தனது ஆஸ்தான நாயகியான பத்மப்பிரியா மற்றும் கண்ணும் கண்ணும் நாயகி உதயதாராவிடம் போய்விட்டார் சேரன். என்ன செய்வது...? இந்தப் பச்சைத் தமிழனுக்கு அவ்வப்போது மலையாளம்தான் கைகொடுக்கிறது.




## முன்கதைச் சுருக்கம்

சிக்காகோ நகரம். இரவு நடுச்சாமத்தை கடந்துவிட்டது. அமுரா, ஹொஸ்டலில் தனது அறையில் தூங்கிக் கொண்டிருக்கிறாள். அப்போது கதவு தட்டப்படும் ஓசை! இந்த நேரத்தில் யாராக இருக்கும்? காதலன் ஜோனாக இருக்குமோ என்ற சந்தோஷத்துடன் கதவைத் திறக்கிறாள். ஆனால், மர்ம உருவம் அவளை உட்தள்ளி கதவைத் தாழிடுகிறது. அமுராவைத் தேடி ஜீனா வருகிறாள். மர்ம உருவம் ஜீனாவையும் விட்டு விட வில்லை. உள்ளே இழுத்துக் கொண்டது. டாக்டர் வில்லியம்ஸ் மூலமாக ரோலண்டுடன் மேரி அறிமுகமாகிறாள். அவனுடன் ஊசுற்றி விட்டு, ஹொஸ்டலுக்கு வருகிறாள். அங்கு மர்ம உருவத்தைக் கண்டு பயந்து வீதியில் ஓடும் போது ரோந்து பொலிஸ் காரனை சந்திக்கிறாள். அவனுடன் சல்லாபிக்கிறாள். அதில் உயிரையே விட்டு விடுகிறாள். இவை அறியாத ரோசி, தோழிகள் செக்ஸ் விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர் என நினைத்து அவர்களை கையும் களவுமாகப் பிடிக்க முனையும்போது மர்ம மனித னிடம் மாட்டிக் கொள்கிறாள். மர்ம மனிதனின் பிடிக்குள் அகப்பட்ட அவள், அவனைத் தாக்கி விட்டு ஓடுகிறாள். கொல்லும் நோக்குடன் அவளை மர்ம மனிதன் தேடிக் கொண்டிருக் கிறான். இதற்கிடையில் மீண்டும் மேரியைத் தேடிவந்த ரோலண்ட் மர்ம மனிதனால் கொலை செய்யப் படுகிறான். சப்-இன்ஸ் பெக்டர் ஹரிசன் ரோந்து வருகிறான். துப்பாக்கி வெடிச்சத்தத்தை கேட்டு ஏதோ நிகழ்வதாக உணர்கிறான். ரோந்துப் பொலிஸ்காரனின் சடலத்தின் மீது விழுந்த ஹரிசன் ஏதோவொன்று தன்னை நெருங்குகின்ற அசை வினை உணர்கிறான். சிறைக்கைதி அம்ஸ்ட்ரோங்கே தன்னைப் பழிவாங்குபவர்களை பழிதீர்க்கிறான். இறுதியாக ஹரிசனையும் கொலை செய்யப்போவதாக கூறி இதுவரை நடந்த அத்தனை சம்பவங்களையும் கூறுகிறான். அதில் முதலாவதாக சிறைச்சாலை அதிகாரி யின் கதையைக் கூறி அதில் அவனது மனைவியுடன் உறவு கொள்வதையும் அதன்பின் அவனுக்கு நேர்ந்ததையும் கூறுகிறான். இனி...

பெட்டியில் அருகில் றோபோ நின்றிருந்தான். பெட்டி மூடப்பட்டிருந்தது. அதில் பூட்டு தொங்கிக் கொண்டிருக்கின்றது. அவனுடைய கண்கள் வெறித்த பார்வையுடன் அதில் நிலைக்குத்தி நிற்கின்றன.

'சட்'டென அவனுடைய வெறித்த பார்வை ஒரு வண்டெனக் சுழன்று கிளின்டன் முகத்தில் மொய்த்தது. இந்த பெட்டிக்குள் என்ன இருக்கின்றது என அவனுடைய கண்கள் கேட்பது போன்ற பிரமை கிளின்டனின் பிடரி மயிரைச் சிலிர்க்க வைத்தது.

'இவனுக்கு சந்தேகம் வந்து விட்டதா?' என்ற பயம் கிளின்டனை லேசாக ஆட்டுவித்தது.

அப்படியானால்-

அவன் என்னைத் தாக்கக்கூடும். பெருங்குரலில் சத்தமிட்டு ஏதாவது கலவரத்தை உண்டுபண்ணக்கூடும்.

அத்தகையதொரு நிலைமை ஏற்பட்டுவிட்டால் தனது திட்டங்கள் அனைத்தும் சிதறடிக்கப்பட்டுத் தான் குற்றவாளிக் கூண்டில் ஏறவேண்டிய நிலைமை ஏற்படும். என்ன செய்யலாம்?

அவனுடைய சந்தேகத்தை போக்கும் விதமாக ஏதேனும் மாற்று வழிகிடைக்குமா என்ற பரபரப்பு, எரிகின்ற நெருப்பாக மனதில் சடசடத்தது.

றோபோ வெறுமனே பார்த்தாலே அந்த கண்களுக்குள் எந்தவிதமான உணர்ச்சிகள் பிரவாகின்றன என்பதை கண்டறிய முடியாது. அவ்வளவு சிறிய, ஆனால், அழுத்தமான கண்கள் அவனுக்கு.

கண்ணிமைகளில் அசைவில்லை. இரு ஈட்டிகளென அவை கிளின்டனின் கண்களில் குத்தி நின்றன.

றோபோவுக்கு சந்தேகம் வந்துவிட்டது. நிச்சயமாக அவனுடைய இரும்புக்கரங்கள் தன்முகத்தில் பதியும், உலக்கைப் போன்ற கால்கள் இடுப்பெலும்பை முறிக்கும் என்ற எண்ணங்கள் மனதில் நதியோட்டம் போட்டு அவனை அலைக்கழித்து எதற்கும் தயாராகும் நிலைக்கு கிளின்டனை கொண்டு போனபோது...

டிரீங்! டிரீங்! டிரீங்...!

படுக்கையின் அருகிலிருந்து தொலைபேசி அலறியது.

றோபோவின் கைக்கெட்டும் தூரத்தில் அது இருந்தது.

கிளிண்டன் அதனை எடுக்க வேண்டும் என்றால் றோபோவைக் கடந்துதான் செல்ல வேண்டும்.

அப்போது அவன் திடீர் தாக்குதலில் ஈடுபட்டால் என்ன செய்வது என்ற பதற்றத்தில் கிளின்டன் ஆடிப்போனான்.

வினாடிகள் கரைகின்றன.

டிரீங்! டிரீங்! டிரீங்...!

தொலைபேசியின் கதறல் ஓயவில்லை. யாரோ பலமாக அறைந்தாற் போன்று அது கதறுகின்றது. றோபோ அதைப் பார்த்தான். அவன் எடுத்து விடுவானோ எனக் கிளின்டனின் மனம் படபடத்தது. அவன் ரிசீவரை கையிலெடுத்து 'ஹலோ' என்றுகூட சொல்லாமல் காதில் வைத்துவிட்டால் அடுத்த பக்கத்தில் யார் கதைக்க வேண்டும் என்று கிளின்டன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தானோ அந்த ரோந்து பொலிஸ்காரன் 'கன்னா பின்னா'வென எதையாவது உளறிக் கொட்டி விட்டால் அப்புறம்



அனர்த்தம் அல்லவா ஏற்பட்டு விடும்.

றோபோ ரிசீவரை எடுக்கவில்லை. அதையே பார்த்துக் கொண்டிருந்த அவன் திரும்பி கிளின்டனை பார்த்தான்.

கிளின்டனின் உதடுகளில் 'சட்'டென புன்னகை மலர்ந்தது. பலவந்தமாக அதை வரவழைத்துக்கொண்டான்.

''டோண்ட் வொரி. ஐ வில் டேக்''

''கவலை வேண்டாம். நான் எடுக்கிறேன்'' என்றான் கிளின்டன்.

ஆனால்-

றோபோ அசையவில்லை. அவன் கொஞ்சம் விலகி வழி விட்டால்தான் கிளின்டன் அவனைக் கடந்து ரிசீவரைக் கையிலெடுத்து 'ஹலோ' போடலாம்.

அவன் திட்டமிட்டுள்ள இரகசியத்தை உரையாடலாம். அனைத்துமே அவன் திட்டமிட்டபடியே செம்மையாக நடந்தேறிக் கொண்டிருந்த போதும் தொலைபேசி அழைப்போசை சில கணம் முன்னரே ஒலித்து விட்டதால் இந்த தர்மசங்கடமான நிலைக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று.

றோபோவின் அசைவற்ற போக்கு தன்னை அவமானப்படுத்துவதாக சினமடைந்த கிளின்டன், இனி கொஞ்சம் மிரட்டத்தான் வேண்டும் என்ற முடிவிற்கு வந்தான்.

'றோபோ! பெட்டியைத் தூக்கு. சீக்கிரம்! சிக்கிரம்!'' என்று ஏதோ பதறிப்போனது போல அவசரப்படுத்தினான்.

பூட்டை இழுத்து பார்த்த றோபோ உடனடியாகவே கட்டளைக்கு அடிபணிந்துவிட்டான். பெட்டியை தூக்குவது போல் பாசாங்கு செய்த அவன் 'சட்'டென ரீசிவரைத் தூக்கினான். அதனை காதில் வைத்தான். இதனால் கிளின்டன் கலவரமடைந்தான்.

''ஹலோ!''

றோபோவின் கம்மிப்போன கரகரப்பான குரல் கேட்டது. மறுப்பக்கத்தில் அமைதி அரசோச்சியது. கிளின்டன் பயந்ததுபோல எவனோ உளறுவாயன் அந்த பக்கத்தில் இருக்கவில்லை. மிகவும் சூட்தமமான ஆசாமியே இருந்தான். 'ஹலோ' என்ற பதில் குரலுக்கு கிளின்டன் சொந்தக்காரன் அல்லன் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

எழுதுவது கே. வி.

தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. றோபோவின் காதில் ரிசீவர் அமைதியாக விருந்தது. அவன் தன்னைக் கூர்மையாக செவிமடுத்துக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்வதற்கு கிளின்டனுக்கு வெகுநேரம் செல்லவில்லை.

கிளின்டனின் பரபரப்பும் பதற்றமும் அடங்கவில்லை. அவசரம் அவனை ஆட்கொண்டது. அவன் உசாராகி விட்டான்.

'சரே'லென துப்பாக்கி கைக்கு வந்தது. ஆனால், றோபோ அதை பொருட்படுத்தியவனாகத் தெரியவில்லை. அந்த பெட்டியை அனாசயமாகத் தூக்கி தலையில் வைத்துக்கொண்டான். 'மடமட'வென வெளியில் வந்தான். விளக்குகள் அணைக்கப்பட்டு இருண்டு கிடந்த வேலைக்காரனின் பாத்ரூம் பக்கமாக வேகமாக நடந்தான்.

பங்களாவின் பின்புறம் எப்படிச் செல்வது என்பதும் தோட்டத்திலுள்ள சின்ன கதவை திறந்து கொண்டு வாகனங்கள் செல்லும் பாதையைச் சேருவது என்பதும் அவனுக்கு தெரிந்த விசயங்களே!

அவன் பின்வாசலை நோக்கிப் பெட்டியுடன் சென்று கொண்டிருந்தபோது -

டிரீங்! டிரீங்! டிரீங்...!

கிளின்டனின் அறைத் தொலைபேசி மறுபடியும் அலறத் தொடங்கி விட்டது.

கிளின்டன் 'சட்'டென எடுத்தான். 'ஹலோ!' அவன் இரகசியம் பேசுவது போல் ஒலித்தது.

''சேர் நான்தான்!''

''யார் ரி. பியா?''

''உம்.''

''நல்லது. புத்திசாலித்தனமாக நடந்து கொண்டாய். நீ முதல் முறை பேசிய போது அவன்தான் தொலைபேசியை எடுத்தான். நான் பயந்துவிட்டேன். அவன் என்ன செய்கிறான் என்று தெரியவில்லை. கையும் மெய்யுமாக அவனைப் பிடிக்க வேண்டும். அந்த கிரடிட் உனக்கு கிடைக்கட்டும் என்று சும்மா இருந்தேன். உனக்குத்தான் எல்லா விசயத்தையும் முதல் கோலில் சொன்னேனே. நானும் புளோராவும் இசை நிழ்ச்சியில் இருந்த போது இவன் என்னுடைய அறையில் புகுந்து எதையோ கொள்ளைடித்துப் பெட்டிக்குள் அடக்கிக் கொண்டிருந்தான். அதைத்தான் இப்போது எடுத்துக் கொண்டு பின்பகுதியால் போகிறான். ஆசாமியை பிடித்துக்கொள். கவனமாகச் செய். மிகவும் பொல்லாதவன்...''

''டோண்ட் வொரி சேர்.'' அங்கிருந்து பதில் குரல் வந்தது. தொலைபேசி தொடர்பு அறுந்தது.

றோபோ தோட்டத்தினூடாக நடந்து பின்கதவை அடைந்தான். அது சும்மா சாத்திக்கிடந்தது. பெட்டியை கீழே வைக்காமலே கதவைத் திறந்து வெளியில் வந்தான். ஆனால், அங்கே வாகனங்கள் எதுவும் தென்படவில்லை.

வீதி வெறிச்சோடிக் கிடந்தது. வீதியின் இருபுறமும் அடர்ந்து காணப்பட்ட மரங்களுக்கு அப்பால் கொஞ்சம் தொலைவில் வீதி விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருக்கிறது. அதனருகில் ஒரு வெள்ளை வாகனத்தின் பின்பகுதி தெரிகிறது.

ஜீசஸ்! அவ்வளவு தூரம் இந்தப் பெட்டியை தூக்கிக் கொண்டு நடக்க வேண்டுமா என்ற பெருமூச்சு றோபோவிடமிருந்து கிளம்பியது. ஆனாலும், அவன் தயங்கவில்லை. வேகமாக நடந்தான்.

அப்போது 'தடா'லென முழங்காலில் மோதிய பெரிய பாறையொன்று அவனைத் தலைகுப்புற விழச்செய்தது. விழுந்த வேகத்தில் பெட்டியின் பூட்டுப் பகுதி பாறை மீது மோதிவிட்டதோ என்னவோ கழன்றுவிட்டது. அதே வேகத்தில் அதனுள் மடிந்தநிலையில் கிடந்த புளோராவின் சடலம் வெளியே உருண்டு தரையில் விழுந்து கை கால்கள் முடங்கியவாறு கிடந்தது.

றோபோ கற்சிலைபோல் நின்றுவிட்டான். அதேநேரம் 'படபட'வென விரைந்து வந்த மோட்டார்சைக்கிள் ஒன்று அவன் முன்னே வந்து நின்றது. அதிலிருந்து குபீரென தாவிக்குதித்த பொலிஸ்காரன் துப்பாக்கியை நீட்டிய வண்ணம் முன்னால் வந்தான். அவன் வாயிலிருந்த ஊதுகுழல் அந்தப் பிரதேசத்தை அதிர வைத்தது.

(தொடரும்)

18. வானொலி: காது எனின், பத்திரிகை: .........................

1) எழுத்து. 2) வாசித்தல். 3) கண்.


**குறியீட்டுக் கோவையைப் பார்த்து விடை தருக.**

$$7 \# 5 = 3 * 4$$


19. குறியீடு # குறிப்பது
1) கூட்டல். 2) கழித்தல். 3) பெருக்கல்.

20. குறியீடு * குறிப்பது
1) கழித்தல். 2) பெருக்கல். 3) வகுத்தல்.

**21ஆம், 22ஆம் வினாக்களில் X எனும் இடத்தில் வரவேண்டிய பெறுமானத்தைத் தெரிவுசெய்க.**


21.



1) 43 2) 51 3) 39

22.



1) 49 2) 81 3) 64

**தரப்பட்டுள்ள வரிப்படத்தின்படி**





23. உதைபந்தையும் மேசைப்பந்தையும் மட்டும் விளையாட விரும்புவோர் எத்தனை பேர்?
1) 12 2) 8 3) 7

24. மூன்று விளையாட்டுக்களையும் விளையாட விரும்புவோர் எத்தனை பேர்?
1) 5 2) 12 3) 7

25. வீதியில் மரங்கள் நடுவதற்கு குழிகள் வெட்டப்பட்டன. இரு குழிகளுக்கு இடைப்பட்ட தூரம் 20 மீற்றர் எனின், 1 கிலோமீற்றர் தூரத்திற்கு மரங்கள் நடுவதற்கு எத்தனை குழிகள் வெட்டவேண்டும்?
1) 72 2) 51 3) 47


26. செவ்வகம் ஒன்றின் ஒரு பக்க நீளம் 8 சென்ரிமீற்றர் ஆகும. அதன் பரப்பளவு 40 சதுரசென்ரிமீற்றர் எனின், அவ் உருவின் சுற்றளவு யாது?
1) 20 cm 2) 13 cm 3) 26 cm


27. மதில் ஒன்று கட்டுவதற்கு 12 மனிதர்களுக்கு 5 நாட்கள் எடுத்தது எனின், அவ் மதிலை 10 மனிதர்கள் கட்டி முடிக்கத் தேவையான நாட்கள் எத்தனை?
1) 5 நாட்கள் 2) 6 நாட்கள் 3) 8 நாட்கள்

28.



செவ்வகம் A யில் இருந்து வெட்டி எடுக்கக்கூடிய B சதுரங்களின எண்ணிக்கை எத்தனை?
1) 10 2) 15 3) 20

**29ஆம், 30ஆம் வினாக்களுக்கு சதுர வடிவான கடதாசியை நான்காக மடித்து வெட்டியபின் அதைத் திரும்ப விரித்தால் அதன் சரியான தோற்றத்தைக் காட்டும் உரு எது?**

29.



30.




31. காலைப் பிரார்த்தனையின்போது வரிசையில் நின்ற மாணவர்களில் நிமலன் முன்னால் இருந்து பார்க்கும்போது மூன்றாவதாகவும், பின்னால் இருந்து பார்க்கும்போது எட்டாவதாகவும் நின்றிருந்தான் எனின, வரிசையில் நின்றிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 11 2) 10 3) 9

32. ஒரு வரிசையில் பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள் எனும் நிறக்கொடிகள் மாறி, மாறி நடப்பட்டிருந்தன. எனின், அவ்வரிசையில் 43 ஆவதாக நடப்பட்டிருந்த கொடியின் நிறம் யாது?
1) மஞ்சள். 2) நீலம். 3) சிவப்பு


33. மாலை ஒன்றில் முதல் இரண்டும் வெள்ளை நிறப் பூக்களும், அடுத்த மூன்றும் சிவப்புநிறப் பூக்களும், அடுத்தது மஞ்சள் நிறப் பூவும் என மாறிமாறித் தொடுக்கப்பட்டிருந்தன. எனின், 78 ஆவதாக அமையும் பூவின் நிறம் யாது?
1) மஞ்சள். 2) சிவப்பு. 3) வெள்ளை.

34. கபிலனின் மாதவருமானம் 14,000 ரூபா ஆகும். அதில் 1/4 பகுதியை உணவுக்காகவும் மீதியைச் சேமிப்பிலும் இட்டான். சேமிப்பில் இட்ட தொகையின் 3/4 பங்கை எடுத்து துவிச்சக்கர வண்டி ஒன்றை வாங்கினான எனின், துவிச்சக்கர வண்டியின் விலை யாது?
1) ரூ. 10,500 2) ரூ. 7,875 3) ரூ. 3,500


35. உரு Aயில் உள்ள தராசில் இரு பக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள நிறைகள் சமனானவை ஆகும்.





உரு B யில் உள்ள தராசின் நிறை சமனாவதற்கு, நிறை குறைந்த பக்கத்திற்குச் சேர்க்க வேண்டிய உருவங்கள் எவை?





**36ஆம், 37ஆம் வினாக்களுக்கு விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


36.


இவ் உருவிலுள்ள கனவுருக் கட்டைகள் எத்தனை? ..............................

37.




..............................

38.





39. வகுப்பில் கபிலனை விட நிசார் உயரமானவன். அகிலன் கபிலனை விட உயரம் குறைந்தவன். ஆனால், வசந்தை விட உயரமானவன் எனின், வகுப்பில் உள்ள நால்வரிலும் உயரம் கூடியவர், குறைந்தவர் யாவர்?
1) நிசார்-வசந். 2) நிசார்-அகிலன். 3) கபிலன்-வசந்.

40. இக் கடிகாரம் 10 நிமிடங்களில் முந்தி ஓடுகிறது. இக் கடிகாரம் காட்டும் நேரத்தில் வீட்டில் இருந்து புறப்பட்ட மாணவன் 20 நிமிடங்களின் பின் பாடசாலையை அடைகிறான் எனில், அவன் பாடசாலையை சென்றடைந்த சரியான நேரம் யாது?




1) 7.35 2) 7.25 3) 7.30

**தரம் - 05 மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்காக வெளியிடப்படும்**

## விசேட மாதிரிவினாத்தாள் - 06


ஆசிரியர்:- திரு.எஸ்.தீபன்
( பூந்தோட்டம் மகாவித்தியாலயம், வவுனியா. )

# உபக்கிரகம்

விஞ்ஞானச் சிறுகதை



பட்டாபிராமன் தினம்போல் சாயங்காலம் நடப்பதற்குக் கிளம்பினார். ரிடையர் ஆனதிலிருந்து - அது இப்போது பத்து வருடங்களாகிறது - அதிக நாள்கள் இந்த 'வாக்' தவறினதில்லை. பட்டாபிராமன் நிறைய நாள் வாழ்ந்திருக்க விரும்பினார்... தினசரி மூன்று மைல் நடந்தால் நிறைய நாள் வாழலாம் என்று டாக்டர் சொன்னார். ரீடர்ஸ் டைஜஸ்ட்டில் படித்தார். டவுனுக்கு வெளியே வந்து மைதானத்துக்குக் குறுக்கே நடந்து சன்னமாக மேலே ஏறி இறங்கும் ஹை கிரவுண்ட் பகுதியில் நடந்து செல்வது அவருக்கு மிகவும் விருப்பம். அவர் செல்லும் சமயத்தில் அவரைத் தவிர வேறு ஒருவரும் இருக்கமாட்டார்கள். தனக்குத் தானே இரைந்து பேசிக்கொள்ளலாம். அவர் மனைவி, மகள், மகன் எல்லோரும் சுத்தமாக அவர் இறப்பதற்காகக் காத்திருக்கிறார்கள் என்று சில சமயம் அவருக்கு வரும் சந்தேகங்களெல்லாம் தனக்குத்தானே வாதப் பிரதிவாதம் செய்துகொள்ளலாம். மேலும் பச்சை புல்வெளியில் மெத்து மெத்து என்று நடப்பது அவருக்குப் பிடிக்கும். தன் சென்ற காலத்தை அசைபோட்டுக் கொண்டே டிராபிக் பயமில்லாமல் உத்தமமான தனிமையில் நடக்கலாம். நடந்து சென்றுகொண்டிருந்தார். என்றும் போல் மாலை. என்றும் போல் ஐந்து பதினெட்டு. என்றும் போல் கழுத்தைச் சுற்றி மப்ளர். கையில் வாக்கிங் ஸ்டிக், காலில் கான்வாஸ் ஷூக்கள். என்றும் போல் தனக்குள் பேச்சு.

ஆனால், என்றும்போல இல்லாமல் இன்று ஒரு விநோதம் நடந்தது. சமீபத்திய மழையில் பளீர் என்று பச்சை நிறைந்துவிட்ட அந்தப் பிரதேசத்தில் நடந்துகொண்டிருந்த போது ''விஷ்'' என்று உயரே அவர் பின்னே ஒரு சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தை அவர் முதலில் கவனிக்கவில்லை. அதன்பின் அந்தச் சத்தத்தின் அதிகரித்த புதுமை அவர் கவனத்தை நிச்சயம் ஈர்த்தது. அந்த ''விஷ்''ஐச் சரியாக விவரிக்க மொழியில் வார்த்தை இல்லை. உடலைச் சிலிர்க்கவைக்கும் சத்தம். திரும்பிப் பார்த்தார். ஒன்றும் தெரியவில்லை. மேலே பார்த்தார். திடுக்கிட்டார்.

ஆகாயத்தில் சுமார் முந்நூறு அடி உயரத்தில் பளபளக்கும் ஒரு கோளம் மெதுவாகத் தனக்குத்தானே சுற்றிக்கொண்டு ஒரு மெல்லிய சரிவில் இறங்கிக் கொண்டிருந்தது. துல்லியமான கோளம். பளபளக்கும் உலோகம். சற்று நீலம் கலந்த உலோகம் போல் தெரிந்தது. அதில் ஜன்னல் போல் ஒரு பக்கத்தில் அம்பர் வர்ணத்தில் விளக்கு பளிச் பளிச்.

பட்டாபிராமன் பிரமித்துத் தன் கைத்தடியை நழுவவிட்டு 'ஆ!' என்று பார்த்துக்கொண்டிருக்க அந்தக் கோளம் அவருக்கு முன் மெதுவாகச் சரிந்து சுமார் முந்நூறு அடி தள்ளி ஜம் என்று இறங்கியது. இறங்கும்போது பெரிதாக சுவாசம் விட்டது. ரூஉம் ரூஉம் ரூஉம் என்று ஒரு ஒலி தொடர்ந்து கேட்டது. சற்றுநேரம் கொஞ்சத் தூரத்தில் ஊசலாடி ஹெலிக் கொப்டர் போல நிற்க, அதன் இருபுறங்களிலும் கிளைபோல் இரண்டு கால்கள் புட்டுக்கொண்டு வெளிவர, அதன் விர்ர் சற்று அதிகமாக, அந்தக் கால்கள் மெத்தென்று புல்வெளியில் பட்டு அழுத்த, ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டு உருண்டை ஸ்திரமாயிற்று. அதன் காற்றுச் சத்தம் இப்போது சீராகக் கேட்டது.

அந்தக் கோளம் சுமார் நாற்பதடி அளவு இருந்தது. அமைதியாக அப்படியே நின்றது. நிச்சயம் அந்த வடிவத்தைப் பட்டாபிராமன் நிஜ வாழ்க்கையிலோ சினிமாவிலோ பார்த்ததில்லை. கண்ணாடியை எடுத்துத் துடைத்துப் போட்டுக்கொண்டு பார்த்தார். முதலில் அதை எயர்போர்ஸ்காரர்கள் பரிசோதிக்கும் விமானம் என்று நினைத்தார். ஆனால், விமானம் அவ்வளவு உருண்டையாக இருந்து பார்த்ததில்லை. அவர் ரிடையர்ட் ஜட்ஜ். இருந்தும் அவருக்குத் தெரிந்திருந்த ஆதார விஞ்ஞானத்தில்கூட அந்த வடிவத்தில் எந்தச் சாதனமும் பறக்க முடியாது என்பது தெரிந்தது.

''பின் இது என்ன?''.

சுற்றிலும் பார்த்தார் யாரையாவது கூப்பிடலாமா என்று. ஒருவரும் இல்லை. அவருக்குச் சற்றுப் பயமாக இருந்தது. இருந்தும் இது என்ன என்று தெரிந்துகொள்ள இருந்த ஆர்வம் அவரை அங்கேயே நிற்க வைத்தது.

இப்போது அந்தக் கோளத்தில் ஒரு கதவுச் சுளை திறந்து உள்ளே இருந்து நாக்கு நீட்டுவதுபோல் ஒரு ஏணி போன்ற வஸ்து வெளியே வந்து தரையைத் தொட்டது. பட்டாபிராமன் மார்பைத் தொட்டுக் கொண்டார். மார்பு மிக வேகமாக அடித்துக்கொள்வதை உணர்ந்தார். ஏணி வழியாகக் குதித்துக் குதித்து ஒன்று இறங்கி வந்தது. அது என்றுதான் அதைச் சொல்ல முடியும். நிச்சயம் மனித உருவமில்லை. கிட்டக் கிட்ட வர்ணித்தால் விளம்பரத்திற்கு பெரிதாக வைத்திருப்பார்களே பவுண்டன் பேனா - எட்டு அடிப் பேனா - அதைப் போன்ற வஸ்து குதித்துக் குதித்துத் தரையில் வந்து ஏதோ கார்ட்டூன் படங்களில் போல் ஒரு தடவை ஆடிவிட்டு நின்றது. பட்டாபிராமனை நோக்கி நின்றது என்று சொல்ல முடியவில்லை. அதன் முன்பின் பக்கம் எல்லாம் ஒரே சீராக இருந்ததால் சற்றுநேரத்தில் மற்றொரு பேனா வடிவம் குதித்துக் குதித்துக் குதித்து இறங்கியது.

முதலில் வந்த அதன் அண்ணனுடன் அருகில் நின்றது. பட்டாபிராமன் தன் கைத்தடியை எடுத்துக்கொண்டு ஓட் நினைத்தார். அப்போது...

''பூமி மனிதரே, நாங்கள் நண்பர்கள்'' என்று ஆங்கிலத்தில் குரல் கேட்டது. அங்கிருந்துதான் வந்தது. குரல் ஏதோ ஜலதோஷம் பிடித்த கம்ப்யூட்டரின் குரல்போல் இருந்தது. அதில் மனிதத்துவம் இல்லை. செயற்கையாக இருந்தது. ஏற்ற இறக்கங்கள் இல்லாமல் ஒரே சீராக ஒரே லெவலில் இருந்தது. பட்டாபிராமன் அயர்ந்து போனாலும் அவர் முதல் ஆசை ஓடுவதில்தான் இருந்தது. யாராவது கூட இருந்தால் பரவாயில்லை. கொஞ்சம் தைரியமாக இருக்கலாம்.

அறுபத்து மூன்று வயதில் ஓடுவது எப்படி? விரைவாக நடக்கலாம். விரைவாக நடந்தார்.

''பயப்படாதீர்கள். இங்கே வாருங்கள்'' என்றது பவுண்டன் பேனா. பட்டாபிராமன் ஓடத் துவங்கிவிட்டார்.

''பூமி மனிதரே பயப்படாதீர்கள். நாங்கள் துன்பம் தரமாட்டோம். நாங்கள் நட்புக்காக வந்திருக்கிறோம். வாருங்கள். உள்ளே வாருங்கள். தயவுசெய்து வாருங்கள். வந்தே தீருங்கள். வாருங்கள். வருகிறீர்களா? வந்துவிடுகிறீர்களா?''

பட்டாபிராமன் சற்றுத் தயங்கினார். திறந்திருந்த கதவின் உள்ளே வர்ண வர்ண விளக்குகள் தெரிந்தன. அந்த இரண்டு பேனா நண்பர்களும் அப்படியே நின்றுகொண்டிருக்க அவர்களைப் பார்த்தால் அடிக்கடி வந்திருப்பவர்களைப் போலத் தோன்றவில்லை. பட்டாபிராமன் கொஞ்சம் கிட்டத்தான் போய்ப் பார்க்கலாமே என்று மூன்று தப்படி முன் வந்தார். ''நல்லது நண்பரே அருகில் வாரும்.''

பட்டாபிராமன் மெதுவாக அதை நோக்கி வந்தார்.

* * *

முப்பது நிமிடம் கழித்துப் பட்டாபிராமன் மெயின் ரோடில் மிக வேகமாக நடந்து சென்றுகொண்டிருந்தார். டவுனுக்குப் போகிற வாகனங்கள் எல்லாவற்றையும் நிறுத்த முயற்சி செய்துகொண்டிருந்தார். ஒரு லொறிக்காரன் நிறுத்தினான். பஸ் ஸ்டாண்ட் வரை கொண்டுவிடுவதாகச் சொன்னான். லொறியில் ஏறிக்கொண்டார். லொறிக்காரன் சற்றுத் தண்ணியில் இருந்தான். அது பட்டாபிராமனுக்குத் தெரிந்திருக்கவில்லை. ''நான் இப்ப என்ன பார்த்தேன் தெரியுமா?''

''சாமி?'' என்றான்.

''நான்... இப்ப... வெளி உலகத்து மனுசங்க வந்து இறங்கிறதைப் பார்த்தேன். மைதானத்திலே இறங்கியிருக்காங்க... வேற உலகம்.''

''அப்படியா! அங்கெல்லாம் சர்க்கரை என்ன விலை விக்குதாம்?''

''அவங்க மனுஷங்க இல்லை. வேறு மாதிரி ஆசாமிங்க.''

''எவன் அய்யா இப்ப மனுசன்? நீ மனுசனா சொல்லு. நான் மனுசனா! எவன் மனுசன்? எல்லாரும் திங்கிறாங்க.''

பட்டாபிராமன் மேலும் லொறி டிரைவருக்குப் புரிய வைக்க முயற்சிக்கவில்லை. அவருக்கு நேரம் குறைவாயிருந்தது. அவர்கள் சரியாக ஒரு மணிநேரம் காத்திருப்பதாகச் சொன்னார்கள். பட்டாபிராமனுக்கு வேறு சிலரைக் கூட்டிவந்து அந்த அதிசயத்தைக் காட்ட ஆவலாக இருந்தது. யாரைக் கூப்பிடுவது? தன் மகனைக் கூப்பிடலாம். அப்புறம் ஊருக்குப் பிரபலஸ்தன் யாராவது உடனே வருவதாக இருந்தால் கூப்பிடலாம். பத்திரிகைக்காரனைக் கூப்பிடலாம். ரிப்போட்டர் சாமாராவ் ஸிட்டி கிளப்பில் சீட்டாடிக் கொண்டிருப்பான். அவனுக்கு டெலிபோன் செய்யலாம். அப்புறம் பொலிஸுக்குச் சொல்ல வேண்டும். இப்போதே சொல்லலாமா? அவர்கள் வருவதற்கு நேரமாக்குவார்கள். முதலில் ஓர் ஐந்து ஆறு பேரைக் கூட்டிச் செல்லலாம். காரை எடுத்துக்கொள்ளலாம்.

ஓட்டமும் நடையுமுமாக வீட்டுக்கு வருவதை என்ன, அய்யர் இப்படி ஓடறது என்று கோபாலன் நாயர் கடையிலிருந்து வியந்தான். வீட்டுக்கு வந்ததும் ''ரேவதி, ரேவதி'' என்று மகளைக் கூப்பிட்டார். ரேவதி ஃபெமினா படித்துக்கொண்டிருந்தாள். சோம்பல் முறித்துக் கொண்டு வந்தாள். ''என்ன அப்பா?''

''உடனே காரை எடு. மாடியில் கெமரா ஃப்ளாஷ்ஷெல்லாம் எடுத்துக்கொள்.''

''என்ன விஷயம்?''

''ரேவதி! ஸம்திங் எக்ஸைட்டிங்! நான் உனக்கு ஒன்று காட்டப்போகிறேன். ஊருக்கு வெளியே மைதானத்தில் புல்வெளியில். காரைச் சீக்கிரம் எடு!''

பட்டாபிராமனின் மனைவி வந்தாள். ''கார் எதுக்கு இப்போ? இன்னிக்கு டவுன் ஹாலிலே எம்.டி.ராமநாதன் கச்சேரி. ஏன் அப்படி இரைக்கிறது உங்களுக்கு? ஓடினேளா?''

பட்டாபிராமன் டெலிபோனை நோக்கி ஓடினார். விர் விர் விர் என்று ஸிட்டி கிளப் நம்பரை சுழற்றினார். மகளும் மனைவியும் அவரையே பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

''என்னப்பா?''

''என்னன்னா?''

''விண்வெளியில் ஒரு உபக்கிரகத்திலிருந்து புதிய ஆசாமிகள் வந்து இறங்கியிருக்கிறார்கள்.''

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். ''ஹலோ ஸிட்டி கிளப்! நான் பட்டாபிராமன் பேசறேன். சாமாராவ் ப்ரிட்ஜ் ரூமில் சீட்டாடிக் கொண்டிருப்பார். ரொம்ப அவசரம், அவரைக் கூப்பிட வேண்டும்.''

''நீங்கள் என்ன பேத்தறேள்? உடம்பு கிடம்பு சரியா இல்லையா?''

''ரேவதி போ சீக்கிரம்! கெமராவை எடுத்துக்கொண்டு வா.''

''எதுக்கப்பா?''

''ஹலோ... ஹலோ சாமாராவ்! நான்தான் பட்டாபிராமன் உனக்கு ஒரு பெரிய ஸ்கூப்...''

''சாமாராவ்! சரியாகக் கேள். தி கிரேட்டஸ்ட் ஸ்கூப் இன் தி ஹிஸ்டரி ஆஃப் ஜர்னலிஸம். ஸ்பேஸ் இல்லை, ஸ்பேஸ் விண்வெளி? அதிலிருந்து சில பேர் வந்து நம் ஊருக்குப் பக்கத்திலே வந்து இறங்கி இருக்கா... ஒரு கப்பலிலே... இன்னும் அங்கேயே இருக்கா. ஒரு மணி நேரம் இருக்கப் போறா. இங்கிலீஷ்லே பேசறா. ட்ரான்ஸ் லேடிங் மிஷின் வச்சிருக்கா. என்னோட பேசினா. எட்டு பேர் இருக்கா. நம்ம மனுஷாள் மாதிரி இல்லை. ஏதோ ஒரு உருண்டையா நீளமா தடி மாதிரி... என்னது... நானா...? நான் குடிக்கலை சாமாராவ்! டோண்ட் பி ஸில்லி. நான் சீரியஸாகத்தான் பேசறேன்... பிரிட்ஜா? உன் ப்ரிட்ஜைக் கொண்டு உடைப்பிலே போடு... சாமாராவ் நான் எப்பவாவது உன்கிட்ட ஜோக் பண்ணி இருக்கேனா? அவாளை இருக்கச் சொல்லிட்டு வந்திருக்கேன்... இருக்கேன்னு சொல்லி இருக்கா... நீ அங்கேயே இரு. நான் வந்து உன்னை பிக்அப் பண்ணிக்கிறேன். நான் கெமரா கொண்டு வரேன். பிரஸ் ஆளு அதனாலேதான் உன்னைக் கூப்பிடறேன். ரெடியா இரு. பத்து நிமிஷத்திலே வந்துடறேன்...''

டெலிபோனை வைத்துவிட்டு மூச்சு வாங்கினார்.

''என்னடி ஆச்சு இவருக்கு இன்னிக்கு?''

''இரும்மா. அப்பா என்ன பாத்தீங்க நீங்க?''

''எங்கே கெமரா, சீக்கிரம் கொண்டுவா!''

''என்னப்பா இது?''

''நான் இத்தனை நேரம் கத்தறேனே புரியலை? வெளி உலகத்திலிருந்து சில பேர் வந்து மைதானத்திலே வந்து இறங்கி இருக்கா. நான் பார்த்தேன். கண்ணாலே பார்த்தேன். அதுக்கு உள்ளே போனேன்.''

''எதுக்கு உள்ளே?''

''அவா உருண்டையா ஒரு கப்பல்லே வந்து இறங்கினா. அதுக்குள்ளே போனேன். ஆச்சரியம்! ஆச்சரியம்! எங்கே இந்த ரவி? அவனையும் அழைச்சுண்டு போகலாம்.''

''என்னடிது? இந்த மாதிரி இவர் பேசினதே இல்லையே? ஏன்னா இன்னிக்கு மாத்திரை சாப்பிட்டேளா?''

''சே! என்ன நீங்க டயத்தை வேஸ்ட் பண்ணிண்டு... நான் சொல்றதை நீங்க நம்பலையா? நான் பார்த்ததை நீங்க நம்பலையா?''

''அப்பா நீங்க சொல்றது ரொம்பக் குழப்பமா இருக்கு.''

''குழப்பமெல்லாம் தீர்ந்தே போய்டும், நீ காரை எடு. நீங்க நம்பறது கஷ்டமாகத்தான் இருக்கும். ஒரு தடவை பார்த்துட்டா தெளிவாயிடும். அதனாலேதான் நான் வேகுவேகுன்னு ஓடிவந்தேன். நான் மட்டும் பார்த்துச் சொன்னா ஒருத்தரும் நம்பமாட்டா, கூட ஒரு அஞ்சாறு பேருக்குக் காட்டணும்னுட்டு... காரை எடு, காரை எடு.''

''வெங்கடேசப் பெருமாளே இவருக்கு என்ன ஆய்டுத்து?''

''இந்தா புலம்பாதே! ரேவதி நீ இப்ப...'' அவளை அவர் பார்த்த பார்வையில் அசாத்தியக் கோபம் இருந்தது.

ரேவதி முகத்தில் கலவரத்துடன் ஷெட்டை நோக்கிச் சென்றாள்.

சிட்டி கிளப் வாசலில் தொடர்ந்து ஹார்ன் அடித்துப் பார்த்தும் சாமாராவ் வராதிருக்க பட்டாபிராமன் அலுப்புடன் உள்ளே சென்று சாமாராவ் சீட்டாட்டத்திலிருந்து கையைப் பிடித்து இழுத்தார்.

''பட்டாபி ஸார், ஆர் யூ ஸீரியஸ்?''

''டோண்ட் பி ஸில்லி! கம் மேன்... நான் காட்டுகிறேன்.''

''ஏதாவது ஜோக்காக இருந்தால் சொல்லிவிடுங்கள். நீங்கள் டெலிபோனில் சொன்னது பாதி புரியவில்லை. ஏதோ விண்வெளிஅப்படி இப்படி என்று...''

''சாமாராவ், உனக்குக் கண் இருக்கா? பார்த்தா புரியுமா? வா காட்டறேன்! இதை முதல்லே ரிப்போர்ட் பண்ணா ஓவர் நைட் யூ வில் பி ரிச் மேன்! அதிர்ஷ்ட தேவதை. அவங்க காத்திருக்காங்க. வா!''

தரதரவென்று வாய் திறந்த சாமாராவை காரில் தள்ளி அடைத்தார். ''ராஜரத்தினம் வந்திருக்கானா?''

''இருக்கார்.''

''கூப்பிடு அவனை! இரு. நானே இழுத்துண்டு வரேன். ஒரு அஞ்சு பேராவது பார்க்கலாம்...''

காரில் சாமாராவ் ''மாமி என்ன இது! மாமா இப்படிப் பேசறார். கெமராவை வேற எடுத்துண்டு வந்திருக்காரே!''

''என்னமோ திடீர்னு இப்படி ஆய்டுத்து. பாயைப் பிராண்டறார். கேட்டா சிங்கம் மாதிரி சீறுறார்.''

''அம்மா சும்மா இரு. அம்மா, அப்பா எதையோ விநோதமாப் பார்த்திருக்கார். இல்லைன்னா இப்படி எல்லாம் செய்யவேமாட்டார். என்னதான் பார்க்கலாமே?''

''அறுபத்தி அஞ்சு, அறுபத்தி ஆறு வயசிலே இப்படித்தான் சித்தப்பிரமை ஆயீடும்னு பட்டு சொன்னா. அவளாம்படையான் திடீர்னு நடு ராத்திரியிலே

(22 ஆம் பக்கம் பார்க்க)

# வேண்டாத இடங்களில் ரோமம்: பெண்களுக்கு அதனால் சோகம்!



நுண்மைக்குக் குறியீடாக - உதாரணமாக - மயிரைக் கூறுவார்கள்.

ஆனால், அந்த நுண்ணிய மயிரே சில பெண்களுக்குப் பிரச்சினையாகி விடுவதுண்டு.

பெண்களைப் பொறுத்தவரை - குறிப்பாக கீழைத்தேசப் பெண்களைப் பொறுத்த வரை - நீண்ட கருங் கூந்தல் - கார் குழல் - சுருண்ட கேசம் போன்றவை அழகின் மூலகாரணங்களாகக் கருதப்படுகின்றன.

அளவான - அழகான - புருவ மயிர்களும் இப்படி வரவேற்கப் படுகின்றன.

இதற்கப்பால் கையின் கமக் கட்டுகள், பெண் உறுப்பு போன்ற மறைவான இடங்களிலும் ரோமம் வளர்ந்திருக்கும். இது பொதுவானதே.

ஆனால், இவற்றுக்கு வெளியே நாடி, மார்பு, உதரம், கை, கால்கள் போன்ற அவயவங்களிலும் சில பெண்களுக்கு ரோமங்கள் அளவுக்கு அதிகமாக வளர்ந்து தொல்லை கொடுப்பதுண்டு.

பெண் பெண்ணாக பெண்ணியல்பு கொண்டவளாகக் காட்சி தருவதையே ஆண்களும் சரி, பெண்களும் சரி விரும்புகின்றார்கள்.

இத்தகைய உலகில் இவ்வாறு மோவாய், நாடி, மார்புகள், உதரம், கைகால்கள் போன்ற வற்றில் ரோமங்கள் அடர்த்தியாக வளர்வதை முரட்டுத்தனத்தின் வெளிப்பாடு -ஆண் தன்மை- எனச் சமூகம் கருதுவதால் ஏனைய அழகுகள் இருந்தும் இத்தகைய மயிர்ப் பிரச்சினைகளால் தங்களுக்குள் தாங்களே பொசிந்து போகும் பெண்களும் ஆயிரக்கணக்கில் இருக்கவே செய்கின்றார்கள்.

கொஞ்சம் கறுப்புநிறமுடைய பெண் களுக்கு இத்தகைய இடங்களில் ரோமம் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருந் தாலும் அவை வெளித்தோற்றத்துக்கு நன்கு புலப்படுவதில்லை. ஆனால், சிவந்த, சந்தன நிற அழகுப் பெண்களின் முகத்தில் மீசை, தாடிபோல மயிர் வளர்வதோ, கை, கால்களில் ரோமங்கள் வளர்ந்திருப்பதோ, 'பளிச்' என்று உடனே எடுத்துக் காட்டுவதாக இருக்கும். இதனால் அவர்களின் அழகு விரைவாக, அடிபட்டுப்போய் சமூகத்தில் அவர்களின் தோற்றம் கேள்விக்குறியாகிவிடுகின்றது.

வில்லங்கமான இடங்களில் ரோமம் வளரும் பிரச்சினையால் தங்களுக்குள் தாங்களே மறுகி 'ஹிஸ்டீரியா' என்ற மனநோய்க்கு இலக்கான பெண்களின் எண்ணிக்கையும் ஏராளம்.

இவ்வாறு மித மிஞ்சி ரோமம் வளர் வதை 'ஹேர்சுட்டிஸம்' (Hirsutism) என்று ஆங்கிலத் தில் குறிப் பிடுவார்கள்.

### உடற் குறைபாடு இல்லவே இல்லை

எனினும் இவ்வாறு ரோமங்கள் தேவை யற்ற இடங்களில் வளர்வது ஓர் உடற்குறைபாட் டின் விளைவோ அல்லது நோயோ அல்ல என்று அடித் துக் கூறுகின்றார்கள் மருத்து வர்கள்.

ஒருவரின் மூக்கு நீளமா னது; மற்றொரு வரின் மூக்கு கட்டையானது; மூன்றாம் ஆளின் மூக்கு ஜப்பான் காரனைப் போல சப்பையானது.

- இவ்வாறு பல தோற்றங்களில் பலர் உருவாவது எவ்வாறு இயற்கையின் நியதியோ அதுபோலவே வெவ்வேறு பெண்களுக்கு வெவ்வேறு இடங்களில் உரோமங்கள் அடர்ந்தும் ஐதாகவும் முளைப்பதும் இயற்கையின் ஓர் நியதியே.

கருவாக இருக்கின்ற குழந்தையின் எட்டாவது வாரத்தில் சிறிய ரோமங்கள் உற்பத்தியாகத் தொடங்குகின்றன. அப்போது தொட்டு தனது உயிர் வாழ்க்கை முடிவுற்று அடுத்த சிலமணி நேரம் வரை மனிதனின் ரோமம் வளர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

## பெண்

உடலில் 'ஆன்ரஜன்' என்ற ஓமோன் அதிகமாக சுரப்பதால்தான் உடல்பகுதியில் அதிகமான ரோமங்கள் வளருகின்றன. ஆண் களுக்கு அதிகமாக 'ஆன்ரஜன்' சுரக்கப்படுவ தால்தான் முகம், நெஞ்சுப் பகுதி, கை, கால் போன்ற உடற்பகுதி எங்கும் ரோமங்கள் வளருகின்றன.

இதேபோன்று 'ஆன்ரஜன்' அதிகமாகச் சுரக்கப்படும் பெண்களின் உடல்களில் ரோம வளர்ச்சி ஆண்களைப் போன்று அதிகமாகக் காணப்படும்; அல்லது பரவலாக வழமைக்கு மாறான இடங்களில் ரோமங்கள் வளரும்.

இவ்வாறு பரட்டையாக ரோமங்கள் வளரும் உடற்தன்மை பரம்பரைகள் ஊடாக, சந்ததித் தொடராக கடத்தப்படுவதாவும் டாக்டர்கள் கருதுகின்றார்கள்.

### மருத்துவ முயற்சி பலன் தரவில்லை

வழமைக்கு மாறான இடங்களில் ரோமங்கள் வளருவதைத் தடைசெய்வதற்கான மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் நீண்டகாலமாக மருத்துவர்கள் முயன்று வந்திருக்கிறார்கள்.

எனினும், இத்தகைய மருந்துகள் தலை, புருவம் போன்ற வழமையான மயிர்கள் இருக்கவேண்டிய இடங்களில் உள்ள ரோமங் களை அழிக்காமல் இருக்கவேண்டும் என்பதும் அவசியம்.

இத்தகைய முயற்சியிலான ஆய்வுகள் குறிப்பிடத்தக்க அளவு கூட முன்னேற்ற மடையவில்லை என்கிறது பிரபல மருத்துவ ஆய்வு இதழ் ஒன்று.

எனினும், ஓமோன்கள் அல்லது நாளமில் சுரப்பிகள் தொடர்பான மருந்துகள் மூலம் ரோம வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் எதிர்காலத்தில் வெற்றிபெறும் என்றும் அந்த இதழ் நம்பிக்கை தெரிவிக்கின்றது.

### முகத்தில் உள்ள மயிர்கள்

மண்டையோட்டின் மேல்பகுதி, புருவங்கள் தவிர்ந்த முகத்தின் மோவாய் பகுதியிலுந் தாடி, மீசை முளைக்கும் இடங்களிலும் பெண்களுக்கு ரோமங்கள் வளருவதைத் தடுப்பதற்கு ஒருமுறை உண்டு.

மின்னாள்கை (Electrolysis) மூலம் அல்லது ரேடியோ டிரிக்கோன்சி மூலம் ரோமங்களை வேர்களுடன் பிடுங்கி எடுக்கும் முறையே இது.

அத்தகைய முறையில் மயிர்ப்பைகளிலிருந்து மயிர் முளைகளை அகற்றிவிடுவதால் அங்கிருந்து புதிதாக மயிர்கள் முளைப்பதற்கு வாய்ப்புகள் இல்லாமல் போய்விடுகின்றன.

எனினும், இத்தகைய வழியை நாடுவதிலும் இரண்டு சிக்கல்கள் உள்ளன. ஒன்று இத்தகைய சிகிச்சை முறையைப் பெறுவதற்கு அதில் நன்கு பயிற்சி பெற்ற நிபுணர்கள் தேவை. போதிய பயிற்சியற்றவர்கள் இத்தகைய சிகிச்சையைச் செய்ய முயற்சித்தால் முகத் தின் மிருதுவான தன்மைகெட்டு, மயிர்ப்பைகள் உள்ள பகுதிகளில் சிறு சிறு தழும்புகள் ஏற்பட்டு, தோல் தடித்து அழகற்றதாகிவிடும்.

மற்றையது முகம் போன்ற ஒரு சிறிய பிரதேசத் தில் வழக்கத்துக்கு மாறாக முளைத்திருக்கும் ரோமங்களைக் கட்டுப்படுத்தவே இந்த முறையை நாடமுடியும்.

கை, கால், மார்பு, உதரம் போன்ற [illegible] இடங் களிலும் பரவலாக வளர்ந்துள்ள மயி[illegible] அகற்றுவதற்கு இந்தச் சிகிச்சை முறை[illegible] நாடமுடியாது.

ரோமங்களை அடியோடு அகற்றுவதற்கு நாட்டுப்புற சிகிச்சை முறை ஒன்றும் கூறப்படு கின்றது. அது வருமாறு:

கால் கிலோ சீனி மற்றும் அரைக் கப் எலுமிச்சைச் சாறு ஆகியவற்றை அடுப்பில் வைத்துப் பாகு போல் காய்ச்ச வேண்டும். பின் அடுப்பில் இருந்து இறக்கி ஒரு மேசைக்கரண்டி கிளிசரினைச் சேர்த்து ஆறிய வுடன் ஒரு பாத்திரத்தில் கொட்டி குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவேண்டும்.

தேவைப்படும்போது வெளியே எடுத்துச் சூடாக்கி சிறிது கையால் எடுத்து ரோமம் இருக்கின்ற இடங்களில் தடவி தடிப்பான துணியை ஒட்டி ரோமம் வளர்ந்துள்ள திசைக்கு எதிரான திசைக்குத் துணியை இழுத்துவிட்டால் ரோமம் அனைத்தும் துணியோடு வந்துவிடும். இத்தகைய எளியமுறை யைக் கடைப்பிடித்தால் பெண்களின் முகம் மற்றும் உடல்பகுதியில் ரோமம் வளர்வதைத் தடுக்கலாம்.

- இவ்வாறு இந்தச் சிகிச்சை முறையில் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

### மார்பிலும், உதரத்திலும் உள்ள மயிர்கள்

மார்பிலும், உதரத்திலும் மயிர்கள் நெருக்க மாக வளராவிட்டாலும் அங்கு ரோமங்கள் தடித்து, நீண்டதாக வளரக்கூடும்.

இவற்றை அகற்றுவதற்கும் மின்னாள்கை அல்லது ரேடியோ டிரிக்கோன்சி முறையே சிறந்தது.

பெண்களைப் பொறுத்தவரை இப்பகுதிகளில் காணப்படும் ரோமங்கள் பொதுவாக வெளியாரின் கண்களில் படுவதில்லையாதலால் இந்த ரோமங் கள் குறித்து அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவை யில்லை.

என்றாலும் விரும்பினால் மயிர்களை முற்றாக அகற்றும் 'கிறீம்கள்'மூலமோ அல்லது 'ஷேவிங்' மூலமோ அவ்வப்போது இந்த ரோமங்களை அகற்றலாம்.

ஆனால் 'ஷேவிங்' செய்தால் அந்த இடங்கள் தடித்து ரோமங்கள் வளர்வது தூண்டப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

### கை,கால்களில் காணப்படும் மயிர்கள்

பெண்களின் கை, கால்களில் காணப்படும் ரோமங்களை இரண்டு வகைப்படுத்தலாம்.

பொதுவாக எல்லாப் பெண்களினதும் கை, கால்களில் மிருதுவான, மென்மையான நுண்ணிய

(22ஆம் பக்கம் பார்க்க)

# இளமையை ஆராதியுங்கள்!



முதுமைத்தோற்றம் வெறும் வயது முதிர்ச்சியால் மட்டும் வந்துவிடுவதில்லை.

வயோதிபத்தோற்றம் உங்களைக் கௌவுவதைக் தவிர்ப்பதற்கு நல்ல உடல் நலம் மகிழ்ச்சியான மனநலம் போன்றவை முக்கியம்.

இளமையை உங்களுடன் கட்டி வைத்திருக்க அதனை ஆராதியுங்கள். அதற்குச் சில ஆலோசனைகள் இவை.

அதிக 'மேக் அப்', குட்டை முடி போன்றவை வயதைக் குறைக்கா. நல்ல ஆரோக்கியம்தான் அதைச் செய்யமுடியும். உங்கள் உடலின் ஒவ்வொரு நரம்பும் மூளையின் ஒவ்வொரு 'செல்'களும் உயிர்த்துடிப்போடு விளங்கவேண்டும்; கண்கள் பளிச்சென்று, வாழ்க்கையின் மீது ஆர்வத்துடன் அலைபாயவேண்டும்; இதழ்களில் எதற்கும் அதிகமாக அலட்டிக்கொள்ளாத ஒரு புன்னகை நெளியவேண்டும். இது முக இளமைக்குப் பெரும்துணைபுரியும்.

### உடற்பயிற்சிகளின் மாயம்

உங்கள் இரத்த ஓட்டத்தை அதிகரித்துச் சீர்ப்படுத்தும் உடற்பயிற்சிகள் உங்கள் முழுஉடலுக்கும் நன்மை செய்வதோடு முகத்தையும் பொலிவாக்குகின்றன. உடலில் உள்ள தொள தொளப்பான சதையினை உறுதியாக்கி இளமைத் தோற்றத்தைத் தருகின்றன. எடுத்ததற்கெல்லாம் பதற்றப்படுவதால் முழு உடலும் பாதிக்கப்படுவதோடு முகமும், தலைமுடியும் பொலிவை இழக்கின்றன. கடுகடுப்பான முகத்தில் முதுமைத்தன்மை, தன் கோடுகளை உரிய வயதிற்கு முன்பே எழுதுகிறது.

### புகைப்பதும் குடிப்பதும்

பெண்கள் புகைப்பதால் நுரையீரல் மட்டுமல்ல இரத்த ஓட்டமும் கெட்டுப்போவதால் தோல் கறுத்து, வரண்டுபோகிறது. குடிப்பதால் முகம் ஊதிப்போய் வேண்டாத சதைபோட்டு அழகு குலைகிறது.

### அதிக வெயில்

அதிக வெயில் சருமத்தின் அடியில் இருக்கும் ஈரப்பசையை வரண்டு போகச் செய்வதால், சருமம் இளமைத்தன்மையை இழக்கிறது. 'சன்ஸ்கிரீன்' உள்ள சருமப் பாதுகாப்பு 'க்ரீம்'கள் உபயோகிக்கலாம்.

கண்களின் பாதுகாப்பிற்கு கண்ணாடி அணிவதும் நல்லது. ஒருநாளைக்கு 3முறையாவது சுத்தமாக முகம் கழுவி, நடுநடுவில் ஈரப்பசையைப் பாதுகாக்க ஈர டவலால் முகத்தைத் துடைக்கலாம்.

### பற்களின் பாதுகாப்பு

வருடத்தக்கு ஒருமுறை உங்கள் பற்களை நல்ல பல் மருத்துவரிடம் சென்று காண்பித்து சரிபார்த்து கிளீன்செய்து கொள்வது நல்லது.

பற்கள் ஆங்காங்கே உடைந்தோ, சொத்தை ஏற்பட்டோ இருந்தால் அவற்றைச் சரிசெய்து கொள்ளவேண்டும். 'Bonding' என்னும் முறையில் நுனிகளில் உடைந்த பற்களையும் சீரமைத்துக்கொள்ளலாம். பற்களின் ஆரோக்கியம் உங்களின் முக அழகிற்கு மட்டுமல்ல, உங்களது ஆரோக்கியத்திற்கும் முக்கியமான ஒன்று.

### நடையழகு

நிமிர்ந்து, நிலம் அதிராமல் சீரான வேகத்தில் நடப்பது அழகிற்கும், முதுகுத் தண்டிற்கும் நல்லது. நடக்கும்போதும், உட்காரும் போதும் சறுக்கியபடி அமர்வதால் உங்கள் முகத்தில் இரட்டைத் தாடைகள் இருப்பதுபோல் தோன்றும். கைவீசித் தினமும் ஓர் அரைமணி நேரம் நடப்பதைப் பழக்கப்படுத்திக்கொள்ளலாம். உட்காரும்போதும் முதுகை நேராக வைத்துக்கொண்டு அமருங்கள்.

### நல்ல உறக்கம்

இரவில் குறைந்தது ஆறு அல்லது எட்டுமணி நேர உறக்கம் அவசியம். இல்லாவிட்டால் கண் களுக்கு அடியில் கருவளையம் விழும். இயற்கை யாகத் தூங்குவதே நல்லது. தூக்கமாத்திரைகளை நாடாதீர்கள். உறக்கம் வருவதில் பிரச்சினை என்றால் 7மணிக்கு மிதமாக சாப்பிட்டு விட்டு ஒருமணிநேரம் காலாற நடந்த பின் படுக்கலாம். படுக்கும்போது எந்தப் பிரச்சினைகளைப் பற்றியும் சிந்திக்கக்கூடாது.

### ஏனையவை

இதுதவிர, அழகிய கேசம், சுத்தமான கவர்ச்சியான நகங்கள், சொரசொரப்பற்ற தோல், உடலுக்குப் பொருத்தமான ஆடைகள் போன்றவற்றைப் பேணுவதிலும் விசேட அக்கறை நீங்கள் எடுக்கவேண்டும்.

### மனதைப் பார்த்துக்கொள்ளுங்கள்

மனதில் சேரும் ஒட்டடைகளை அவ்வப் போது துடைத்துவிடுங்கள். காரியங்களைச் செம்மையாகச் செய்துவிட்டு, நல்ல பலன் வரும் என்று காத்திருங்கள். காத்திருந்து ஒரு நல்லது நடக்கும்போது அதன் சுகமே அலாதிதான். வாழ்க்கையில் உள்ள விளையாட்டுத்தனங்களை மறந்துவிடாதீர்கள். எப்போதும் கடமை என்று சீரியஸாகி விடாதீர்கள். குறும்புகள்...கேலிகள் வாழ்க்கைக்கு வர்ணம் சேர்க்கும்... வாழுங்கள்... உயிருள்ளபோதே!

# சிறுவர் பக்கம்



# ஆற்றைக் கடந்த கதை

பரமார்த்தகுரு என்ற ஒருவர் பூஞ்சோலை என்ற ஊரில் வாழ்ந்து வந்தார். பகுத்தறிவிற்கும் அவருக்கும் சம்பந்தமே இல்லை. கடைந்தெடுத்த முட்டாள்; கற்பனையும் செய்துபார்க்க முடியாத அறிவிலி; எதையும் எளிதில் நம்பிவிடும் ஏமாளி; சிந்திக்கும் திறன் அற்றவர்; அவரது செயல்கள் எல்லாம் விநோதமாய் இருக்கும்.

ஜாடிக்கு மூடி சேர்ந்தது போல் அந்த பரமார்த்த குருவிற்கு சீடர்கள் ஐவர். மட்டி, மடையன், முட்டாள், மிலேச்சன், பேதை என்பது அவர்களது பெயர்கள். இந்த ஐந்து சீடர்களும் முட்டாள்தனத்தில் குருவிற்கு ஒரு படி மேலானவர்கள். ஞானசூனியன்களான இவர்களுக்கு குருபக்தி மட்டும் குப்பை மேடாய் உயர்ந்திருந்தது. குரு கிழித்த கோட்டைத் தாண்டமாட்டார்கள். இவர்களுக்கென்று ஒரு மடம் இருந்தது. மடத்திற்கு கிடைக்கும் குறைந்த வருவாயில் இவர்களால் காலந்தள்ள முடியவில்லை. எனவே அப்போதைக்கப்போது செல்வந்தர்கள் சிலரை நாடிச் சென்று பொருள் பெற்று வந்தார்கள். இதற்காக அவர்கள் அடிக்கடி வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள வேண்டி வந்தது.ஒரு நாள் பரமார்த்தகுருவும், அவரது ஐந்து சீடர்களும் அழகர்சிங்கம்பட்டி சின்ன ஜமீன் வெங்கடசாமியைப் பார்க்கப் புறப்பட்டனர். வழியில் ஆறு ஒன்று குறுக்கிட்டது.

ஆற்றில் இடுப்பளவு தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றில் இறங்கப்போன குருவை மட்டி தடுத்தான்.

"குருவே, குருவே! மோசம் போக இருந்தீர்கள். ஆற்றில் இறங்க வேண்டாம்."

"ஆழம் அதிகம் என்கிறாயா?"

"இல்லை. இந்த ஆறு ஆளையே விழுங்கிவிடும். என்கிறேன்."

"ஆறு எப்படி ஆளை விழுங்கும்?"

"இதோ, என் பாட்டனார் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன், கேளுங்கள். என் பாட்டனார் பெரிய உப்பு வியாபாரி. ஒரு சமயம் பன்னிரண்டு கழுதைகளில் உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு இந்தப் பேயாற்றில் இறங்கி இருக்கிறார். முதலில் முழங்காலுக்குக் கூடத் தண்ணீர் இல்லையாம். பிறகு பாருங்கள், வரவர இந்தத் தந்திரக்கார ஆறு தண்ணீரை அதிகமாக ஓடவிட்டு, கழுதைகளையும், என் தாத்தாவையும் மூழ்கடிக்கப் பார்த்திருக்கிறது. என் தாத்தாவும், கழுதைகளும் மிகவும் சிரமப்பட்டு நீந்தி மறுகரைக்கு வந்துவிட்டார்களாம். கடைசியில் பார்த்தால் கழுதைகளின் மேல் உப்புச் சாக்குகள் மட்டும் தைத்தது தைத்தப்படியே இருந்திருக்கின்றன. ஆனால், அதிலிருந்த உப்பு மட்டும் காணவில்லையாம். தோலிருக்கச் சுளை விழுங்கியது போல் அத்தனை உப்புயையும் கபளீகரம் செய்திருக்கிறது இந்தப் பேயாறு. நம்மை அப்படி விழுங்கிவிடாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?"

"குருவே, இது மிகப் பொல்லாத ஆறுதான். இறங்கினால் பிடித்து விழுங்கிவிடும்" என்றான் முட்டாள்.

"நல்ல வேளை! சரியான நேரத்தில் இதைச் சொன்னாய். இல்லாவிட்டால் வலியச் சென்று வாயில் மாட்டி இருப்போம்." இது மடையனின் கூற்று.

"ஆற்றை எப்படிக் கடப்பது?" மிலேச்சன் கேட்டான்.

"ஆறு தூங்கும்போது செல்லலாம்" குரு சொன்னார்.

குருவும், அவரது சீடர்களும் அருகிலிருந்த மாந்தோப்பிற்குச் சென்றார்கள். அந்தப் பேயாற்றின் மோசமான கதைகள் அங்கு பேசப்பட்டன.

அரவு சுமார் எட்டு மணி இருக்கும்.

"சிஷ்யர்களே, உங்களில் தைரியசாலியான ஒருவன் எழுந்துபோய் பேயாறு தூங்குகிறதா, விழித்திருக்கிறதா? என்று பார்த்து வாருங்கள்."

பேதை எழுந்தான்.

"நீ இருடா, தொடைநடுங்கி! நான் போய்ப்பார்த்து வருகிறேன். "முட்டாள் எழுந்து நடந்தான். அவனுக்குப் பாதி வழியிலேயே பயம் தொற்றிக்கொண்டது. இருப்பினும், அவன் ஆற்றின் அருகில் சென்றுவிட்டான்.

கையை விட்டுப் பார்ப்போமா, காலைவிட்டுப் பார்ப்போமா என்ற யோசனை. லபக்கென்று ஆறு எட்டிபிடித்துக் கொண்டால் என்ன செய்வது? யோசனை செய்தான். ஆங்! இதுதான் சரியான வழி.குச்சியால் தட்டிப் பார்ப்போம்.

யாரோ சற்று முன் சமையல் செய்துவிட்டு, விட்டுச் சென்ற சாம்பல் பூத்த விறகுக் கட்டையொன்று கிடந்தது. அதைக் கையிலெடுத்தான் முட்டாள். மெதுவாக, மிகவும் மெதுவாக அடிமேல் அடியெடுத்து வைத்து அந்தக் கொள்ளிக்கட்டையைத் தண்ணீரில் வைத்தபோது 'புஸ்ஸ்ஸ்' என்ற சத்தத்துடன் புகையும் கிளம்பியது. உள்ளங்கால் உச்சந்தலையில் பட பதைபதைக்க ஓடிவந்தான் முட்டாள்.

"ஐயோ செத்தேன், செத்தேன்" என்று அலறிக்கொண்டே குருவின் முன்வந்து விழுந்தான்.


"என்னடா, ஆறு விழித்திருக்கிறதா?"

"ஆம் குருவே. தலை தப்பித்தது தம்பிரான் புண்ணியமாகிவிட்டது. ஆறு 'புஸ்' லென சத்தம் எழுப்பி கடுங்கோபமாக என்னை விரட்டிக் கொண்டு வந்தது. தங்கள் அருளாலும், தெய்வ கடாட்சத்தாலும் தப்பிவிட்டேன்." மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கச் சொன்னான். நண்பர்களும் குருவும் அவனைத் தேற்றினார்கள்.

விடியற்காலை சுமார் நான்கு மணி இருக்கும். "இப்போது ஆறு நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கும். மடையா, நீ பயப்படாமல் போய் வா" என்றார் குரு.

மடையனுக்கு பயம் பாதையை மறைந்தாலும் அந்த ஒற்றையடிப் பாதை வழியாகச் சென்று முட்டாள் பாதி வழியில் வீசிவிட்டு வந்த அதே கட்டையை எடுத்து, அதை மெதுவாகத் தண்ணீரில், வேகமாக ஓடிவந்த மடையன், "குருவே, குருவே! எல்லோரும் வேகமாக எழுந்து வாருங்கள். ஆறு ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறது." என அவசரப்படுத்தினான். அவர்கள் எழுந்தார்கள். தோய்ந்தான். இப்போது எந்த சப்தமும் இல்லை. புகையும் இல்லை வேகமாக ஓடிவந்த மடையன், "குருவே, குருவே! எல்லோரும் வேகமாக எழுந்து வாருங்கள். ஆறு ஆழ்ந்து தூகிக்கொண்டிருக்கிறது." என அவசரப்படுத்தினான். அவர்கள் எழுந்தார்கள். "ஒருவர் பின் ஒருவராக பூனை போல் மெதுவாகச் செல்லுங்கள். சிறு சப்தமும் வேண்டாம்." குரு எச்சரித்தார். தண்ணீரில் இறங்கினார்கள். "அப்பாடா! தப்பித்துவிட்டோம்," பரமார்த்தகுரு பெருமூச்சுவிட்டார். சிஷ்யர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். மிலேச்சனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. "குருவே, குருவே! நாம் ஆறு பேர் இருக்கிறோமா என்று எண்ணிப் பார்த்துவிட்டால் என்ன?" "அதுவும் சரிதான். எல்லோரும் என்னுடன் வந்து வரிசையாக நில்லுங்கள். மிலேச்சன் எண்ணட்டும்." வரிசையில் நின்றவர்களை ஒண்ணு, ரெண்டு என்று எண்ணிய மிலேச்சன் தன்னை மட்டும் எண்ணவில்லை. "ஒருவர் இடுப்பை ஒருவர் கட்டிப்பிடித்துக் கொள்ளுங்கள். முட்டாள், நீ முதலில் போ. நான் கடைசியில் வருகிறேன்."அப்படியே அமைதியாக ஆற்றைக் கடந்தார்கள். "குருவே, மோசம் போனோம். நம்மில் ஒருவனை ஆறு விழுங்கி விட்டது. ஆறு பேருக்கு ஐந்துதானே இருக்கிறோம்." "போடா, எண்ணத் தெரியவில்லை உனக்கு." முட்டாள் முன்வந்து மற்றவர்களை எண்ணினானேயொழிய அவன் தன்னையும் கணக்கில் சேர்த்துக் கொள்ளவில்லை. இவ்வாறாக அந்த ஆறு பேரும் எண்ணும் போது எதிரிலிருந்தவர்களை எண்ணினார்களே தவிர தங்களை விட்டுவிட்டார்கள். யாரோ ஒருவனை ஆறு பிடித்து விழுங்கிவிட்டது என்ற முடிவுக்கு வந்தார்கள். ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டு ஒப்பாரிவைக்க ஆரம்பித்துவிட்டார்கள். பொழுது விடிய ஆரம்பித்துவிட்டது. அப்போது அங்கு குதிரையில் வாட்டசாட்டமான ஒரு மனிதர் வந்தார். இவர்கள் அழுவதைக் கண்ட அவர், "ஐயன்மீர்! ஏன் அழுகிறீர்கள்?" "அந்த அநியாயத்தை எப்படிச் சொல்வோம்?" "நாங்கள் அவரைக் கொத்து போல் ஆறு பேர் வந்தோம். ஆற்றைக் கடக்கும்போது எங்களில் ஒருவரை இந்தப் பேயாறு விழுங்கிவிட்டது. இப்போது ஐந்து போர்தான் இருகிறோம்." என்று சொல்லிக் குரு அழுதார். ஆறு பேர் உலக்கைகள் போல் நின்றுக்கொண்டு ஐந்து என்கிறார்களே! என்னே இவர்களது அறியாமை! என்று நினைத்த அவர், "நன்றாக எண்ணினீர்களா?" என்றார். "நாங்கள் என்ன பொய்யா சொல்கிறோம்? நீங்கள் எண்ணிப் பாருங்கள்." "உண்மைதான், ஐந்து போர்தான் இருக்கிறீர்கள். இதோ என் சட்டையில் ஒரு மந்திரம் இருக்கிறது. இதன் மகிமையால் ஆறு விழுங்கிய உங்களில் ஒருவரை என்னால் கொண்டு வர முடியும்." "ஐயா, ஐயா அப்படியே செய்யுங்கள். உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்" என்றார் குரு. "தட்சணை இல்லாமல் மந்திரம் பலிக்காது. இதற்கு நீங்கள் இருபது பொற்காசுகள் கொடுக்க வேண்டும்." "இதோ தருகிறேன்" என்றவாறே குரு தன் வேட்டியில் படுமுடிச்சுப் போட்டு வைத்திருந்த இருபது பொற்காசுகளை அவிழ்த்துக் கொடுத்தார். "நண்பர்களே! நான் இப்போது சொல்வதைக் கவனமாக் கேளுங்கள். முதலில் நிற்பவரின் முதுகில் ஒரடி அடிப்பேன். அவர் தன் பெயரைச் சொல்லி, ஒன்று என்று கத்தி உங்களைச் சுற்றி வந்து என் பின்னே நின்றுக்கொள்ள வேண்டும். "அப்படி அடித்தால் - மந்திரத்தின் மகிமையால் ஆற்றில் போனவர் வந்துவிடுவார்." அவர்கள் வரிசையாக நின்றனர். முதலில் முட்டாளிற்கு முதுகில் பலத்த சாட்டை அடி. "முட்டாள் ஒண்ணு" - சுற்றிவந்து குதிரைக்காரனின் பின்னால் நின்றான். "மட்டி இரண்டு", "மடையன் மூணு", "மிலேச்சன் நாலு", "பேதை ஐந்து" ஆறாவது குருவிற்கு முதுகில் பலத்த அடி. அவர், "ஐயோ, பரமார்த்தகுரு ஆறு" என்றார். "இப்போது ஆறு பேர் இருக்கிறீர்கள் அல்லவா?" "ஆம், ஆம். உங்கள் மந்திரத்தின் மகிமையே மகிமை" என்று சொல்லிவிட்டு, அவர்கள் தங்கள் மடத்திற்கு விரைந்தனர். (தொடரும்)

## அழகாக நிறம் தீட்டுங்கள் 57



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவுசெய்யப் படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 54



செல்வி சுதாஜினி, இல.97, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா

### பாராட்டுப் பெறுவோர்...

1. சாரிஷோபனா, தரம் 4ஏ, மு/தண்ணீரூற்று சீ.சீ.த.க. பாடசாலை.
2. குதைனா மரியம் நபார், தரம் 1எவ், முஸ்லிம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி.
3. ஜெயாழினி, புனித சூசையப்பர் முன்பள்ளி, வட்டக்கச்சி.
4. ஜே.எப்.பாத்திமா மரியம், தரம் 3, ஸைனம் முஸ்லிம் மகா வித்தியாலயம், போல்ஸ் வீதி, புத்தளம்


# சிறுவர் கைவண்ணம்



வ சஜீவன், தரம் 8பீ. மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா. புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு.



ஜாகவன், தரம் 6T, கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, வெள்ளவத்தை.



அக்ஷா மிசுருணி, கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, கொழும்பு 15.



ஜெயாழினி, புனித சூசையப்பர் முன்பள்ளி, வட்டக்கச்சி.

# அநுராதபுரம்: மு.கா.வுக்கு பெரும் சவால்!

அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலில் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம் வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

இதனால் குறித்த இரு மாகாண சபைகளிலும் இதுவரை காலமும் இருந்து வந்த முஸ்லிம் பிரதிநிதித்துவம் இழக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது என சென்ற வாரக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம்.

இந்நிலையில் இவ்விரு மாகாண சபைகளிலும் முஸ்லிம்களுக்கு மிகவும் முக்கியத்துவம் மிக்கது எனக் கருதப்படும் அநுராதபுர மாவட்டத் தேர்தல் கள நிலைவரம் குறித்து விரிவாக ஆராய்வதே இன்றைய கட்டுரையின் இலக்காகும்.

**தனித்துக் களமிறங்கியுள்ள அதாவுல்லாவின் குதிரை**

வட மத்திய மாகாண சபைக்கு அநுராதபுர மாவட்டத்திலிருந்து 2 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் தேர்தலில் 12 அரசியல் கட்சிகளிலும் 7 சுயேச்சை அணிகளிலும் மொத்தமாக 456 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இவர்களுள் அறுபதுக்கு மேற்பட்டோர் முஸ்லிம் வேட்பாளர்களாவர். தேசிய காங்கிரஸ் கட்சியிலும், ஒரு சுயேச்சைக் குழுவிலும் தலா 24 முஸ்லிம் வேட்பாளர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி, ஜே.வி.பி. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளிலும் இன்னும் பல முஸ்லிம் வேட்பாளர்களும் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஏ.ஆர்.அமானுல்லா என்பவரும், பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் சட்டத்தரணி அசார்தீன் என்பவரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ராவுத்தார் நெய்னா முகம்மதுவும் போட்டியிடுகின்றனர். அத்துடன் ஐ.எச்.எல். முஸம்மில் என்பவர் ஜே.வி.பி. சார்பில் போட்டியிடுகின்றார்.

அதேவேளை அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ், தனது குதிரைச் சின்னத்தில் தனித்துக் களமிரங்கியுள்ளது. சட்டத்தரணி எஸ்.சி.எஸ். இப்றாகிம் முதன்மை வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

**ராவுத்தாரின் யானைச் சவாரி!**

ரஊப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டிணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. முஸ்லிம் காங்கிரஸைக் கடந்த 15 வருடங்களாக வட மத்திய மாகாண சபையில் பிரதிநிதித்துவம் செய்து வந்த ராவுத்தார் நெய்னா முகம்மதே மு.கா.சார்பில் ஐ.தே.க. பட்டியலில் போட்டியிடுகின்றார்.

ஐ.ம.சுதந்திரக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை பொருத்தமான முஸ்லிமம் வேட்பாளர் ஒருவரைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு அக்கட்சியால் முடியாமல் போய் விட்டது எனக் கூறப்படுகிறது.

அரசக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அமைச்சர் அதாவுல்லாவும் தனது தேசிய காங்கிரஸை, சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைத்துப் போட்டியிடச் செய்வதற்கு முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுவதற்குப் பல முஸ்லிம் பிரமுகர்கள் முண்டியடித்துக் கொண்டு - கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டிருந்தமையையும் அறிய முடிந்தது.

எனினும், அக்கட்சியின் நீண்ட கால அங்கத்தவரும், அக்கட்சி சார்பில் முன்னர் இரு தடவைகள் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு - வெற்றியீட்டி - வடமத்திய மாகாண சபையில் இரு முறைகள் - சுமார் பத்து வருடங்கள், உறுப்பினராகப் பதவி வகித்தவருமான அப்துல் ஹமீட் என்பவருக்கு இம்முறை போட்டியிடும் வாய்ப்பை ஐ.தே.க. வழங்கவில்லை.

**ஜே.வி.பி. உத்தரவாதம்**

இதேபோன்று கட்சியின் இன்னும் பல முஸ்லிம் முக்கியஸ்தர்களும் இம்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் கேட்டு - கெஞ்சி மன்றாடி - ஏமாந்துவிட்டனர்.

இதனால் அவர்களுள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறி - மாற்றுக் கட்சிகளில் இணைந்துள்ளனர். இன்னும் சிலர் கட்சியில் இருந்து கொண்டு - தாம் வெட்டுப்படக் காரணமாக அமைந்து - ஐ.தே.கவின் வேட்பாளர் நியமனத்தைத் தட்டிப் பறித்துக் கொண்ட - சட்டத்தரணி அசார்தீனுக்கு வெஞ்சம் தீர்ப்பதற்காக அவருக் கெதிராகவும், மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா போன்ற சிங்கள வேட்பாளர்களை ஆதரித்தும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது இப்படியிருக்க, ஜே.வி.பி. சார்பில் போட்டியிடுகின்ற முஸ்லிம் வேட்பாளர் தோல்வியடைந்தாலும் கூட அவர் மாகாண சபை உறுப்பினராக நியமிக்கப்டுவார் என்கின்ற உத்தரவாதம் அக்கட்சியின் தலைமைத்துவத்தினால் வழங்கப்பட்டிருப்பதால் வேட்பாளர் முஸம்மில், ஜே.வி.பிக்கு முஸ்லிம்களின் வாக்குகளைத் திரட்டிக் கொடுப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றார்.



**- அஸ்லம் எஸ்.மௌலானா -**

**முதல் தேர்தலில் மூவர் வெற்றி**

இவ்வாறு முஸ்லிம்களிடையே பல முனைப் போட்டி நிலவும் சூழ்நிலையில் அநுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் மாகாண சபைப் பிரதிநிதித்துவம் பறிபோய் விடும் என்கின்ற அச்சம் எழுந்துள்ளது.

1988 ஆம் ஆண்டு முதன் முறையாக நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து ஐ.தே.க.சார்பில் போட்டியிட்ட மூன்று முஸ்லிம்கள் வெற்றியீட்டி சாதனை படைத்தனர்.

அப்போது ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியுமே தேர்தலில் போட்டியிட்டிருந்ததால் முஸ்லிம்கள் ஒரே அணிக்கு வாக்களித்து மூன்று பிரதிநிதித்துவங்களை வென்றெடுத்தனர்.

1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரண்டாவது மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே. க., சு . ம.க. ஆகியவற்றுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி என்பனவும் போட்டியிட்டன. இதில் முதன் முறையாகப் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.க.வின் கோட்டை என வர்ணிக்கப்பட்ட அநுராதபுர மாவட்டத்தில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று - ஓர் ஆசனத்தை வெற்றி கொண்டது.

**மு.கா.நுழைவு**

ராவுத்தார் நெய்னா முகம்மது என்பவரே மு.கா.சார்பில் உறுப்பினரானார். அதே வேளை ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டவர்களுள் ஒரு முஸ்லிம் வெற்றியீட்டியதுடன் முன்னர் உறுப்பினர்களாகப் பதவி வகித்த இருவர் தோல்வியடைந்தனர்.

ஐ.தே.க.சார்பில் அப்துல் ஹமீட் என்பவர் மாத்திரமே இரண்டாவது முறையாகவும் வெற்றி பெற்றிருந்தரர். இதன் பிரகாரம் வட மத்திய மாகாணத்தின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் அநுராதபுர மாவட்ட முஸ்லிம்களுக்கு இரு பிரதிநிதித்துவங்கள் இருந்துள்ளன.

1998 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் ஐ.தே.க. உறுப்பினர் அப்துல் ஹமீதும் தோல்வியடைந்தார். பல கட்சிகளிலும் முஸ்லிம் வேட்பாளர்கள் பலர் போட்டியிட்ட நிலையில் முஸ்லிம் காங்கிரஸ், பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டு - தனது ஒரு ஆசனத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

அப்போது முஸ்லிம் காங்கிரஸ், சந்திரிகா அரசில் அங்கம் வகித்திருந்ததுடன் மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், பலமிக்க அமைச்சராகவும் திகழ்ந்தார்.

முஸ்லிம் அரசியலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நுழைவானது, ஐ.தே.க.வுக்கு நீண்ட காலமாக இருந்து வந்த முஸ்லிம் வாக்குகளில் பாரிய சரிவை ஏற்படுத்தியிருந்ததுடன், அக்கட்சி சார்பான முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கும் ஆப்பு வைத்தது எனலாம்.

**தனித்துவப் பாதை**

இதனால் வடமத்திய மாகாண சபையில் அநுராதபுர மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், ஐ.தே.க.சார்பில் அங்கம் வகித்த மூன்று முஸ்லிம் உறுப்பினர்களும் பதவியிழக்கச் செய்யப்பட்டு - தனக்கென ஒரு பிரதிநிதித்துவத்தை மு.கா. உறுதி செய்து கொண்டது.

"முஸ்லிம் பிரதிநிதித்துவம் என்பது சிங்களப் பேரினவாதக் கட்சிகளில் அல்லாமல், முஸ்லிம்களுக்கான தனித்துவக் கட்சியில் வென்றெடுக்கப்படுவதன் மூலமே சமூகத்தின் குரலாக ஒலிக்க முடியும்" என்ற வாதத்தை மறைந்த தலைவர் அஷ்ரப் முன்வைத்து, வலியுறுத்தி வந்துள்ளார்.

ஆகையினால் தேசியக் கட்சிகளில் இருந்த முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாமல் போவது குறித்து முஸ்லிம்கள் சலனம் கொள்ளத் தேவையில்லை எனவும் அக்கட்சிகளில் எமக்கு பத்து ஆசனங்கள் இருப்பதை விட முஸ்லிம் காங்கிரஸில் ஒரேயொரு ஆசனம் இருப்பதே மேலானது என்றும் அவர் கூறி வந்தார்.

அவரது இக்கருத்தை முஸ்லிம் மக்கள் ஏற்று - அங்கீகரித்துள்ளனர் என்பதை கடந்த காலத் தேர்தல் முடிவுகள் அனைத்துமே நிரூபித்துக் காட்டியுள்ளன. இந்த அடிப்படையிலேயே அநுராதபுர மாவட்ட முஸ்லிம்கள், மு.கா.வின் வரவுக்கு பின்னர் - அக்கட்சியை முழுமையாக ஆதரித்து வந்துள்ளனர்.

1993, 1998, 2004 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் அம்மாவட்டத்தில் மு.கா.தொடர்ச்சியாக ஓர் ஆசனத்தை வெற்றி கொண்டு வந்திருப்பதும், 2002, 2004 பொதுத் தேர்தல்களில் மு.கா.சார்பில் ஐ.தே.கவில் போட்டியிட்ட ராவுத்தார் நெய்னா முகம்மது 18 ஆயிரத்திற்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டமையும் மேற்படி கருத்தை உறுதிப்படுத்துகின்றன.

**மு.கா. நெஞ்சை நிமிர்த்துமா?**

ஆனால், முஸலிம் கட்சிகளும், அரசியல் அணிகளும் பல்கிப் பெருகியுள்ள இன்றைய சூழ்நிலையில் ரஊப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸினால் அந்த வரலாற்றுத் தடத்தை தொடர முடியுமா என்கின்ற சந்தேகம் எழுகின்றது.

ஐ.ம. சுதந்திரக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. மற்றும் கட்சிகளில் முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிடும் அதேவேளை மு.கா. வேட்பாளர் போட்டியிடு கின்ற ஐ.தே.க.வின் யானைச் சின்னத்திலும் அக்கட்சி சார்பான முஸ்லிம் பிரமுகர் ஒருவர் களமிறக்கப் பட்டிருப்பதானது மு.காவுக்கு பலத்த போட்டியை ஏற்படுத்தியுள்ளது.

இவை தவிர அமைச்சர் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ், இத்தேர்தல் களத்தில் குதித்திருப்பதானது முஸ்லிம் காங்கிரஸுக்கு பெரும் தலையிடியையும், சவாலையும் தோற்றுவித்துள்ளது. அதுவும் தான் தனித்துவத்தை இழந்து - யானைச் சின்னத்தில் போட்டியிடும் போது அதாவுல்லாவின் காங்கிரஸ், முஸ்லிம் அடையாளத்துடன் தனித்துக் களமிறங்கி யிருப்பதானது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு பிரசார ரீதியாகப் பாரிய சங்கடங்களையும் பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸில் முன்னர் அங்கம் வகித்த முக்கிய பிரமுகர்களே அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸில் போட்டியிடுவதால் மு.காவின் வாக்கு வங்கியில் ஓரளவாவது சரிவு ஏற்படும் என்பதில் சந்தேகம் கிடையாது.

இந்நிலையில் கடந்த 15 வருடங்களாக அநுராதபுரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தன் வசம் வைத்திருந்த மாகாண சபை பிரதிநிதித்துவத்தை இழந்து - கைசேதப்படுமா அல்லது பலத்த போட்டிக்கு மத்தியிலும் சாதனை படைத்து - நெஞ்சை நிமிர்த்தி நிற்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ✦

'சுடர் ஒளியில்' வாரந்தோறும் இடம்பெறும் 'கலை அமுதம்' பகுதி தவிர்க்க முடியாத காரணத்தால் இவ்வாரம் இடம்பெறவில்லை என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 323

சொற்சிலம்பம் 323 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் தினம் ஜூலை 27 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகஸ்ட் 3 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 321 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.323

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 | | 6 |
| 7 | | | | 8 | | ■ | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 | |
| ■ | 12 | 13 | | ■ | 14 | | ■ |
| 15 | | | ■ | 16 | | | 17 |
| 18 | | ■ | 19 | | ■ | 20 | |
| | ■ | 21 | | | 22 | ■ | |
| 23 | | | ■ | 24 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.321

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 2 தி | ர் | 3 கா | 4 ம | ம் | ■ | 5 ஆ |
| 6 வ | ட | ■ | 7 த | றி | ■ | 8 ஆ | ண் |
| 9 ச | ம் | 10 ப | ல் | ■ | 11 க | ர | டி |
| ம் | ■ | ட் | ■ | 12 ஒ | ல | ம் | ■ |
| ■ | 13 க | ட | 14 க | ம் | ■ | 15 ப | 16 சு |
| 17 அ | ண் | ண | ல் | ■ | 18 ச | ம் | பா |
| 19 க | ண | ம் | ■ | 20 ப | ல | ■ | வ |
| 21 தி | ன் | ■ | 22 கு | டு | ம் | ப | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 323

### இடமிருந்து வலம்

1. முழு இருட்டு நாள்.
5. வாகனம் / வண்டி / பயணக் கலம்.
7. சாமர்த்தியசாலி.
9. சாப்பிடு.
10. நாடியில் வளர்வது.
11. தீரோட்டத்துக்கு குறுக்கே கட்டுவது/கட்டிப்பிடி
12. அருளாறன்/ பெரியவர்/ மகிமைகள் நிறைந்தவர்.
14. வேகம்.
15. கூரையின் உச்சம்.
16. எட்டு முறை பத்து.
18. போதை தருவது/ பன்மையைக் குறிக்கும் விகுதி.
19. அணி
20. மூன்று/ விளக்கில் எரிவது.
21. தீர்ப்பளிப்பவர்.
23. முறையீடு.
24. துண்டிக்கப்பட்ட பகுதி.

### மேலிருந்து கீழ்

1. அயர்ச்சியால் வருவது.
2. முறைப் பெண்/ மச்சான்.
3. கச்சை/ (தோல்) பட்டி
4. பிசாசு/பேய்.
5. இறைச்சி உணவு/நிணம்.
6. வீட்டின் முன்புறம் அமைந்திருப்பது
8. கம்பு.
11. தலைவன்/செல்வத்துக்குரியவன்.
13. வனம்.
14. விழி.
15. முன்புறத் தோற்றம்.
16. ஏழு தடவைகள் பத்து.
17. வேகம்/விரைவு.
19. பாய்.
21. தண்ணீர்.
22. வலி(மை) பலம்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 321

1. ச. சுபத்திரா, தச்சடம்பன், மாங்குளம்.
2. சி.நீரகா இல: 14/37, பாரதி லேன், மட்டக்களப்பு.
3. எஸ்.பிரணவகுலன், இல: 32, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்

1. தனபாலசிங்கம், டிக்கோயா.
2. ம.குருச்சந்திரன், திருகோணமலை.
3. நெல்சன்ஜெபத்துறை, பண்டாரவளை.
4. ஜே.றெக்ஸி,கொச்சிக்கடை.
5. பா.சிவதரன், தம்பிலுவில்.
6. எஸ்.மோகனதாஸ், முறிகண்டி.
7. வ.நிலோஜா, புத்தளம்.
8. நா.சிவலிங்கம், கல்முனை.
9. ச.சிவப்பிரகாசம், மொரட்டுவை.
10. எஸ்.என்.மணி, நுவரெலியா.
11. ஜி.சத்தியபாரதி, வத்துகாமம்.
12. ஜே.ஸனோநஸ்ஹத், மஜீட்புரம்.
13. பாதிமாபஹீமா, மாத்தறை.
14. ப.நாகேஸ்வரி, கல்கிசை.
15. பி.செல்வநாயகம், கொழும்பு - 06.

### சொற்சிலம்பம் திருத்தம்

ஜூலை 13 - ஜூலை 19, 2008 'சுடர் ஒளி' வாரமலரின் சொற்சிலம்பம் போட்டி இல. 322 இல் பின்வரும் திருத்தத்தைச் செய்து கொள்ளவும்.

இடமிருந்து வலம் - 10. 'மேல் மாகாணத்தில் ஒரு மாவட்டம்' - என்பதை 'தென் மாகாணத்தில் ஒரு மாவட்டம்' - எனவும், 17. 'ஒரு தோல் வாத்தியம்' - என்பதை ' ஒரு வாத்தியம்' - எனவும் திருத்தம் செய்யவும். தவறுக்கு வருந்துகிறோம்.
(ஆ - ர்)

## உபக்கிரகம்...

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏந்து கோலம் போட்டாராம். யாராவது சூனியம் வெச்சுட்டாளா என்ன?"

"சும்மா இரும்மா! அப்பாவுக்கு அதெல்லாம் ஒண்ணும் இல்லை."

ஆச்சரியம் மிகுந்த ராஜரத்தினத்தைத் தரதர என்று கையில் ஷூக்களுடன் இழுத்து வந்து காரில் அடைத்து, "ரேவதி! ஓட்டு!" என்றார் பட்டாபிராமன்.

அவர்கள் அந்த இடத்தை அடைந்த போது சூரியன் அஸ்தமித்திருந்தான். மைதானம் துல்லியமாக இருந்தது. கண்ணுக்கு எட்டியதூரம் வரை காலியாக இருந்தது. காணோம்!

பட்டாபிராமன் "இங்கேதான், இங்கேதான்! எனக்கு நன்னா ஞாபகமிருக்கு. மூணாவது மைல் கல்லிலேதான் திரும்பினேன். இங்கேதான். இங்கேதான்" என்றார்.

"இங்கேதான், என்ன?"

"இங்கேதான் இறங்கி இருந்தது."

"என்ன?"

"அந்தக் கப்பல்."

"பட்டாபி ஸார்."

"வெங்கடேசப் பெருமானே!"

"அப்பா, என்னப்பா ஆச்சு உங்களுக்கு?"

"பட்டாபி! எதுக்காக என்னை இங்கே கூட்டயாந்தேன்னு சொல்லவே இல்லையே!"

"பட்டாபி ஸார்! கப்பலா விண்வெளிக் கப்பலா"

"சூனியம் வெச்சுட்டா, சூனியம் வெச்சுட்டாளே!"

"இங்கேதான் பார்த்தேன், சாமா ராவ். மேலேருந்து வந்து உஷ்ஷ்ஷ்னு சப்தம் போட்டு இறங்கித்து. இரண்டு கால் வந்தது. கதவு திறந்துண்டது. இரண்டு பேர் இறங்கினா. என்னைக் கூப்பிட்டா, நான் உள்ளே போனேன். உள்ளே சிவப்பு, பச்சை, மஞ்சள் எத்தனை விளக்குகள்? பிஷின் மாதிரி பேசினா. சிநேகிதமா பேசினா. இன்னும் ஒரு மணி நேரம் இருக்கோம். வேற யாரையாவது கூட்டிண்டு வான்னு சொன்னா. மணி என்ன ஆச்சு? ஆறு இருவது தானே ஆகிறது. அதுக்குள்ளே போய்ட்டாளா? என்னண்டை இருக்கேன்னு சொன்னாளே! இதே இடத்துல இறங்கின முத்திரை தெரியறதா பார்க்கலாம். சாமாராவ் பேர பார்க்கலாம். சாமாராவ்... ராஜரத்தினம்... ரேவதி..." அவர்கள் நால்வரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த சில தினங்களில் பட்டாபிராமன் மிகவும் அல்லல்பட்டார். திரும்பத் திரும்ப அவர் அன்று மாலை பார்த்த காட்சியை விவரிக்க விவரிக்கக் கேட்ட ஒவ்வொருவரும் அவரை ஒருவிதமாகப் பார்க்க ஆரம்பித்தார்கள். பட்டாபியின் மனைவி அடிக்கடி "நீங்க படுத்துக்குங்கோ. படுத்துக்குங்கோ" என்று சொல்லிவிட்டு வெங்கடேசப் பெருமாளை ரகசியமாக விளித்தாள். பட்டாபிராமன் 'ஹிந்து'வுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். தான் பார்த்த காட்சியை விவரமாக வர்ணித்திருந்தார். அந்தக் கடிதம் பிரசுரமாக வில்லை. அவர் தெருவில் போகும்போது சிலர் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். "திடீர்னு இந்த ஆளுக்கு இப்படி ஆய்டுத்து. போன வாரம்வரை நல்லாத்தான் இருந்தார்... என்னவோ முனி அடிச்சிருக்கு." ரவியும் ரேவதியும் ஒரு டாக்டரை வரவழைத்தார்கள். "சும்மா பேசுவதற்கு" என்றார்கள். டாக்டர் அவருடன் பேசிவிட்டு வெளியே போகும் போது "இது கொஞ்சம் சீரியஸ் கேஸ். ஷாக் கொடுக்க வேண்டும். மெட்ராஸுக்கு அழைத்துக் கொண்டு போங்கள். டாக்டர் சக்ரபாணிக்கு ஒரு லெட்டர் கொடுக்கிறேன்" என்று சொன்னது பட்டாபிக்கு கேட்டது.

ஒருவர் கூட நம்பவில்லை. பட்டாபிக்கு உள்ளூர சோகமும் மறுபடி அந்தப் பயமும் ஏற்பட்டது. 'இனிமேலும் இதைப்பற்றிப் பேசினால் எல்லோரும் சேர்ந்துகொண்டு தன்னைப் பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விடுவார்கள் என்கிற பயம்.

பட்டாபி தன் டயரியில் "நான் பார்த்தேன். நான் பார்த்தேன்" என்று நூறு தடவை எழுதி அதை ஒளித்துவைத்துக் கொண்டார்.

மத்திய சர்க்காரின் டிப்பார்மெண்ட் ஒப் ஸ்பேஸுக்கு ஒரு கடிதம் எழுதினார். பதில் வரவில்லை. எப்பொழுதுமே அதைப் பற்றி சிந்தித்தவராகச் சாப்பிடும்போதோ, பேப்பர் படிக்கும்போதோ திடீரென்று நிறுத்திவிட்டுத் தூரப்பார்வை பார்க்கலானார். தினசரி வாக் போவதை நிறுத்திவிட்டார்.

அன்று மாலை அவர் வீட்டில் சில புதிய காரியங்கள் நடந்தன. குண்டுக் கொட்டைப் பாக்கு மாலை அணிந்து ஒரு சாஸ்திரி வந்து, கூடத்தில் கம்பளத்தை விலக்கி சுள்ளிகள் அமைத்து, நெருப்புப் பற்ற வைத்து, பக்கத்தில் அனுமார் படம் வைத்து, பால், புஷ்பம், மாதுளம்பழம் ஊதுபத்தி, சாம்பிராணி எல்லாம் சேர்த்துப் புகை போட்டு மந்திரங்கள் ஓத ஆரம்பித்தார். மாடியிலிருந்து இறங்கி வந்த பட்டாபிராமன் தன் மனைவியைக் கூப்பிட்டு "என்னடி இதெல்லாம்?" என்றார்.

"பூஜைன்னா!"

"என்ன பூஜை? எதுக்குப் பூஜை?"

"அனுமார் பூஜை. காத்துக் கறுப்பு அண்டாம இருக்கறதுக்கு"

"ஒரு தாயத்துப் போட்டுண்டாங்கன்னா உங்களைப் புடிச்சு ப்ரம்மஹத்தி விலகிப்போய்டும்."

சாஸ்திரி அவரைச் சந்தேகப் பார்வை பார்த்துக்கொண்டு மந்திரம் ஓதிக்கொண்டிருந்தார்.

"யாருக்கு ப்ரம்மஹத்தி? எனக்கு என்ன, ஒண்ணும் இல்லை. உங்களுக்கு எல்லாம்தான் ப்ரும்மஹத்தி! உனக்கு, ரேவதிக்கு, ரவிக்கு, ராஜரத்தினத்துக்கு, சாமாராவுக்கு, இந்தக் குடுமி சாஸ்திரிக்கு..."

சாஸ்திரி, "மாமி கைல கண்டதை எடுத்து அடிச்சுறப்போறார். தள்ளி வாங்கோ" என்றார்.

பட்டாபிராமன் சாஸ்திரியைக் கூடம் பூராகவும் ஓட ஓடத் துரத்த, அவர் கச்சம் அவிழ்ந்துபோய் வெளியே ஓட, வீட்டு வாசலில் பெரிய கூட்டம் கூடிவிட்டது.

மாடிக்குச் சென்ற பட்டாபிக்கு உடல் நடுங்கியது. "என்னை நானே அழித்துக் கொள்ளக்கூடாது. இவர்கள் எல்லோரும் சேர்ந்து என்னைப் பைத்தியமாக அடிக்கிறார்கள். எதனால்? நான் அந்த சம்பவத்தைப் பற்றிப் பேசுவதால். பட்டாபி மறந்து போ! சாதாரணமாக இரு. இயல்பாக இரு. அதைப் பற்றிப் பேசவே பேசாதே. நினைக்காதே."

பட்டாபி தன் மப்ளரைக் கழுத்தில் சுற்றிக்கொண்டார். கான்வாஸ் ஷூக்கள் அணிந்துகொண்டார். கைத்தடியை எடுத்துக்கொண்டார். கீழே மனைவியும் பெண்ணும் பயந்து நிற்க, எப்பொழுதும் செல்வதுபோல "ரேவதி! நான் வாக் போய்ட்டு வரேம்மா" என்று சொல்லிக்கொண்டு பத்து நாளாக விட்டுப்போன தன் சாயங்கால 'வாக்' கிற்குக் கிளம்பிவிட்டார். இயல்பாக நடந்து சென்றார். எவரையும் பொருட்படுத்தவில்லை. எப்போதும்போல் மூன்றாவது மைல் கல்லில் திரும்பி அந்தப் புல்வெளியில் நடந்தார். சற்று நிம்மதி ஏற்பட்டது. இந்த இடத்தில்தான். இதே இடத்தில்தான் - போன வாரம் அது வந்து இறங்கியது. சே. அதைப் பற்றி நினைக்காதே! பொய். பார்த்தது பிரமை. பொய். அது ஒரு மாயக் காட்சி. மறந்து போ! மறந்து போ!

அப்போது வானத்தில் விஷ் என்ற சப்தம் கேட்டது. பட்டாபி திகைத்து மேலே பார்த்தார். அதேதான்! அதே கோளம். தனக்குத் தானே சுற்றிக்கொண்டு அவருக்கு எதிரே முன்னூறு அடி தூரத்தில் புல்வெளியில் இறங்கியது. முன் போல் அதில் ஒரு கதவு பிரிந்து ஒரு ஏணி இறங்கி ஒரு பவுண்டன் பேனா வடிவில் ஓர் ஆசாமி குதித்துக் குதித்து இறங்கி "பூமி மனிதரே வணக்கம். இங்கே வாருங்கள்!" என்றது. பட்டாபி திரும்பிப் பார்க்காமல் அந்த இடத்தைவிட்டு ஓடினார். ✱

நன்றி :- சுஜாதா

## வேண்டாத...

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

மயிர்கள் படர்ந்து காணப்படும். இவை மென்மையான தோலுக்கு அழகு சேர்ப்பவை.

அதேவேளை சில பெண்களுக்கு தடித்த ஆண்களைப் போன்ற கறுத்த மயிர்கள் அடர்ந்து பரட்டையாக வளர்ந்து விடுவதுண்டு.

இந்த இரண்டாம் வகையினரே கை, கால்களில் உள்ள தங்கள் மயிர்களை அகற்ற விரும்புவார்கள்.

இவற்றை அகற்ற மயிர்நீக்கு மெழுகு வகைகளையோ அல்லது கிறீம் வகைகளையோ பயன்படுத்தலாம்.

ஆனால், அத்தகைய பொருள்கள், வழக்கமாக கை, கால் தோலுக்கு அழகு சேர்க்கும் மிருதுவான மயிர்களையும் சேர்த்து அழித்து விடும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### மருந்துகளால் ஏற்படுபவை

பெண்களுக்கு வழக்கத்துக்கு மாறாக சில உடற்பிரதேசங்களில் ரோமங்கள் வளர்வதற்கு வேறு சில காரணங்களும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன.

பெண்கள் வேறு சில நோய்களுக்காக எடுக்கும் மருந்துகளும் ஆண்தன்மையை வெளிப்படுத்தும் ஓமோன்களை அவர்களின் உடல்களில் சுரப்பதற்குத் தூண்டி விடுகின்றன என மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

இத்தகைய மருந்துகளைப் பயன்படுத்தும் காலங்களில் அப்பெண்களுக்கு வழமைக்கு மாறான இடங்களில் மயிர்கள் முளைக்கத் தொடங்குகின்றன. சிலகாலத்தில் அதன் வளரும் வேகம் அதிகரிக்கலாம்.

குறிப்பாக கர்ப்பிணிப் பெண்களுக்குக் கொடுக்கும் சில மருந்துகள் இத்தகைய வெளிப்பாடுகளைக் காட்டக்கூடும்.

என்றாலும் தற்காலத்தில் இத்தகைய மருந்துகளைச் சிபார்சு செய்வதில் மருத்துவர்கள் ஒன்றுக்குப் பல தடவைகள் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். இத்தகைய மருந்துப் பாவனை நிறுத்தப்பட்டதும் வித்தியாசமான இடங்களில் வழக்கத்துக்கு மாறாக ரோமங்கள் முளைப்பது முற்றாக நின்றுவிடுவதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பாகப் பெண்களைப் பொறுத்தவரை மிகச்சிறிய வீதத்தினரே இவ்வாறு வழமைக்கு மாறான இடங்களில் - உடற்பகுதிகளில் - தேவையற்ற மயிர்கள் முளைப்பதால் ஏற்படும் பிரச்சினைக்கு ஆளாகின்றார்கள்.

இந்தப் பிரச்சினை -

ஆண்பால்தன்மையை வெளிப்படுத்தும் தடிப்பான குரல், முகப்பருக்கள், முலைகள் பருக்காத நிலை, முஷ்டியான தேக அமைப்பு, தலைமுடி குறைதல் போன்றவற்றுடன் சேர்ந்து சில பெண்களுக்கு ஏற்படுவதும் அவதானிக் கப்பட்டிருக்கின்றது. ✱

# நம்பிக்கை வாக்கெடுப்பில் காங்கிரஸ் அரசு தப்புமா?



அமெரிக்காவுடனான இந்திய அரசின் உத்தேச அணுசக்தி ஒப்பந்தம் இந்திய அரசின் இருப்பையே ஆட்டங் காணச் செய்யும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

ஒப்பந்தத்தை எதிர்க்கும் இடதுசாரிகள், காங்கிரஸ் அரசுக்கான தமது ஆதரவை வாபஸ் பெற்றதை அடுத்து இந்திய அரசியல் நிலைவரம் கொந்தளிப்பான கட்டத்தை எட்டியிருக்கிறது. அரசியல் சாசனப்படி இவ்வாறு கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு வாபஸ் பெறப்பட்டு அரசின் பெரும்பான்மை சுருங்கினால் அரசு நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கைக் கோரவேண்டும் அல்லது எதிர்க்கட்சிகள் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரவும் முடியும். இதன்படி இன்றைய இக்கட்டில் காங்கிரஸ் கூட்டணி வரும் 22 அல்லது 23 ஆம் திகதி நம்பிக்கை வாக்கெடுப்பை கோரமுடிவு செய்துள்ளது.

இடதுசாரிகள் விலகியதால் ஏற்பட்ட குறையைப் போக்க முலாயம் சிங்கின் கட்சியை (39 எம்.பிக்கள்) காங்கிரஸ் வலைவீசிப் பிடித்துவிட்டது. எனினும், இன்னும் 8 முதல் 10 எம்.பிக்களின் ஆதரவு இருந்தால்தான் நம்பிக்கை வாக்கில் வெல்லுவதற்கான அறுதிப் பெரும்பான்மையைப் பெறத் தேவையான 273 என்ற மந்திர எண்ணிக்கையை எட்ட முடியும்.

இதற்காக உதிரிக்கட்சிகள், சுயேச்சைகள் எனப் பலருடன் அரசு பேரம் பேசியிருக்கிறது. சமீப நாட்களில் எம்.பிக்களை விலைபேசும் 'குதிரைப் பேரம்' டெல்லியில் உச்ச அளவில் நடந்து வருகிறது. இவர்களில் பலர் ஆட்சியைக் காப்பாற்றுவதற்குத் தாம் வழங்கும் ஆதரவுக்குப் பிரதியுபகாரமாக மத்திய அமைச்சுப் பதவிகளைக் கோருகின்றனர் எனத் தெரிகிறது.

முன்னாள் பிரதமர் சரண்சிங்கின் மகன் அஜித் சிங்கின் கட்சிக்கு 3 எம்.பிக்கள் உள்ளனர். மற்றொரு முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் கட்சி 3 எம்.பிக்களைக் கொண்டுள்ளது. காஷ்மீர் தலைவர் பரூக் அப்துல்லாவின் கட்சியின் 2 எம்.பிக்களையும் கவர காங்கிரஸ் முயற்சி செய்து வருகிறது. எனினும், இவர்களைத் திருப்திப்படுத்துவது அவ்வளவு லேசாக இருக்கப்போவதில்லை. இவர்களின் ஆதரவு ஓட்டு மொத்தமாகக் கிடைத்தாலும் நூலிழைப் பெரும்பான்மையைத் தான் எட்ட முடியும். இக்கட்சிகளில் ஓரிரு எம்.பிக்கள் தத்தமது கட்சித் தலைமைகளையும் மீறி காங்கிரஸ் அரசுக்கு எதிராக வாக்களிப்பர் எனத் தெரிகிறது.

மொத்தத்தில் 'கரணம் தப்பினால் மரணம்' என்ற நிலையில்தான் மன்மோகன் அரசு இந்தவாரம் நம்பிக்கை வாக்கெடுப்பைச் சந்திக்கிறது.

முதலில், சார்க் மாநாட்டின் பின்னரே வாக்கெடுப்பைச் சந்திப்பது என முடிவாகியது. எனினும், எதிர்க்கட்சிகள் இந்த அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டது என்று கோஷமிட்டுவருவதால் முன்கூட்டியே நம்பிக்கை வாக்கைக் கோருவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் களேபரத்தில் பிரதமர் மன்மோகன் சிங் சார்க் மாநாட்டில் பங்கு கொள்வதும் கேள்விக் குறியாகிவிட்டது.

இதற்கிடையில், நம்பிக்கை வாக்கில் வெல்லும் வாய்ப்பு இல்லையென்றால் கடைசி நேரத்தில் அணுசக்தி ஒப்பந்தத்தை கடாசி எறிந்துவிட்டு மீண்டும் இடதுசாரிகளிடம் சரண்புகும் திட்டமும் சோனியா காந்தியிடம் உள்ளது எனக் கூறப்படுகின்றது. இவ்வாரம் நடந்த கூட்டணிக்கட்சிகளின் கூட்டத்தில் அவர் இடதுசாரிகளைப் புகழ்ந்து தள்ளியமை பலரையும் வியப்படைய வைத்தது! ''நான்கு வருடங்கள் எங்களை ஆதரித்த இடதுசாரிகள் மிகவும் நன்றிக்குரியவர்கள்'' என அவர் கூறியிருந்தார். இந்தத்தொனி அணு ஆயுதங்களின் ஒப்பந்தங்களில் சோனியா காந்தி முன்வைத்த காலைப் பின் வைக்கவும் தயங்க மாட்டார் என்பதைக் காட்டியது. அதாவது, எந்த விலை கொடுத்தும் ஆட்சியை காப்பாற்றுவது என்பதே சோனியாவின் தற்போதைய இலக்காக உள்ளது.



எட்டு வருடங்கள் எதிர்க்கட்சி வரிசையில் போராடிய காங்கிரஸை மீண்டும் ஆட்சி பீடமேற்றியவர் சோனியாவே. இதற்காக அவர் சிந்திய வியர்வையையும் தனிப்பட்ட ரீதியில் 'வெளிநாட்டவர்' என அவர் மீது எழுந்த காழ்ப்புணர்வு விமர்சனங்களின் வேதனையையும் அவர் மட்டுமே அறிவார். படாதபாடுபட்டு ஆட்சியைக் கைப்பற்றிய கட்சி இன்னும் ஓர் ஆண்டு காலம் ஜாம் ஜாம் என ஆட்சி நடத்த முடியும். அதை ஏன் முற்கூட்டியே இழக்கவேண்டும் என்பதே அவரது சிந்தனை. மறுபுறம் பிரதமரும் ராகுல்காந்தி உள்ளிட்டோரும் இடதுசாரிகளை காட்டமாக விமர்சித்துள்ளனர். ராகுல் காந்தியின் இளம் இரத்தம் விளைவுகளை அறியாது துள்ளுகிறது. பிரதமரின் நிலைப்பாட்டுக்குக் காரணம் அவர் அணுசக்தி ஒப்பந்தத்தினால் நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பற்றி யோசிக்கின்றமையாகும். மன்மோகன் இந்திய பொருளாதார சீர்திருத்தத்தின் பிதாமகராவார். அவர் நாட்டின் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கின்றமை சரியே.



எனினும், அவர் முன்பிருந்தே முழுநேர அரசியல்வாதி அல்லர் வெறும் நிர்வாக அதிகாரி மட்டுமே. எனவே, கட்சியின் நிலை என்னவாகும் என்பதை அவர் சிந்திக்கத் தவறலாம். நாட்டு நலனுக்காக ஆட்சியை - பதவியை துறப்பதில் தப்பில்லை என்பது அவரது கருத்தாக இருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதியும் இந்திய அணுப் பரிசோதனையின் தந்தையுமான அப்துல் கலாம் கூட அணுசக்தி ஒப்பந்தத்தை ஆதரித்து பகிரங்கமாகவே கருத்து வெளியிட்டுள்ளார். இத்தனைக்கும் அவர் காங்கிரஸின் நண்பர் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இவ்விடயத்தில் சோனியா ஒருபுறமும் பிரதமரும் ராகுலும் ஒருபுறமும் என எதிரும் புதிருமான நிலையே நீடிக்கிறது. ஒருவேளை நம்பிக்கை வாக்கெடுப்பில் வெல்லமுடியாத சூழலில் சோனியா மீண்டும் இடதுசாரிகளிடம் மண்டியிட்டால் பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலகுவார் என்று தெரிகிறது. அதுவும் கூட காங்கிரஸ் கட்சிக்கும் சோனியா காந்திக்கும் பெருத்த அரசியல் ஆதாயத்தையே தரும். நாட்டுக்குத் தேவையான அணுசக்தி ஒப்பந்தத்துக்காக சிறந்த நிர்வாகியும் கல்விமானுமான பிரதமர் பதவி விலகினால் அந்த அனுதாப அலையால் மன்மோகனுக்கு பலன் ஏதுமில்லை. ஏனெனில், அவர் இந்த அனுதாபத்தை வாக்குகளாக மாற்றுமளவு அரசியல் செல்வாக்கு உள்ளவர் அல்லர். அவரால் தனிக்கட்சி தொடங்கவும் முடியாது. பதவி விலகினால் அவர் அரசியலுக்கு முழுக்குப் போட்டு விட்டு பொருளாதார நிபுணராக உலக வங்கிக்குப் பணியாற்றப் போய்விடுவார்.

ஆக, அணுசக்தி ஒப்பந்தம் செய்ய கட்சி முயன்றது, அதற்காகப் பிரதமரையும் பலியிட்டது என்ற நற்பெயர் காங்கிரஸ் கட்சிக்குக் கிட்டும். கல்வி கற்ற இந்தியர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் பேர் இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கின்றனர் எனக் கணிப்புகளில் தெரியவந்துள்ளது. மன்மோகன் இதற்காகப் பதவி துறந்தால் அவரது புகழ் மேலும் ஓங்கும். அதையும் காங்கிரஸ் கட்சி தனது அரசியலுக்கு ஆதாயமாகப் பயன்படுத்த முடியும். ஒப்பந்தம் செய்ய நாம் தலைகீழாக நின்று பார்த்தோம். நம்பிக்கை வாக்குவரைச் சென்றோம். பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் எதிர்த்தமையால் வேறுவழியின்றி பின் வாங்கினோம் என்று சமாதானம் கூறமுடியும். சோனியா காந்தியின் உபாயம் இதுதான்.

ஒருகால் நம்பிக்கை வாக்கில் வென்றாலும் அதற்கு உதவியாக இருந்த உதிரிக் கட்சிகள் குறுகிய காலத்திற்குள் காங்கிரஸ் கட்சியின் காலை வாரமாட்டா என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இதை வேறு எவரையும் விட சோனியா காந்தி நன்கறிவார். ஏற்கனவே முலாயம் சிங் சோனியாவின் முதுகில் குத்திய வரலாறு உண்டு. 'அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாக' இவ்விடயம் முடியும் என்பதை காங்கிரஸ் தலைவி தெளிவாக உணர்ந்துகொண்டுள்ளார். இடதுசாரிகள் இன்றேல் காங்கிரஸுக்கு இம்முறை ஆட்சிபீடம் ஏறியிருக்கவே வாய்ப்புக் கிட்டியிராது. அந்த நன்றியை சோனியாகாந்தி இந்தத் தருணத்திலும் காண்பித்திருக்கின்றமை அவரது அரசியல் முதிர்ச்சியின் உச்சியையே காட்டுகிறது.

ஜெயலலிதா போன்றோர் தம்மை ஆட்சியில் இருத்திய கூட்டணிக் கட்சிகளை எடுத்தெறியும் அகங்கார மனநிலையைக் கொண்டவர்கள். சோனியா காந்தி இதற்கு நேர்மாறு.

பிரமாண்டமான சிக்கல்கள் நிறைந்த இந்திய அரசியல் களத்தில் சோனியா வெற்றிகரமாக எதிர்நீச்சல் போட இதுவே காரணம். ராகுல் காந்தியோ உசுப்பேற்றி விட்டதும் எழுந்து ஆடும் உசார் மடையராகவே இன்னும் உள்ளார் என்பது இடதுசாரிகளைக் கண்டிக்கும் அவரது தொனியில் தெளிவாகத் தெரிந்தது. முதுபெரும் தலைவர் ஜோதிபாசு, மற்றொரு

**எஸ். சுரேந்திரஜித்**

சிந்தனைச் சிற்பி ஹர்கிஷன் சிங் சுர்ஜித் போன்ற நேர்மையான கம்யூனிஸ்ட் தலைவர்களிடம் இருந்து சோனியா நிறையப் பாடம் கற்றுக்கொண்டார். இவர்களுடன் அற்புதமான நட்பைப் பேணினார். இன்னும் ஜோதிபாசு அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்த்து வாய் திறக்கவில்லை.

தற்போதைய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் பிரகாஷ் காரத் தீவிர இடதுசாரி கடும்போக்காளராவார். அதுவும் இன்றைய சிக்கலுக்கு பிரதான காரணமாகும். ஜோதிபாசுவும் சுர்ஜித்தும் கட்சிக்குள் பலமான நிலையில் இருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிராது. இவர்கள் முதுமை காரணமாக அரசியல் அரங்கிலிருந்து ஒதுங்கியது இந்திய நாட்டுக்கு ஏற்பட்ட பேரிழப்பேயாகும். ★

---

## புதுடில்லி.....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*"எங்கள் அனுமதியின்றி - எமது மக்களின் இசைவின்றி - எமது மூலவளத்தைச் சூறையாட அனுமதிக்க மாட்டோம். இந்தியாவோ எந்த நாடோ எமது காங்கேசன் மூலவளத்தை- கனிமத்தை - சுரண்டிச்செல்ல விடமாட்டோம். என்ன விலை கொடுத்தாவது அதைத் தடுப்போம்"* - என்று சூளுரைக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவிட்டபுரம் மண்ணின் மைந்தருமான மாவை சேனாதிராஜா.

சுண்ணாம்புக் கல் அகழ்வு என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் ஆழக்குழி தோண்டும் நடவடிக்கையால் கடல்நீர் யாழ். குடாநாட்டுக் குள் உட்புகுந்து, குடாநாட்டின் நிலத்தடி நீரே உவர்ப்பாகும் பேராபத்து ஏற்பட்டிருப்பதாக மனம் வெதும்புகிறார் அவர்.

*"அந்தப் பிரதேசத்திலிருந்து ஆட்களை - மக்களை - விரட்டிவிட்டார்கள். உயர் பாதுகாப்புப் பிரதேசம் என்ற கட்டுப் பாட்டை வைத்துக்கொண்டு, அங்குள்ள சுண்ணாம்புக் கல் பிரதேசத்தை வெட்டி எடுத்து, பெரும் எடுப்பில் பலாலி ஓடு பாதை விஸ்தரிப்புத் திட்டத்தின் மண்நிரப்பும் வேலை முன்னெடுக்கிறார்கள். கேட்பார், தடுப்பார், கவனிப்பார் யாருமில்லை"* - என்றும் மனம் நோகின்றார் அவர்.

இனப்பிரச்சினைக்கு ஒரு முடிவைக் கண்ட பின்னர் தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இங்கு எஞ்சியிருக்கக் கூடிய வளத்தைத்தான் பயன்படுத்த வேண்டும். ஆனால், பிரச்சினைக்குத் தீர்வு வரமுன்னர் அந்த வளத்தைச் சூறையாடிச் செல்வது என்றால் அது ஏற்கக் கூடியதா?

அதுவும் இனப்போர் உச்சம் பெற்றிருக்கும் இச்சமயத்தில், தமிழர் கருத்தைப் புறமொதுக்கி, அதுபற்றியே சிந்திக்காமல், கொழும்புடன் கூட்டுச் சேர்ந்து தமிழர் பிரதேச மூலவளங்கள் குறித்துத் தன் பாட்டில் இந்தியா முடிவெடுத்து செயற்பட முனைவதும் -

ஒருபுறத்தில் தமிழர் பிரதேச வளத்தைச் 'சுத்திக்கொண்டு', மறுபுறத்தில் தமிழர்களின் நலன் குறித்து எதுவும் கவனிக்காமல் பொறுப்பின்றி இந்தியா செயற்படுவதும் -

கூட்டமைப்புத் தலைவர்களை ஆழ்ந்த வெறுப்புக்குள்ளும் மனஉழைச்சலுக்குள்ளும் மூழ்கடித்துவிட்டது. தீர்க்கமாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற கட்டத்துக்கு அவர்கள் வந்து விட்டார்கள்.

'புலி எதிர்ப்பு' பந்தாவுக்குப் பின்னால் - தமிழர் விரோத செயற்பாடுகளை இந்தியா முன்னெடுப்பதை சகிக்கமுடியாது என்ற கட்டத்துக்கு அவர்கள் வந்துவிட்டார்கள்.

இனி, அவர்களின் பேச்சுகளிலும் அறிக்கைகளிலும் இந்த எரிச்சல் தெறிப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கும்.

இவ்வாரம் - பெரும்பாலும் ஜூலை 23 ஆம் திகதி புதன்கிழமை - நாடாளுமன்றில் விசேட ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையின் போது இவ்விடயங்களை ஒட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் விசேட உரை ஒன்றை ஆற்றவிருக்கின்றார். அதில் கூட்டமைப்பின் புதிய கருத்துநிலைப்பாடு பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஜூன் மூன்றாம் வாரத்தில் கொழும்பில் இந்திய இல்லத்துக்குள் - மூடிய அறைக்குள் வைத்து - இந்தியாவின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவிடம் காதும் காதும் வைத்தால் போல இந்தியாவின் செயற்பாடு குறித்துத் தமது தரப்பின் சூடான கருத்தை வெளியிட்ட சம்பந்தர், ஜூலை மூன்றாம் வாரத்தில் பகிரங்கமாக நாடாளுமன்றத்தில்- அந்த நிலைப்பாட்டைக் கோடிகாட்டுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில் இன்னொரு கொசுறுத் தகவலும் உண்டு.

இந்தியாவின் போக்குக் குறித்த தமது சீற்றத்தை - எரிச்சலை - விசனத்தை வெளிப்படுத்துவது என்ற கூட்டமைப்புத் தலைவர்களின் தீர்மானத்துக்கும் புலிகளுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதுதான் அது. தங்கள் அனுபவத்தின் - பட்டறிவின் - கசப்புணர்வு காரணமாகவே கூட்டமைப்பினர் இத்தகைய கருத்தியல் நிலைப்பாட்டு மாற்றத்துக்கு வந்தனர் என்பது உறுதி.

அதில் அவர்கள் உறுதியாக நிற்பார்களா? இந்தியாவுடன் பொருத முடிவெடுத்தவர்கள் இடையில் விட்டுக் கொடுத்து பொருந்திப் போய்விடுவார்களா என்பதை வரும் வாரங்களில் நாம் காணலாம் ★

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

சுலபமான மணமக்கள் தெரிவுக்குச் சுய தெரிவுமுறையே! சுயதெரிவுமுறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள். புதன். வெள்ளி மாலைவேளைகளில் சுயதெரிவு முறைமுன்னோடி சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனிடம் தொடர்புகொள்க! தொலைபேசி: 2360488, 2360694, 4873929.

---

யாழ்ப்பாணம். அருள்முருகன் திருமணங்களையும் மனநீதியின் பாற்படுகின்ற சேவைகளையும் விரும்புவோர். மன நீதியின் பாற்படுகின்ற பண்புடையோர் தொடர்புகள். இங்கு அதிகளவு மணமக்கள் உள்ளனர். பதிவுப் படிவங்களை வவுனியாவிலும் கொழும்பிலும் பெறலாம். Tel:0114980208.

---

உங்களுக்கு எவ்வித அலைச்சலும் இல்லை. கொழும்பில் உங்கள் வீடுகளுக்கே வருகிறோம். மிகவும் நேர்மையுடனும் நம்பகத்தன்மையுடனும் நாம் வழங்கும் தரமான சேவையை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவும். B.Jeyakannan. நேரு நடமாடும் திருமண சேவை. B - 22, 2/1, Soysapura New Flats, Moratuwa. Tel:078 5642636, தொலைபேசி தொடர்பு நேரம் 9 am - 12.30 pm, 4.30 pm - 9 pm எம்மிடம் யாழ். உயர் வேளாளர் குறிப்புகள் ஏராளம் உண்டு.

## வீடு விற்பனைக்கு

வத்தளை இல. 36/70.நவலோக உந்தியானபுர ஒலியமுல்லையில் 2 அறைகள். ஹோல். டொய்லட்.பாத்ரூம் சகல வசதிகளுடன் விற்பனைக்கு. தொடர்பு: 011 48 53569.

---

மட்டக்களப்பு கருவேப்பங்கேணியில் New Boundry Road இல் புகையிரதகடவைக்கு முன் 400 மீட்டர் தூரத்தில் Ambroes Road ஐ மேற்கு,எல்லையாக கொண்ட 20 1/2 பேர்ச் காணி துண்டு விற்பனைக்கு உண்டு தொடர்பு : 011 2714061. 0777 040364.

---

வத்தளை தொடக்கம் ஜா-எல வரையிலான பிரதேசத்தில் வீடு. காணித் துண்டுகள். களஞ்சியசாலைகள் விற்பனைக்கும் வாடகைக்கும் உள்ளன. Wattala Property Traders, No 146/S-3, 2nd Floor, Negombo Road, Wattala. Tel:2980797, Jerom 0777 584973, Ganesh 078 511 6037, 060 2079381.

## தேவை

நுவரெலியா. அட்டன். மஸ்கெலியா. நாவலப்பிட்டி பிரதேசங்களில் எமது சர்வதேச நிறுவனத்திற்கு Coordinators / Sales Rep உடனடியாகத் தேவை. (பகுதி நேரமாகவோ முழுநேரமாகவோ) வருமானம் எல்லையற்றது. தொடர்புக்கு : 077 5401000.

---

Illustrator, Photoshop நன்கு தெரிந்த கணினி வரை கலைஞர் ( Computer Graphic Designer ) உடன் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். உங்கள் விண்ணப்பங்களை கீழ்க்காணும் Fax இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும். Fax : 2683112.தொடர்பு: 077 1838639.

---

Hatton இல் புதிதாக திறக்கப்பட்டுள்ள சர்வதேச விளம்பர நிறுவனமொன்றிற்கு Supervisor, Management, Trainees, Distributors தேவை. அனுபவம் தேவையில்லை. பயிற்சியுடன் சம்பளம். மாணவர்களுக்கு முன்னிடம்.Call 072 3718 776.

---

ஆள் தேவை. கனடா சர்வதேச அமைப்பின் அக்கரைப்பற்றுக் கிளைக்கு பயிற்சி பெற்ற / பெறாத புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். பயிற்சி காலத்தில் கொடுப்பனவு ரூபா 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை. பின்னர் 25 ஆயிரத்திற்கு மேல் பெறலாம். விபரங்களுக்கு : 077 1563541.081 4950510.

---

கொழும்பு நகரில் இயங்கி வரும் பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு கணினி படித்த பெண்ணொருவர் தேவை. கொழும்பை வதிவிடமாக கொண்டிருத்தல் வேண்டும். விரும்பியவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி : The Manager, 1106, Maradana Road, Borella, Colombo - 08. Tel: 077 9521195, 0777 599233.

---

புறக்கோட்டையிலுள்ள சைவஉணவகம் ஒன்றிற்கு 30 - 40வயதிற்கு இடைப்பட்ட சாரதி. களஞ்சியக்காப்பாளர்.மேற்பார்வையாளர் தேவை. 5 வருட அனுபவம் விரும்பத்தக்கது.சாப்பாடு. தங்குமிட வசதிகளுடன் சம்பளம் 10.000/- வழங்கப்படும். Sriyani Restaurant, 131, 2nd Cross Street, Colombo - 11.

---

கிரண்ட்பாஸ் ஸ்டேடியம் கமயில் இயங்கும் காமெண்ட் ஒன்றிற்கு நன்கு (Juki Machine ) தைக்கக்கூடிய பெண்கள் உடனடியாக தேவை . 7500/- மேல் சம்பளம் தொடர்பு இல. 072 4064055.

---

மூன்று பாஷைகளிலும் பேசக்கூடிய ஓரளவு விற்பனை அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதிகள் Sales Representatives தேவை. Precured Tyre சேகரிக்கவும் விற்கவும் மாதாந்த சம்பளம் மற்றும் Commission, EPF, ETF முதலியன ஊதியமாக கிடைக்கும். உங்கள் விண்ணப்பங்களை சகல விபரங்களுடன். The ver Precured Retreads, Wavinna, Wattegama. என்ற முகவரிக்கு தபால் மூலம் உடன் அனுப்பவும்.

---

இரும்பு கிரில் கேட் நுழைவாயிற் கதவுகள் தயாரிப்பதற்கு அனுபவமுள்ளவர் மற்றும் கை உதவியாட்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். த்ரீசிங்க இண்டஸ்ரீஸ். 1564 கோட்டை வீதி. ராஜகிரிய.

---

இருவர் கொண்ட குடும்பத்திற்கு 30 வயதிற்கு மேற்பட்ட சிங்களமும் பேசத் தெரிந்த குடும்ப பொறுப்புகளற்ற மலைநாட்டைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் தேவை. தொடர்பு : 077 3561991. 011 2365191

---

ரத்மலானையில் உள்ள வீடொன்றிக்கு வயதான இருவர் பராமரிப்பதற்கும் வீட்டு வேலை செய்வதற்கும் 40 வயதான தமிழ்ப் பெண் ஒருவர் தேவை. கிராம சேவையாளர். நற்சான்று பத்திரத்துடன் வரவும். Tel :077 6853229. 0112 6382 75.

---

ஆடைத் தொழிற்சாலைக்கான வெற்றிடங்கள் தங்குமிட வசதி இலவசம். மாதத்திற்கு 15.000/- மேல் வருமானம். பழக்சாறு உற்பத்தி செய்வதற்கு.பழங்களை வெட்டிக் கொடுப்பதற்கு அனுபவம் இருக்குமாயின் மாதம் 10.000/- மேல் அதிகமாக சம்பாதிக்கலாம். நிறுவனங்களுக்கான ஊழியர்களை வழங்கும் எம்முடன் இணைந்து கொள்வதால் வீட்டிலிருந்து கொண்டே மாதம் 20.000/-இற்கு மேல் சம்பாதிக்கலாம்.011 5764064 சுமந்தி.

---

எழுத்துப் பணியில் வீட்டிற்கு வந்து உதவி செய்வதற்கு ஆண் / பெண் ஒருவர் தேவை . வாரத்தில் 3 - 4 நாட்கள் 2 - 3 மணித்தியாலங்கள் . வசதி போல் வரலாம் கணினி. ஆங்கில அறிவு மேலும் பிரயோசனமாயிருக்கும். எஸ்.எச். எம். ஜெமீல். 44ஏ. ஆசிறி மாவத்தை. களுபோவில தெஹிவளை. 5767607. 078 5247005.

---

கடன்தொகை ரூபா ஐம்பது ஆயிரம் உடனடியாக ஒரு அவசர தேவைக்கு தேவை. வட்டி மாதாந்தமாக செலுத்தப்படும். ஆறு மாதத்தில் முதல் திருப்பி செலுத்தப்படும். 077 3595369.

---

G.C.E. O/L.A/L படித்த மலையக இளைஞர்கள் Hardware ( இரும்புக் கடைக்கு ) தேவை. வயது 18 - 25. தங்குமிடம் உணவு வசதி, உண்டு. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். கீழ்க்கண்ட தொலைபேசிக்குத் தொடர்புகொள்ளவும். 0777 574228. 077 792425.

---

Juki ராஜா / பட்டன் மெசின் தைக்க தெரிந்தவர் / உதவியாளர் உடனடியாக தேவை நேரில் வரவும்.399.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை. கிராண்ட்பாஸ். கொழும்பு 14 . Tel : 078 6716444.

## வாடகை

ஒரு அறை இணைந்த குளியலறையுடன் வாடகைக்கு உண்டு. ரூபா 9000/- வாடகையும் ஒரு வருட முற்பணமும் தேவை . தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி திருமதி கே.லியனகே. 5/15. விஜித்த றோட். பூமன்கடை. தொலைபேசி எண் : 2582 784.

---

கண்டி பிரதான வீதியில் பஸ்யாலையில் சென்ரல் பிளாஸா சுப்பர் மார்க்கட்டில் கீழ் மாடியில் 480 சதுர அடிகளைக் கொண்ட இரண்டு கடைகள் மாதந்த வாடகை 5000/-இற்கு கொடுக்கப்படும். வாகன தரிப்பிடம். மலசகூடம். பாதுகாப்பு சகல வசதிகளையும் உள்ளடக்கியது. தொடர்பு கொள்ள 0773846749.

---

மாத்தளை 41/ A.விகார றோட். வீடு வாடகைக்கு உண்டு. விற்பனைக்கும் உள்ளது. 071 4162843 தொடர்பு கொள்ளவும்.

---

மட்டக்களப்பு திருமலை வீதியில் லயன்ஸ் கழகத்திற்கு அருகில் சகல வசதியுடன் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 065 222 7238.

---

கிராண்ட்பாஸ் Stace Road ல் மேல் மாடி 4 அறைகளுடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு : 0716843378.

---

அவிசாவெல்ல வீதி ஒருகோட வத்தையில் இல.179/24A. இல் அட்டாச் பாத்றூம் வசதிகளுடன் ஒரு அறை வாடகைக்கு உண்டு. மாத வாடகை 4000/- ரூபா. தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ளவும். தொலைபேசி எண் : 077 9058911.

---

பெண்கள் இருவருக்கு ( தாயும். மகளும் அல்லது சகோதரிகள் ) இருபடுக்கைகள் கொண்ட அறை குறுகிய கால வாடகைக்கு உண்டு. தொடர்பு : 077 3561991.011 2365191.

---

சகல வசதிகளையும் கொண்ட சிறிய வீடு கிராண்ட்பாஸில் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு விடப்படும். தொடர்பு கரி 2513557 077 4168193.

---

கொழும்பு 11 இல் அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக்கு தங்குவதற்கு இரண்டாம் மாடியில் வசதியான ரூம் வாடகைக்கு உண்டு. இருவர் தங்கலாம். உடன் தொடர்பு கொள்க: 077 9057766.

---

தனியார் முதியோர் பராமரிப்பு இல்லமொன்றிற்கு பண முதலீடு செய்யக்கூடிய Partner தேவை. Kind Care Elder's Home, 17/1, George Mawatha, Mabola, Wattala, Mobitel : 071 4819033, Tel : 2942554.

---

வத்தளை. ஹெந்தளையில் சகல வசதிகளும் கொண்ட வீட்டில் விசாலமான அறையில் உயர் கல்வி / நல்ல தொழில் புரியும் ஆண்கள் இருவருக்கு உடனடியாக தங்குமிட வசதி சிபாரிசுகள் தேவைப்படும்.தொலைபேசி : 2981830.

---

இல. 16. ஜயந்த மல்லிமாரச்சி மாவத்தை. கொழும்பு 14. இல் 10 x 15 சதுர அடி கடை அறைகள் 2 உடனடியாக வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. தொடர்பு : 0776641177.

---

தெமட்டகொடயில் மூன்று அறை. ஒரு ஹோல் . கிச்சன். சாலையுடன் கூடிய வீடு வாடகைக்கு வசதியுடன் உண்டு. மாத வாடகைக்கு 25.000/- தொடர்பு: 078 6452225.

---

களுபோவில வைத்தியசாலைக்கு அண்மையில் ஆசிரி மாவத்தையில் 46/9A. சகல வசதிகளும் கொண்ட நான்கு படுக்கையறைகளுடன் புதிய மேல்மாடி வீடு,வாடகைக்கு உண்டு .077 3759333.011 2766302.

---

கல்கிஸையில் காலி வீதிக்கு மிக அண்மையில் ஒரு Room வாடகைக்கு. வேலை செய்யும் பெண்கள் விரும்பத்தக்கது. (உணவு வசதிகளுடன்/இல்லாமல்) தொடர்புகளுக்கு: 060 2172679 .

## கல்வி

மொறட்டுவ பல்கலைக்கழக Engineering மாணவரினால் தரம் 10 மாணவர்களுக்கு கணிதம். விஞ்ஞான பாடங்கள் வீடு வந்து தமிழ் மொழியில் கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு : 0716150559.

---

ஆம். உங்களுக்கு ஆங்கிலம் எழுத வாசிக்க or Spoken English வேண்டுமா? (Home visit) இலகு முறையில் உங்களது தகுதிக்கேற்ப கற்பிக்கப்படும். மாணவர்கள் / தொழில் புரிபவர்கள் / வியாபாரிகள் / வெளிநாடுசெல்ல இருப்பவர்கள். தொலைபேசி எண் : 072 9013773.

---

6 ஆம் ஆண்டு தொடக்கம் O/L வரையான மாணவர்களுக்கு கணிதம். சமூகக் கல்வி. வரலாறு ஆகிய பாடங்கள் பட்டதாரி ஆசிரியரினால் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு : 2505219

---

யாழ். அனுபவமிக்க ஆசிரியரால் கொழும்பு வத்தளை பிரதேசங்களில் தரம் 5 -11 வரையான தமிழ் மொழி மூலம் கணிதம் விஞ்ஞானம் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்புகட்கு 077 3971663.

---

தரம் 6 தொடக்கம் O/L வரையான மாணவர்களுக்கு கணித பாடம் வீடு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு : 0715683750.

---

எல்லாப் பாடங்களிலும் ஆங்கில மொழி மூலமும் தமிழ் மொழி மூலமும் வகுப்புக்கள் (International and local) முகத்துவாரத்திலும் Grandpass இலும் Spoken English வகுப்பு நடைபெறுகின்றது. 078 5821404.

---

IELTS Exam Preparation Class (பரீட்சைக்கு தயார்படுத்தும் வகுப்புகள் ) ஆசிரியரினால் தனியாகவும் Qualified & Experienced குழுவாகவும் கற்பிக்கப்படும். (With Special Individual Attention) Results Guaranteed. Contect: 0773063855.

---

இத்தாலி நாட்டு மொழியினை Italian குறுகியகாலத்தில் எழுத பேச வாசிக்க இலக்கணத்துடன் கற்பிக்கப்படுகின்றது. இத்தாலி செல்பவர்களுக்கு மிகவும் பிரயோசனமானது. தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கங்கள். 077 1159506.

---

Maths & Chemistry, English Medium for Cambridge, Edexcel, A/L and O/L மிகவும் சிறந்த முறையில் விசேடபெறுபேறுகளை பெறும்வகையில் தனிப்பட்ட / குழுவாக கற்பிக்கப்படும் . 077 6714688.

---

German, French ஜேர்மன். பிரெஞ்சு மொழிகள் வெளிநாட்டில் பயிற்சி பெற்ற 30 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியர் London O/L, A/L Ed - Excel Cabridge IGCSE Exam German எம்பஸிக் கான Start Deutsche Level 1 பரீட்சை சிறந்த பெறுபேறுகள் வீட்டிலேயே பாடங் களைக் கற்கலாம். 0777 615288.

## சேவை

உங்களுக்கு தேவையான Printing ஓடர்கள். அவசர Certificates, Business Cards, Rubber Stamps, நினைவுமலர்கள் Leaflets பிறப்பு / இறப்பு சான்றிதழ்கள் மற்றும் ஏனைய மொழிபெயர்ப்புகள். ஆங்கிலக் கடிதங்கள் அனைத்தும் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும். Call.078 653334 33, 4851199.

---

Home Nursing Servic முதியவர்களையோ நோயாளிகளையோ தங்களுடைய வீட்டில் வைத்து பராமரிப்பதற்கு பயிற்சி பெற்ற தாதியர் சேவை பாட்னரால் நடத்தப்படுகின்றது. சேவை தேவைப்படின் தொடர்பு : 0715640013.

---

தட்டச்சு சேவை : தட்டச்சுத்துறையில் ஆங்கிலம். தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அனுபவம் கொண்ட தட்டெழுத்தாளரால் கணினி மூலமான தட்டச்சு வேலைகள் நேர்த்தியான முறையில் உரிய நேரத்திற்கு செய்துதரப்படும். தொடர்புக்கு :4854 771 2809185.

---

கலைஞர். இசையருவி. 40. Free Channels, Sun. KTV, Raj, Vijay, Max, Sports, Cartoon, Dish Package கட்டணம் செய்து கொள்ள பெரிய சிறிய Dish வேலைகளுக்கும் தொடர்பு: 078 5166522.

---

அதிநவீன வசதிகளுடன் தனிப்பட்ட அறைகளுடன் தனியான முதியோர் பராமரிப்பு இல்லம். வயோதிபர் ஆண்/பெண் இருபாலருக்கும் ஏற்ற அமைதியான சூழலில் உணவு. தங்கு மிடம். மருத்துவம் மற்றும் எல்லாவித மான இதரவசதிகளுடன் கொழும்புக்கு அண்மையில் வத்தளையில் அமைந்துள் ளது. கட்டணம் மற்றும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள: Kind Care Elder's Home, 17/1, Gerorge Mawatha , Mabola. watt- ale. Mob : 071 4819033. Tel 2942554.

---

கட்டிடம் சம்பந்தமான சகல வேலைகளும் ஒருவரின் கீழ் செய்துகொடுக்கப்படும். Labour Contract ஆகவே சாமானுடனும் Carpenter, Mason, Tiles plumbing, Painting, Pantry Cupboard. 0714896717 ஷர்ஷா 011 2421563.

---

நீர்க்குழாய் திருத்துதல் மற்றும் டைல் பாத்றூம் கட்டர் அனைத்தும் பைப் வேலைகள் கொண்டிராக்டர்கள் தொடர்பு : கபில பண்டார 077 6340968.

## வைத்திய ஆலோசனை

நாளாந்தம் வாழ்க்கையில் பிரச்சினைகளின் நிமித்தம் உளவியல் தாக்கங்களால் பாதிக்கப்பட்டு வருகிறீர்களா ? திருமணம். கல்வி. தொழில். உறவுமுறை (Relationship) சார்பான உடல். உளரீதியான பிரச்சினைகளுக்கு வைத்தியநிபுணர் உளவளத்துணை ஆலோசனை (Counselling) வழங்குகிறார்.

தொடர்புகளுக்கு : 0777 - 248583.

---

பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த பிரபல சுதேச வைத்திய நிபுணர் Dr. V. Rajah அவர்களால் மயிர் உதிர்தல். பொடுகு. நாட்பட்ட தோல்நோய்கள். தேமல். எக்சிமா. அலர்ஜி. முகப்பருக்கள் மற்றும் சகல பாலியல் குறைபாடுகளிற்கும் சிறந்தமுறையில் சிறந்த சிகிச்சை வழங்கப்படும்.No. 253, G.R. De Silva Mawatha, 1st Floor, Kotahena, Colombo 13. Tel: 077 6167732, 060 226-6844, E.mail:rajaa-herbel@ yahoo. com சனி. ஞாயிறு தினங்களில் மட்டும் சிகிச்சை அளிக்கப்படும். தயவுசெய்து முன்பு பதிவு பெற்று வரவும்.

---

நடக்க. இருக்க. மடிக்கமுடியாமல் முழங்கால். குதி. தொடை. பாதம் விரல்கள் மூளி எலும்பு. தோள். இடுப்பு. கழுத்து போன்ற உறுப்புக்களில் நோ. வலி. குத்து வேதனை எவ்வளவு நாட்பட்டதாக இருந்தாலும் ஆப்ரேஷன் தேவையில்லை. மூக்கடைப்பு. தும்மல். நெஞ்சுச்சளி. இருமல் வாசிக்கும் போது க் கீ என்று சத்தம். ஆஸ்துமா இவை அனைத்துக்கும் சிறப்பான மூலிகை மருந்து சிகிச்சை பக்கவிளைவு சிறிதும் இல்லை. குறைந்த பத்தியம். சித்தவைத்தியர் Dr.R. Sivapuranathan Tel:0777 301669 0117910 679. E.mail:vaithiyar@hotmail.com.

## பழுது பார்த்தல்

Computer Repairing, Trouble Shooting, ADSL, Internet, E-Mail, Configuration, Network, Net2Phone, காரியாலயங்கள் இல்லங்கள் வந்து செய்யப்படும். Prasath, 011 4939861. PC - Acrplus Solutions.F-14 People's Park, Colombo 11.

---

Fridge, Washing Machine, Water Motor, Fan, Grinder, Wiring, Plumbing, Ect........ என்பன வத்தளை. தெஹிவளை உட்பட கொழும்பின் அனைத்துப் பாகங்களுக்கும் வந்து செய்துதரப்படும். Sai, Electrical Service - 077 922202 71. 011 5712356.

---

Computer Repair Software ADSL, Net 2 Phone, Installation & PC Sales at Your Place. We Provide Quick & Reliable Service தொடர்பு Tele Net. No. 22, காலி வீதி. தெஹிவளை. Tel : 011 2730872, 077 3934811.

---

Cell Phones Brand New/ Used Phones மற்றும் பாவித்தவைகள். மாற்றித் தரப்படும். Easy Payment Terms. Contact : 0771928060.




கே.குமார்,
ஹட்டன்.

**கேள்வி:** பித்தா! நீர் பாடுவதில் சமர்த்தராமே?

**பதில்:** ஆம். வீட்டில் என் மனைவியிடம் ப(ா)டாத பா(ட்)டு ப(ா)டுகிறேனே...!

ஆர்.செந்தூரன்,
திருமலை.

**கேள்வி:** பித்தூ! திருமணமான பெண்ணைக் காதலிக்கலாமா? அது முறையா?

**பதில்:** செந்தூ! நிச்சயமாகக் காதலிக்கலாம். உம்முடைய மனைவியை நீர் நன்றாகக் காதலிக்கலாம். அதுதான் முறை.

வி.ஜவான்,
நீர்கொழும்பு.

**கேள்வி:** பித்தா! இந்த மோசத்தை நான் யாரிடம் சொல்ல...? என் மனைவி பலரும் பார்த்திருக்க என்னை அடிக்கிறாளே...!



**பதில்:** 'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்று மனத் திருப்திப் பட்டுக்கொள்ளும். சரி, பலர் பார்த்திருக்க - பரகசியமாக - அடிப்பதைப் பற்றிப் புலம்புகின்றீரே, இரகசியமாக அணைப்பதை மட்டும் கூற மறந்துவிட்டீரோ...!

ஜோர்ஜ்,
மன்னார்.

**கேள்வி:** வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் பலர் திருமணம் செய்ய இங்கிருந்து பெண்கள் எடுப்பது ஏன்?

**பதில்:** உள்ளூர் 'ஒரிஜினல்'களின் அருமை அங்கு போன பின்னர்தான் புரிந்திருக்கும்.

பி.வாசு,
எருக்கலம்பிட்டி.

**கேள்வி:** ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

**பதில்:** அப்போது வளைந்துதான் யாருக்கு என்ன லாபம்?

ஸி.விவேக்,
கிளிநொச்சி.

**கேள்வி:** இப்போதைக்குப் பேச்சு நடப்பதற்கான வாய்ப்புண்டா?

**பதில்:** பேச்சென்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை ஒரு பேச்சுக்குச் சொல்லி வைக்கிறேன்.

ஈஸ்வரன்,
சிலாபம்.



**கேள்வி:** திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றது என்கின்றார்களே. அது உண்மையா?

**பதில்:** அது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றதா என்பது தெரியவில்லை. ஆனால், அது நிச்சயிக்கப் படும் இடத்தில்தான் நரகத்துக்கு 'விஸா' குத்துகின்றார்கள் என்பது நிச்சயம்.

எஸ்.சாமி,
கரவெட்டி.

**கேள்வி:** காதலும் கத்தரிக்காயும் என்று எள்ளி நகையாடுகிறார்களே. அவர்கள் மூடர்களா?

**பதில்:** இல்லை. விடயம் அறிந்தவர்கள். இரண்டும் அழுகிவிடும் என்பதைப் புரிந்தவர்கள்.

எஸ்.மதி,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:** இன்றைய பெண் வர்க்கத்தில் சீதைகளா, பாஞ்சாலிகளா அதிகம்?

**பதில்:** சீதைகள் தாம் அதிகம் என்று புளகாங்கிதத்தில் கணவன்மார் மிதக்கின்றார்கள். நாம் வீணாக ஆராய்ச்சி நடத்தப் போய் அவர்களின் மகிழ்ச்சியில் ஏன் மண்ணை அள்ளிக் கொட்டுவான்? விட்டுவிடுவோமே!

வி.அருள்,
ஹற்றன்.

**கேள்வி:** தமிழர் பண்பாட்டைக் கெடுப்பவர்கள் ஆடவரா? பெண்டிரா?

**பதில்:** எதையும் கெடுப்பவர்கள் ஆண்கள்தானே...! கெடுக்க வைப்பவர்கள் பெண்கள் என்பது வேறு விவகாரம்.

எம்.முனாஸ்,
காத்தான்குடி.

**கேள்வி:** கிளிபோல வீட்டில் மனைவி இருக்கக் குரங்கு போல சின்னவீடு வைத்திருக்கும் பித்தர்கள் குறித்து உங்கள் கருத்து என்னவோ பித்தூ...?



**பதில்:** கிளிக்குத் தெரியாத 'தொழில்நுட்பம்' குரங்குக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ...!

பி.ராஸிக்,
தென்னக்கும்புர.

**கேள்வி:** பித்தரே..! உங்களை உங்கள் மனைவி எப்படி அழைக்கிறாள்...?



**பதில்:** திருமணமான புதிதில் 'அன்பே' என்றுதான் அழைத்தாள். இப்போது முதல் எழுத்து இரண்டையும் விழுங்கிச் சுருக்கிவிட்டாள்!

வி.கரன்,
நெல்லியடி.


**கேள்வி:** பிள்ளைகளைப் பார்த்து இப்போதெல்லாம் எனது மனைவியும் என்னை 'அப்பா' என்று அழைக்கின்றாளே...!



**பதில்:** பகலில் மாத்திரம் அப்படி அழைத்தால் நட்டமில்லை. விட்டுவிடுங்கள்!

சுஹைனா,
பேருவளை.

**கேள்வி:** பித்தரே! உங்கள் திருமணம் பெற்றோர் நிச்சயித்ததா? அல்லது காதல் திருமணமா?



**பதில்:** நான் யானை ரகமாக்கும். (ஹி...ஹி...யானைதானே தன் தலையில் தானே மண்ணை அள்ளிக்கொட்டும்!)

கே.வியாசன்,
பாண்டிருப்பு.

**கேள்வி:** எனக்கு ஐம்பது ஆண்டுகள் சிறைவாசம் காத்திருக்கின்றது என்று மிரட்டுகிறார் சோதிடர். அதைக் கேட்டதிலிருந்து இரவெல்லாம் உறக்கமில்லையே...!

**பதில்:** பயப்படாதீர்கள். விரைவில் உமக்குத் திருமணம் நடக்கப்போகின்றது என்பதைக் கிரகநிலைகள் காட்டுகின்றன போலும். அதன் பின்னரும் உமது உறக்கம் கெடத்தான் போகின்றது. உமது திருமணத்துக்கு (சிறைவாசத்துக்கு) முற்கூட்டியே எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம்.ரூபன்,
தம்பலகாமம்.

**கேள்வி:** திருமணவீட்டில் கேட்கும் கெட்டிமேளம் உங்கள் மனதில் எப்படி எதிரொலிக்கும் பித்தா...?



**பதில்:** எனக்கு ஏதோ 'மாட்டிக் கிட்டார் மைனர் மச்சான்! மாட்டிகிட்டார் மைனர் மச்சான்!!' - என்று நையாண்டி மேளமாகவே அது காதில் எதிரொலிக்கின்றது.

என்.ஜமீல்,
ஓட்டமாவடி.

**கேள்வி:** பித்தரே! அதிகம் மயக்கம் தருவது எது? மதுவா? மாதுவா? வேறு எதுவோ?



**பதில்:** இந்தக் கேள்விக்கு வள்ளுவரே தீர்ப்புக் கூறிவிட்டார். 'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு' - என்கிறான் உலகப் பொதுமறை தந்த செந்நாப் போதகன்.

நினைத்த அளவில் களிப்பையும் கண்ட அளவில் மகிழ்ச்சியையும் தரவல்லது காமம். தீண்டினால்தான்



இன்பம் பயக்கும் என்பதல்ல. ஆனால், கள்ளு (அல்லது வேறு ஏதேனும் மது) அருந்தினால்தான் போதை தரும். அதை நினைத்தாலோ, கண்டாலோ போதை பிறந்து விடுவதில்லை. எனவே, நினைத்தாலேயே 'கிக்' தரவல்லதுதானே அதிக மயக்கம் தரும் போட்டியில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட வேண்டும்...?

# ரதத்தில்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கூறிய அநீதிக்குக் காரண புருஷரான பிரிட்டிஷ் கவர்னர் திருப்பி அழைக்கப்பட்டார். இம்மாதிரி கவர்னரைத் திருப்பி அழைத்தது என்பது அதற்கு முன் எப்போதும் நடந்ததில்லை. அதற்குப் பிறகு இந்தியாவில் வைஸராய் வேவல் திருப்பி அழைக்கப்பட்ட ஒருசம்பவம்தான் நிகழ்ந்திருக்கிறது.

சேர்.பி.ராமநாதன் இலங்கை திரும்பி வருவதற்குள் மேற்கூறியவை நடந்துவிட்டன. எனவே, சேர்.பி.ராமநாதன் கொழும்பில் வந்து இறங்கியபோது அவருக்குச் சிங்களவர்கள் அளித்த வரவேற்பைப்போல் அதற்கு முன்னும் இலங்கை பார்த்ததில்லை. அதற்குப் பிறகும் பார்த்ததில்லை. குதிரைகள் பூட்டிய ரதத்தில் அவரை வைத்துக் கொழும்பு வீதிகளில் ஊர்வலம் விட்டார்கள். ஆயிரமாயிரம் மக்கள் வீதிகளின் இருபுறமும் நின்று ஜயகோஷம் செய்தார்கள். ரதம் ஒரு முக்கியமான நாற்சந்திக்கு வந்ததும் குதிரைகளை ரதத்திலிருந்து அவிழ்த்துவிட்டு விட்டுச் சிங்களத் தலைவர்கள் தங்களே ரதத்தை இழுத்தார்கள். சேர்.ராமநாதனிடம் தங்களுடைய அன்பையும் மரியாதையையும் நன்றியையும் காட்டுவதற்காகத்தான்.

***

இதெல்லாம் பழங்கதைதான். 'கதையா? கனவா' என்றுகூடச் சந்தேகம் தோன்றும் வண்ணம் தற்சமயம் இலங்கையில் காரியங்கள் நடந்து வருகின்றன. சிங்கள மந்திரிகளின் மனப்போக்கு அவ்வளவு தூரம் மாறியிருக்கிறது. புதிதாக வந்த இந்தியர்களின் பிரஜா உரிமைகளைப் பறிப்பது போல், யாழ்ப்பாணத் தமிழர்களின் பிரஜா உரிமைகளைச் சிங்கள மந்திரிகள் பறிக்கமுடியாது. அவர்களை இலங்கையை விட்டு துரத்திவிடலாம் என்று கனவு காணவும் முடியாது.

ஆயினும் ஏழரை லட்சம் யாழ்ப்பாணத் தமிழர்களின் மனதில் இன்று அமைதி இல்லை; நாளை என்ன நேரிடுமோ என்ற கவலை குடிகொண்டிருக்கிறது. இன்று ஏழரை லட்சம் புதிய இந்தியர்களைத் துரத்தப் பார்க்கிறவர்கள் நாளைக்கு ஏழரை லட்சம் பழைய தமிழர்களை எப்படி நடத்துவார்கள் என்று யாருக்குத் தெரியும்? இலங்கையின் மொத்த ஜனத்தொகை 67 லட்சம். பழைய தமிழரும் புதிய தமிழரும் சேர்ந்தால் பதினைந்து லட்சம். இந்தப் பதினைந்து லட்சத்தில் ஏழரை லட்சம் பேரை உரிமைஅற்றவர்களாக்கிவிட்டால் மிச்சமுள்ள ஏழரை லட்சம் தமிழர்கள் மிகச் சிறுபான்மையாகி விடுவார்கள் அல்லவா?

யாழ்ப்பாணப் பழந் தமிழர்களில் பெரும் பணக்காரர்களோ, தோட்ட முதலாளிகளோ அதிகம் பேரில்லை. பெரும்பாலும் நடுத்தர வகுப்பினர். படிப்பு, சர்க்கார் உத்தியோகம், வக்கீல் வேலை, உபாத்தியாயர் வேலை முதலியவற்றில் ஈடுபட்டிருப்பவர்கள். வருங்காலத்தில் இவர்களுடைய நிலைமை என்னவாகும்? எனவே, பழந்தமிழர்களில் தீர்க்க திருஷ்டி உள்ளவர்கள் எல்லாரும் புதுத் தமிழர்கள் நடத்தும் பிரஜா உரிமைப் போராட்டம் வெற்றிபெறவேண்டும் என்று மனமார விரும்புகிறார்கள். *

# அனைவரையும் காப்புறுதி செய்யும் செயற்திட்டத்தில் செலிங்கோ!



நாட்டில் வாழுகின்ற சகல மக்களுக்கும் காப்புறுதி மூலம் பாதுகாப்பை வழங்குவதே எமது குறிக்கோள் எனத் தெரிவிக்கும் செலிங்கோ காப்புறுதி வியாபார அபிவிருத்தி முகாமையாளர் ரி.விஜயநாத் அதற்காக நாடு முழுவதும் 180 இற்கும் மேற்பட்ட கிளைகள் இயங்குகின்றன எனவும் குறிப்பிட்டார்.

இவ்வாறாக அனைவருக்குமான காப்புறுதி என்ற குறிக்கோளில் அடி எடுத்து வைப்பதற்கு, அதற்குரிய அக்கறை சேர்க்கும் ஒரு செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக பொருத்தமானவர்களிடம் இருக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என்றும் ரி. விஜயநாத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ''பொருத் தமான காப்புறுதிப் பொதிகளை வழங்குவ தற்காக ஆட்களைச் சேர்க்கும் அதேவேளை செலிங்கோ ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தங்கள் குழுவுடன் சேர்வோருக்காக வழங்கும் வசதி வாய்ப்புகளைப் பற்றியும் தெரிவித்தார்.

அந்த வகையில் எந்தவிதமான முன் அனுபவமோ அது சம்பந்தமான எந்த நடவடிக்கைகளோ தெரிந்திருக்கத் தேவை இல்லை. அதற்காக உள்நாட்டு, வெளிநாட்டுக் காப்புறுதி சம்பந்தமான விரிவுரையாளர்களின் பயிற்சிகளும் அது சம்பந்தமான விரிவுரைகளும் வழங்கப்படும். அத்துடன் ஆளுமை சம்பந்தமான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஊழியரும் தங்களின் வாழ்க்கைத் தரத்தை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் அவர்களின் அடிப்படை நிலைமையில் இருந்து எவ்வாறு உயர்ந்து வளர வேண்டும், ஓர் சமூக அந்தஸ்தை அவர்கள் எவ்வாறு பெறவேண்டும் என்பன போன்ற வாழ்க்கையின் உயர்தரத்தை அவர்கள் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் பல உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில் இக்குழுமத்தில் ஊழியரான மஞ்சுள பிரசாத்தை உதாரணம் காட்டி அவர் விளக்கினார். ''இவர் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து இங்கும் விவசாயத் தொழிலையே நம்பி தன் வாழ்வை ஆரம்பித்தார். அதிர்ஷ்டவசமாக செலிங்கோ ஆயுள் காப்புறுதிக் குழுமத்துடன் சேர்ந்து அவர் அந்தஸ்தையும், ஓர் உயர்வள வருமானத்தையும கொண்டவராக மாறினார்'' என்றார்.

மஞ்சுள பிரசாத் தன்னைப் பற்றி கூறுகையில்; தற்போது தான் வாழ்கின்ற வாழ்க்கைத் தரம் என்பது தன்னால் ஒருக்காலும் நினைத்துப் பார்க்காத அளவுக்கு உயர்ந்துள்ளதாகவும், இப்போது தான் பல சொத்துகளுக்கு அதிபதியாக உள்ளார் எனவும் கூறினார்.

மற்றுமொரு ஊழியர் தாமர குமாரி தனபால. இவர் ஓர் ஆசிரியையாகப் பணிபுரிந்து பகுதிநேரமாக மக்களுக்குக் காப்புறுதிப் பொதியை வழங்குவதற்கான விற்பனை ஆலோசகராக கடமையாற்றினார். தற்போது அவரின் பகுதிநேரக் கடமையின் பலனால் அவரின் எதிர்காலம் ஒளிமயமாக மாறியுள்ளதாகவும் கூறினார்.

ஆகவே, செலிங்கோ ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தங்களுடன் இணையும் எந்தவிதமான ஊழியராக இருந்தாலும், சரி, அவர்களை நன்கு கவனித்து அவர்களின் எதிர்கால எதிர்பார்ப்பையே நனவாக மாற்றி அமைக்கின்றது. காப்புறுதிப் பொதி வழங்குநராக கடமை புரிபவர்களின் வருமானம் மட்டுப்படுத்தப்படாததாகவே அமைகிறது. அதாவது, அவற்றின் ஊழியம் அவர்களின் கையில் என்றவகையில் வருமானத்தைத் தங்களுக்கு ஏற்றவாறு தாங்களே அமைத்துக் கொள்வதோடு அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் நடக்கும் மாநாடுகள் மற்றும் பயிற்சிக்கான தகைமைகளையும் வாய்ப்புகளையும் பெறுகின்றனர் என்று விஜயநாத தெரிவித்தார்.

அவர் தன்னுடைய அனுபவத்தைப் பற்றிக் கூறுகையில்; தான் செலிங்கோ காப்புறுதியில் ஆலோசகராகச் சேர்ந்து பின்னர் விற்பனை நிறைவேற்று அதிகாரியாக, கிளை முகாமையாளராக, விற்பனை அபிவிருத்தி முகாமையாளராக பன்னிரண்டு வருடங்களாக இப்பணியில் ஈடுபட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் இன்று காப்புறுதித் துறையில் முன்னணியில் திகழும் செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தில் இப்பதவிகளில் இணைந்து பணி செய்து தம்மையும் வளர்த்துக் கொள்ளுமாறும் அவர் மேலும் கூறினார்.

நாற்பத்தைந்து வயதுக்கு மேற்படாத ஆண்கள், பெண்கள் இருபாலரிடமும் இது தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்த இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

இவர்கள் தமது வருமானத்தைத் தேடிக்கொள்ளவும் வெளிநாடுகளில் பயிற்சிகளைப் பெறவும் இத்தொழில் மூலம் வழிவகுக்கப்படுகிறது.

விற்பனை ஆலோசகராகக் கடமையாற்ற விரும்புபவர்கள் தங்களுக்கு அருகில் உள்ள செலிங்கோ ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கிளைக்காரியாலயத்திற்குச் சென்று தங்களுடைய விபரங்களைப் பதிவு செய்வதோடு தங்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு செலிங்கோ லைஃப், 134, காலி வீதி, கொழும்பு -07, தொ.பே. 0112461461 உடன் தொடர்பு கொள்ளவும். •


## வாழ்வில் வெற்றியீட்ட எங்களுடன் இணையுங்கள்





### விற்பனை மேற்பார்வையாளர்கள் / விற்பனை ஆலோசகர்கள்

விற்பனை பணிகளில் அனுபவம் வாய்ந்த, உற்சாகமான விற்பனை மேற்பார்வையாளர்களும் விற்பனை ஆலோசகர்களும் எமக்குத் தேவைப்படுகின்றனர். நீங்கள் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் சிறந்த தலைமைத்துவ ஆற்றல், தொடர்பாடல் திறமை, ... தேர்ச்சி என்பவற்றைக் கொண்டவராகவும் இருந்தால், எம்முடன் இணைந்து வாழ்க்கையில் வெற்றியீட்டுங்கள். உங்கள் திறமைக்கேற்ப விசேட பயிற்சி, தலைமைத்துவ ... மற்றும் வெளிநாட்டுப் பயண வாய்ப்புகள் உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் அதிகூடிய மாதாந்த வருமானத்தைச் சம்பாதிப்பதோடு வேறு பல அனுகூலங்களையும் பெறுவீர்கள்.

உங்கள் விண்ணப்பப் படிவத்தை இன்றே செலிங்கோ லைஃப் கிளையொன்றில் பெறுங்கள்

விண்ணப்பத்தைத் தபாலில் அனுப்பும்போது, ... ஈ-மெயில் மூலம் அனுப்புவதாயின், Subjectஇல் Sales Force என்று குறிப்பிடவும்.

செலிங்கோ லைஃப்

செலிங்கோ இன்சுவரன்ஸ் பிஎல்சி

சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ

134, காலி வீதி, கொழும்பு 3. ... (011) 2 461 461 ஈ-மெயில்: jobs@ceylife.lk ... www.ceylincolife.com

## கண்ணீர்...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மரியாதை. மற்றதெல்லாம் பிறகுதான்..."

"உண்மைதான் ஆனா சுரேஷ் விரும்பினவளைச் செய்து குடுக்க வேண்டியது உங்கட கடமைதானே...?" நானும் சிரித்துக் கொண்டே சொன்னேன்.

"விரும்பினதுக்காக வசதி குறைஞ்ச இடத்தில் செய்து கஷ்டப்பட விடுறதோ...?" திருஞானமும் சிரித்தார்.

"அப்படியில்லை.. ஆக வசதிகுறைஞ்ச இடமில்லை. எதோ சிவலிங்கம் தன்னால் இயன்றதைச் செய்வார். நீங்களும் தர்மநீதி தவறாதவர். சிவலிங்கமும் நேர்மையான மனுசன். நீங்கள் ரெண்டுபேரும் சம்பந்தியாகிறது நல்ல பொருத்தமாயிருக்கும்...!" நான் இழுத்துக்கொண்டே சொல்ல அவரும் தலையாட்டினார்.

"எதோ செய்து முடிங்கோ...!" அவர் சொல்ல எனக்கு சந்தோஷமாயிற்று. ஓடிப்போய் சிவலிங்கத்திடம் கூறினேன். என்னைக் கட்டிக்கொண்டான். அதன் பின் இரு வீடுகளும் சந்தித்து எழுத்திற்கு நாள் குறித்துக் கொண்டன.

* * *

சிவலிங்கம் கேட்டதற்காக மீண்டும் சுரேஷ் வீட்டுக்குப் போயிருந்தேன். வெளியே வெயில் காந்திக்கொண்டிருக்க, திருஞானம், அவரின் மனைவி சுரேஷ் எல்லோரும் மௌனமாயிருந்தனர். வியர்த்துக்கொட்டியது. நான் பத்திரிகையை எடுத்து விசிறிக் கொண்டேன்.

"இப்படிக் கொள்ளை போகுமென்று யாருமே எதிர்பார்க்கேல்லை. இது ஒரு விபத்து. ஆனா நடக்கிறது நடக்கத்தானே வேணும். ரெஜிஸ்ரேசனுக்கு இன்னும் ரெண்டு நாளிருக்குது!" நான் மௌனத்தைக் கலைத்தேன்.

"இந்த நிலைமையில் எழுத்துவைக்கிறது நல்லதில்லை. யோசிச்சு கொஞ்சம் ஆறுதலாய்ப் பார்ப்பம்...!" திருஞானத்தின் மனைவி கூற..

"இல்லையில்லை சிவலிங்கம் குடும்பம் முழுவதும் மனமுடைஞ்சு போயிருக்குதுகள். எழுத்தும் நின்று போனால் தவிச்சுப் போயிடுங்கள். நீங்கள்தான் கொஞ்சம் பெரிய மனசு பண்ணி, சொன்ன தேதியிலேயே எழுத்தை வைச்சா அவையளுக்கு ஒரு பெரிய நிம்மதியாயிருக்கும்...!"

"அவையளுக்கு நிம்மதியாயிருக்கும். எங்களுக்கெல்லே சிக்கலாயிருக்கும். ஓரளவு வசதியிருக்கும்போதே யோசிச்சனாங்கள். இப்ப ஒட்டாண்டியாய் நிற்கும் பொழுது எவ்வளவு யோசிக்கவேணும் சொல்லு பார்ப்பம்...? படுகுழியில தள்ளப் பார்க்கிறாய்...!"

"இப்படிச் சொல்லக் கூடாது திருஞானம். இது மனிசத் தன்மையைக் காட்டுற நேரம். ரெஜிஸ்ரேசனுக்குப்பிறகு களவு போயிருந்தா என்ன செய்யிறது..?" நானும் விடவில்லை.

"அதுதான் எங்களின்ர நல்ல காலம். தப்பீட்டம்..,! சரியோ பிழையோ... என்ர மகனை இப்ப இந்தக் குடும்பத்தில சேர்க்க எனக்கு விருப்பமில்லை. போய்ச் சொல்லு யோசிச்சு செய்வமென்று...!" திருஞானம் எழுந்துள்ளே சென்றார். நான் சுரேஷைப் பார்த்தேன். அவன் தலையைக் கவிழ்ந்திருந்தான்.

"அப்பா மாட்டனென்று சொல்லேல்லையே! கொஞ்சம் பின்னால் வைப்பமென்று தானே சொல்லுறார். அதுவும் சரிதானே..!" தலையை நிமிராமலே சொன்னான்.

'எல்லாரும் கள்ளர்தான்' நான் மனதுக்குள் நினைத்துக் கொண்டே எழுந்தேன். எப்படிச் சொல்வதென்று தெரியாமல் நீண்ட நேரம் யோசித்து ஒருவாறு மாலை பிரியா வீடு சென்றேன். மெதுவாய் நடந்ததைக் கூற சகலரும் மௌனமாயினர்.

"பிரியாவும் சுரேஷும் தான் பேசி ஒரு முடிவு எடுக்கவேண்டும். அதுக்குப் பிறகு மேற்கொண்டு என்ன செய்வதென்று யோசிப்பம்...!" நான் எழுந்து கொள்ள... பிரியா சைக்கிளை உருட்டிக்கொண்டு என்றுமில்லாதவாறு சோர்வாய் வந்தாள்.

எனக்கு புறப்படுவதா, நிற்பதாவென்று புரியவில்லை. கையைப் பிசைந்து கொண்டேன்!

"இருங்கோ அங்கிள்! இனி உங்களுக்கு கரச்சல் தர மாட்டேன். எல்லாம் முடிஞ்சுது..!" சொன்ன அவளை உற்றுப் பார்த்தேன். அவளின் முகம் இறுகி எதோ போலிருந்தது.

"இதெல்லாம் வாழ்க்கையில் சின்ன விஷயம். இப்படியெல்லாம் சோர்ந்துபோகக்கூடாது. பிரியா...!" நான் தைரியப்படுத்தினேன்.

"இல்லை அங்கிள்.. நான் தோற்றுப்போயிட்டேன். சுரேஷும் ரெஜிஸ்ரேசனை பின்னால் வைப்பமென்றவுடன் எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பின்னால் போட்டா அதுக்கிடையில காசோ, நகையோ செய்துடுவமென்று பார்க்கிறிங்களோ என்று கேட்டேன்... அவர் எழுந்து போயிட்டார்...!"

"உனக்கும் வாய் சும்மாயிருக்காது.. நீயே தொடங்கி இப்ப நீயே முடிச்சும் வச்சிட்டாய் போல..!" கோமதி கோபத்துடன் சொன்னாள்.

"உண்மையைத்தானேயம்மா சொன்னனான்.. இதுக்கு மேல என்ன நான் சொல்லுறது...?" - பிரியாவின் கடைசி வார்த்தைகள் இவை என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை. ✸

## இலங்கை அரசின்...

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாணிகளாக இருந்த விடுதலைப் புலிகளின் தளபதிகளை இலங்கைப் படைகள் சீண்டியதன் விளைவு, வல்லரசுக்கு எதிரான போராக வெடித்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிழக்குத் தளபதிகள் நிராயுதபாணிகளாகத் திருகோணமலை சென்று கொண்டிருந்தபோது, வழிமறித்து அவர்களைச் கைதுசெய்து சிறிலங்கா படைகள் பலாலியில் அடைத்தபோது, அமைதிகாக்கும் படையாக வந்த இந்தியா மௌனம் சாதித்தது.

எங்களை நிராயுதபாணிகளாக்கியதன் காரணமாக எமது தளபதிகள் பலாலியில் இலங்கை இராணுவத்தால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களை பாதுகாப்பாக ஒப்படையுங்கள் என விடுதலைப் புலிகள் இந்தியாவிடம் கோரினர்.

அந்தக் கோரிக்கை இந்தியாவால் உதாசீனம் செய்யப்பட்டதால் தளபதிகள் வீரமரணம் அடைந்தார்கள். வல்லரசுக்கு எதிரான போரும் வெடித்தது.

இதே தவறை மீண்டும் விடுதலைப் புலிகள் விடப்போவதில்லை. அவர்கள் எக்காரணம் கொண்டும் ஆயுதங்களை இனி ஒப்படைக்கப் போவதில்லை. இதுதான் யதார்த்த நிலையாகும்.

எனவே ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டுப் பேச வாருங்கள் என அரசு விடுக்கும் அறிவிப்பை நிச்சயம் விடுதலைப் புலிகள் ஏற்க மாட்டார்கள்.

சர்வதேசத்துக்குப் பேச்சுக்குத் தயார் என்று ஒரு முகத்தையும் தெற்குக்கு பயங்கரவாதத்தை ஒழிப்போம் என்று மற்றொரு முகத்தையும் காட்டிக் கொண்டிருக்கும் அரசின் போக்கு, ஆட்சியை இழுத்துச் செல்ல உதவுமே தவிர நாட்டில் அமைதி ஏற்பட உதவப் போவதில்லை.

இலங்கை அரசின் இரட்டை முகங்களும் கிழிக்கப்பட்டு, விடுதலைப் போர் தீவிரமாக முன்னெடுக்கப்படும் என்று விடுதலைப் புலிகள் அறிவிக்கின்றனர்.

இந்நிலை தொடர்ந்தால், புலியைக் காட்டி தனது ஆட்சியை இழுத்துச் செல்லும் அரசின் அணுகுமுறை தோற்கப் போகிறது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

அரசின் இரட்டை முகம் கிழியுமா?
நாட்டில் அமைதி தோன்றுமா?
யுத்தம் தீவிரமாகுமா?
காலம் தான் பதில் கூறவேண்டும்.

✸

# ராசி பலன்

**21-07-2008 முதல் 27-07-2008 வரை**

(பொ. சந்திரலிங்கம்)




**அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

காரியத்தடை நீடிக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர்களால் பிரச்சினை வர வாய்ப்புள்ளது.




**கார்த்திகை2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். உதவியை எதிர்ப்பார்ப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷடம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.




**மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம்1,2,3**

காரியத் தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்ப்பார்ப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.




**புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




**மகம், பூரம், உத்தரம்1**

காரியத் தடை இருக்கும். வீண் அலைச்சல் உள்ள வாரம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வி யில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறைவேறா.




**உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும்.




**சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்புப் பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்வர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




**விசாகம்4, அனுசம், கேட்டை**

காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




**மூலம், பூராடம், உத்தராடம் 1.**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளில் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.




**உத்தராடம்2,3,4. திருவோணம், அவிட்டம் 1,2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.




**அவிட்டம்3,4. சதயம், பூரட்டாதி 1,2,3**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




**பூரட்டாதி4, உத்தரட்டாதி, ரேவதி**

காரியத்தடை இருக்கும். மனச்சஞ்சலம் இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

# பிரபஞ்ச அழகி 2008

உலகெங்கும் இருந்துவந்த 80 அழகிகள் கடல்போலத் திரண்டிருக்க, அதற்குள்ளிருந்து ஒரு முத்துப்போல வெளியே வந்திருக்கிறார் வெனிசுலா நாட்டின் டயானா மொண்டோஸா.
2008 ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகியாக தெரிவுசெய்யப்பட்டிருக்கும் 22வயதே ஆன இந்த நங்கை ஓர் அலங்காரக்கலை நிபுணர், புகைப்படம் மற்றும் விளம்பரத்துறையில் மிகுந்த ஆர்வமுடையவர்.
இந்த நடிகை இஷா கோபிகர் மற்றும் சர்வதேச அழகுக் கலைநிபுணர்கள் சிலர் நடுவர்களாக இருக்க 80 அழகிகளுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 அழகிகள் மேடையில் ஒய்யாரமாக நடந்தனர்.
அதில் மிஸ் வெனிசுலாவாக கலந்து கொண்டயான மெண்டோஸா பிரபஞ்ச அழகியாக (Miss Universes) தேர்ந்தெடுக்கப்பட்டார்.
புதிய அழகிக்கு 2007 ஆம் ஆண்டின் பிரபஞ்ச அழகியான யப்பானைச் சேர்ந்த நியோ மோரி தங்கக்கிரீடம் சூட்டினார்.
இந்தப் பிரஞ்ச அழகிக்கு சூட்டப்பட்ட தங்கக் கிரீடத்தின் மதிப்பு ஒருலட்சத்து 20ஆயிரம் டொலர்.



(இலங்கை மதிப்பில் சுமார் ஒன்றரைக் கோடி ரூபா) வியட்நாமில் உள்ள சீ.ஏ. ஓ.பைன் ஜூவல்லறி என்ற நிறு வனத்தில் இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது. 18கரட் தங்கத்தால் செய்யப்பட்ட இந்தக் கிரீடத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான விலையுயர்ந்த நவரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன.



வியட்நாமின் பொருளாதார வளர்ச்சியை தங்கநிறமும், ஊக்கம் மற்றும் உணர்வுகளை வெள்ளை மற்றும் ரோஜா நிறங்களும் குறிக்கின்றன என்று பிரபஞ்ச அழகிப்போட்டியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.





தங்கம் உள்ளே
பணம் வெளியே



அதிகூடிய முற்பணம் குறைந்த வட்டி

தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது
உடனடியாகவே அதன் நன்மையை நாம் உங்களுக்கு வழங்குகின்றோம்.

செலான்
தங்க நகை
அடகுச் சேவை

தங்கப்பவுனுக்கான முற்பணம்
24 கரட் ரூ. 18,250/-
22 கரட் ரூ. 16,600/-

மேலதிக விபரங்களுக்கு:
தினேஸ்: 0772 092837, சசித்: 0773 815140

உங்களுக்கு அவசரமாக பணம் தேவைப்படும் போது
மிகவும் விரைவான தீர்வு செலான் அடகுச் சேவை மட்டுமே!

செலான் வங்கி

GRACE





HOTEL WESTEERN PVT LTD

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No.35, Frankfurt Place, Bambalapitiya,Colombo - 04.
T.P:+94 11 2507161, +94 11 2507163, +94 4518485
Fax:+94 11 4518481 E-mail:info@hotelwesteern.com
Website:www.hotelwesteern.com